www.tamilarangam.net

THAYAGAM

21 . 1 . 94

75¢

உண்மை:5
தேடல்:29

# தாயகம்

# இறம்பாவையில் பஸ்ஸில் குண்டு வெடித்தது பத்துப் பேர் பலி

## பூனகரித் தோல்விக்கு காரணமான இராணுவத்தினர் மீது நடவடிக்கை

## பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு ஆலோசனை சமர்ப்பிக்க புலிகளுக்கு கோரிக்கை

## கவலையீனமே காரணம் எனக் கண்டுபிடிப்பு

## இந்திய இராணுவத் தாக்குதலுக்கான கோரிக்கை நிராகரிப்பு

## தொண்டமான் தொடர்ந்தும் அரசுடன்! அநுராவுடன் சந்திப்பின் எதிரொலி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru
Niru

# தரத்தின் சின்னம்
# நிரு பிராண்ட்®
# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர் Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,
**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435

தாயகம்
'உண்மையைத் தேடி'

# பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு யோசனை சமர்ப்பிக்கும்படி புலிகளுக்கு கோரிக்கை

புதிதாக அமைக்கப்படும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி புலிகளிடம் பிரதமர் ரணில் கோரிக்கைவிடுத்திருக்கிறார். அக்குரஸ்ஸ பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய அவர் 'புலிகளுக்கு ஏற்கனவே பல சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டன, ஆனால் புலிகள் முன்வரவில்லை, இதுதான் அவர்களுக்கு கொடுக்கப்படும் கடைசி சந்தர்ப்பம் என்று ரணில் கூறியுள்ளார்.

பிரதமர் தலைமையிலான அரசியலமைப்பைத் திருத்துவதற்கான தெரிவுக்குழுவிற்கு பிரபாகரன் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கலாம் என்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். ஏற்கனவே பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்கும் கிழக்கும் இணைக்கப்படக் கூடாது என்று கூறிய தீர்வை ஏற்றுக் கொண்டு அதற்கு தகுந்தமாதிரி அரசியலமைப்பை மாற்றுவதற்காகவே புதிய தெரிவுக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் அரசியல் தீர்வு காண முயற்சிக்கவில்லை என்ற புலிகளின் குற்றச்சாட்டை மறுத்த ரணில் அரசாங்கம் அரசியல் தீர்வு மூலமாகவே சமாதானத்தை காண முயல்கிறது என்றார். வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு தொடர்ந்தும் உணவு அனுப்புவதில் இருந்தே அரசாங்கத்தின் நோக்கம் புரியும் என்றார் அவர்.

# இறம்பாவையில் பஸ்ஸில் குண்டுவெடிப்பு பத்துப் பேர் பலி

இறம்பாவைப் பகுதியில் பஸ் ஒன்றில் குண்டுவெடித்ததில் பத்துப் பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தக்குண்டுவெடிப்புக்கு புலிகளே பொறுப்பு என்று பொலிசார் தெரிவித்திருக்கின்றனர்.

இறம்பாவைப் பகுதியில் இராணுவ சோதனை முகாமில் நிறுத்தப்படுவதற்கு சற்று முன்பாக வெடித்த இந்தக் குண்டினால் சில உடல்கள் அறுபது அடி தூரம் வரை சென்று விழுந்தன. ஐந்து பேர் கடும் காயமடைந்ததுடன் 36 பேர் சிறுகாயங்கள் அடைந்தனர்.

புலிகளும் இராணுவமும் மோதிக் கொள்ளும் காட்டுப் பகுதிக்கு 12 மைல் தொலைவில் இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. திடீரென்று சத்தம் கேட்டது. பஸ்ஸிலிருந்து ஒரு தீக்கோளம் எழுந்தது என்று திலக் சமரதுங்க என்ற கடைக்காரர்

ம.ப.பா

# இந்திய ராணுவத் தாக்குதலுக்கான கோரிக்கை நிராகரிப்பு

இந்திய இராணுவத் தலையீட்டை கோரிய இலங்கையின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருப்பதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது. இவ்வருடம் தேர்தல் நடைபெறவிருப்பதால் அரசுக்கு உத்வேகம் கொடுக்கும் நோக்குடன் பிரபாகரனைப் பிடிக்க இந்திய கமாண்டோத் தாக்குதல் ஒன்றை வடக்கில் நடத்த வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கையை இந்தியா நிராகரித்திருக்கிறது.

வடக்கு கிழக்கில் தேர்தல் நடக்க இருப்பதால் இந்தியாவின் கமாண்டோத் தாக்குதல் ஒன்றை நடத்த இலங்கை சார்பில் விருப்பம் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறான தாக்குதல் வெற்றியளிக்கும் பட்சத்தில் அது இவ்வருடத் தேர்தல்களில் அரசு வெற்றி பெற வழிவகுக்கும் என்று கருதப்பட்டது. ஆனால் இந்தியா இது குறித்து தயக்கம் காட்டுகிறது.

இருப்பினும் தற்போது ஆரம்பித்திருக்கும் ராஜீவ் கொலை விசாரணைகளில் பிரபாகரனும் பொட்டம்மானும் குற்றவாளிகளாகக் காணப்படும் பட்சத்தில் உத்தியோகபூர்வமாக அவர்களை நாடு கடத்தும்படி இலங்கையைக் கோரக் கூடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இறம்பாவையில்..

தெரிவித்தார். இவரது கடையும் சேதமாகியுள்ளது.

ஐந்து வயதுக் குழந்தை ஒன்று இறந்து கிடந்ததை பத்திரிகையாளர்கள் கண்டனர். ஆறு பெண்கள், மூன்று ஆண்கள், ஒரு குழந்தை ஆகியோர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தனியார் பஸ்ஸான இது புல்மோட்டையிலிருந்து அனுராதபுரத்திற்கு சென்று கொண்டிருந்தது. பயணிகள் பெரும்பாலும் சிங்களவர்களே. புல்மோட்டை ஒரு சிங்கள மீன்பிடிக் கிராமமாகும். அங்கு இராணுவ முகாம்களும் உண்டு. அதில் பயணம் செய்த ஒருவரின் கருத்துப்படி குண்டு பஸ்ஸின் பின்புறம் சீட்டின் அடியில் வைக்கப்பட்டிருக்கிறது. தான் பஸ்ஸின் நடுப்பகுதியில் நின்றதாகவும் வெடித்த போது உடல்களை எல்லா இடமும் கண்டதாகவும் அதிகாரி ரணசிங்க என்ற உள்ளூராட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். காயமடைந்த இவர் இந்த பஸ்ஸில் கடமையில் இல்லாத பொலிசாரும் இராணுவத்தினரும் சென்று வருவதாக கூறிய போதும் குண்டுவெடிப்பின் போது அவர்கள் இருந்தார்களா என்பது தெரியவில்லை.

வவுனியா பகுதியில் தேர்தல் நடைபெறுவதைக்குழப்பும் நோக்கமே இது என்று பொலிசார் கூறினர்.

பல சோதனை முகாம்களில் பஸ் சோதனையிடப்படவில்லை, காரணம் சாரதி படையினருக்கு தெரிந்தவர் என்றும் கூறப்படுகிறது.

தற்போது வவுனியாவில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டதுடன் அன்னியர்கள் குறித்து அவதானமாயிருக்கும்படி கூறப்பட்டுள்ளது.

# தொண்டா தொடர்ந்தும் அரசுடன்

தொண்டமானும் அனுராவும் நிகழ்த்திய சந்திப்பு ஒன்றின் பின்னர் தான் தொடர்ந்தும் ஐ.தே.கவுடன் செயற்படுவதாக தொண்டா கூறியுள்ளார். அடுத்த ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல்களில் ஐ.தே.கட்சி வெற்றி பெற உதவ வேண்டும் என்று அனுரா கேட்டிருந்தார். தன் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையை தான் மோசம் செய்வதில்லை என்றும் பிரேமதாசவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத தீர்மானத்தின் போதும்தான் உதவி செய்ததாகவும் தான் ஐ.தே.கவுடன் இருந்தே தோட்டத் தொழிலாளரின் நன்மைக்காக உழைக்கப் போவதாக தெரிவித்திருக்கிறார்.

வெளிவந்து விட்டது
**இளையநிலா**
அனைத்து வீடியோ நிலையங்களிலும் கிடைக்கும்

# பூனகரித் தோல்விக்கு காரணம் கண்டுபிடிப்பு அதிகாரிகள் மீது நடவடிக்கை

பூனகரித் தாக்குதலில் இராணுவம் தோல்வியடைந்ததற்கு காரணமானவர்கள் என்று காணப்பட்ட இராணுவ அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு உத்தேசித்து வருகிறது. இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் விசாரணைகளின்படி ஒரு மேஜர் ஜெனரல், நான்கு பிரிகேடியர்கள், ஒரு கேணல், இரண்டு லெப்டினனட் கேணல்கள், பதினைந்து கப்டன்களும் லெப்டினன்ட்களும் கவனக்குறைவாக இருந்ததால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. நவம்பர் 11ம் திகதி நடைபெற்ற இந்த தாக்குதலில் பெருமளவு உயிர், ஆயுத இழப்புகள் ஏற்பட்டிருந்தன.

அங்கிருந்த ஆட்டிலறி துருப்புகள் புலிகள் தாக்கத் தொடங்கியதும் தங்கள் ஆயுதங்களை கைவிட்டு தப்பியோடி ஒளிந்து கொண்டதாகவும் பல தடவைகளில் திருப்பித் தாக்காமல் ஆயுதங்களைக் கைவிட்டு ஓடி ஒளிந்து கொண்டதாகவும் டாங்கித்துருப்புகளின் கமாண்டர் நள்ளிரவு தாக்குதல் ஆரம்பித்த பின்னரும் அதிகாலை ஒன்றரை மணி வரை தூக்கத்திலிருந்தார் என்றும் நீதிமன்றம் கண்டிருக்கிறது. அத்துடன் விமானப்படை விமானங்களால் புலிகளை எதிர்கொள்ள முடியவில்லை, மற்ற முகாம்கள் மீதான தாக்குதல் பயமுறுத்தல்கள் நிறைவேற்றப் படாததால் இது வெறுமனே தங்களை உசார் நிலையில் வைப்பதற்கான முயற்சி என்று கருதிய துருப்புகள் அது குறித்து கவனக்குறைவாக இருந்தார்கள், எனவே இராணுவத்தின் சகல மட்டங்களிலும் உள்ள கவனக்குறைவு காரணமாக இந்த முகாம் தோல்வியுற்றது, ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று பகுதிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை எதிர்கொள்ள எந்த திட்டமும் இருக்கவில்லை என்றும் விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த விசாரணை குறித்து சர்ச்சையும் எழுந்துள்ளது. இந்த விசாரணைக்கு பொறுப்பான மூன்று பிரிகேடியர்களும் அறிக்கையை வைத்தியரத்தின இளைப்பாறி நான்கு நாட்களின் பின்னர் அவரிடம் கையளித்திருக்கின்றனர். தற்போது இந்த அறிக்கை புதிய தளபதியிடம் அனுப்பப்பட்டிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழநாடு அலுவலகம் எரிப்பு

## வீடியோ நிலையம் தாக்கப்பட்டது

எமது பாரிஸ் நிருபர் பால.மகேந்திரன்

கடந்த வாரம் புதன்கிழமை இரவு பாரிஸ் ஈழநாடு பத்திரிகை அலுவலகம் தீக்கிரையானது. இச்சம்பவத்தினால் சுமார் இரண்டு லட்சம் பிராங்குகள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஈழநாடு தெரிவித்துள்ளது. நள்ளிரவு தொலைபேசியில் ஆசிரியருடன் பேசிய யாரோ தாம் ஈழநாடு அலுவலகத்தை கொழுத்தியதாக கூறியதை அடுத்து ஆசிரியரும் நிர்வாகியும் சென்று பார்த்த போது அங்கு அலுவலகம் தீக்கிரையாகிக் காணப்பட்டது.

இந்த தீமூட்டலிற்கு இனம் தெரியாத விசமிகளின் காட்டுமிராண்டித்தனமான சம்பவம் என ஈழநாடு வர்ணித்துள்ளது. ''எத்தனை இடர்கள் வந்தாலும் அது தன் இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்' என்று சாம்பல் மேட்டிலிருந்து மீணடும் ஈழநாடு என்று ஆசிரிய தலையங்கம் எழுதியுள்ளது. புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் ஈழ மக்களுக்கும் அவர்களது வெளிப்பாட்டு சாதனங்களுக்கும் தமிழ்ஈழ எதிரிகளால் எம்மிடையே உள்ள புல்லுருவிகளின் ஊடாக தொடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலே இது என திலகர் கூறியுள்ளார். புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் தேசிய தளத்தில் நின்று நடுநிலையுடன் எழுத முயற்சிக்கும் செய்திப் பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே இச்சம்பவம் உள்ளது, இச்சம்ப வத்தில் ஈடுபட்டவர்களுக்குப் பின்னால் வலிய கரம் ஒன்று நின்று இயக்குவதை உணர முடிகிறது' என்று திலகர் தனது செய்தியில் கூறியுள்ளார்.

ஈழகேசரி ஆசிரியர் ஈ.கே. ராஜகோபால் எழுதிய கட்டுரை ஒன்றில் பாரிசில் 12ம் திகதி இரவு ஈழநாடு ஆசிரியர் குகநாதனின் வீட்டில் நள்ளிரவு உரையாடிக் கொண்டிருந்த போது தொலைபேசி அழைப்பொன்று வந்ததாகவும் 'என்னவோ, மாத்தயா பிரபாகரனும், ஈழநாடு அலுவலகத்தை எரிச்சுப் போட்டம், போய் பார் என்று சொல்ருன், பேர் சொல்லவில்லை' என குகநாதன் தனக்கு கூறியதாகவும் குகநாதனின் மனைவி சந்தேகத்தில் தொலைபேசி எண்ணை அடித்த போது அது செயற்படாததால் சந்தேகப்பட்டு நிர்வாகி பாலச்சந்திரனுக்கு சொன்ன போது அனைவரும் சென்று பார்த்த போது அலுவலகம் எரிக்கப்பட்டுக் கிடந்த தாகவும் தெரிவித்திருக்கிருர்.

இச்சம்பவத்திற்கு துண்டுப 'பிரசுரம் மூலம் ரி.ஆர்.பி என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளது. முன்னர் அறிந்திராக இந்த அமைப்பு விடுத்த துண்டு பிரசுரத்தில் 'அண்ணல் காந்தி விரட்டிய வெள்ளையனை ஐரோப்பிய வல்லூறுகளின் கையாள் துரோகி பாலசிங்கத்துடன் இணைந்து மீண்டும் ஆசியக் கண்டத்துக்கு அழைத்து வர துணை போகும் பணியின் இன்னுமோர் அங்கம் தான் மாத்தயா கொலை, இக்கொலையையும் இலங்கை மற்றும் அரசுகளுடன் இணைந்து செய்த கொலைகளையும் ஆதரிக்கும் அனைவருக்கும் எச்சரிக்கையாக ஈழநாடு அலுவலகம் தீ வைக்கப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இசசமபவத்திற்கு முன்பாக புலிகள் சம்பந்தப்பட்ட ஒரு வன்முறை நடந்திருந்தது. புலிகளது பினுமி நிறுவனமாக அறியப்பட்டதும், "குட்டி இந்தியா" என வர்ணிக்கப்படும் லாச்சப்பல் பகுதியில் அமைந்துள்ளதுமான "லூன் இன்ரர்நாஷனல்" வீடியோ கிளப் சில வாரங்களின் முன்னர் தமிழ் வாலிபர்கள் சிலரால் பலத்த தாக்குதலுக்குள்ளானது. கடையின் கண்ணுடிகள் சுக்கு நூருகிய போதும், அடுத்தநாளே அவை திருத்தப்பட்டன. கடைப் பொறுப்பாளர் வெளியே இழுத்துத் தாக்கப்பட்டார். புலிகளின் பிரெஞ்சுக் கிளைப் பொறுப்பாளரான நாதன் என்பவரது கண்ணுடி உடைக்கப்பட்டது. பிரஸ்தாப தாக்குதல் தொடர்பாக எமக்குக் கிடைத்த தகவல்கள் வருமாறு....

சில வாரங்களின் முன்னர், பொறுப்பாளர் நாதனை லாச்சப்பல் வீதியில் கண்ட தமிழ் வாலிபர் ஒருவர், புலிகள் இயக்கதினரான தனது சகோதரர் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இது ஏன் எனவும் விளக்கம் கேட்டார். பொறுப்பாளர் பொறுப்பற்ற விதத்தில் விளக்கம் கொடுத்ததால் வாலிபரால் தாக்கப்பட்டார். சில நிமிடங்களின் பின்னர் வாலிபரைத் தாக்க புலிகளின் அதிரடிப்படையொன்று இரண்டு றைபிள்களுடன் வந்தது. துப்பாக்கிச் சூட்டில் பிரஸ்தாப வாலிபரின் கழுத்துப் பகுதியில் காயம் ஏற்பட்டபோதும், உயிராபத்து ஏற்படவில்லை, இதன் பின் வாலிபர் கூட்டமொன்று அதிரடிப்படையுடன் மோதி, இரண்டு றைபிள்களை பறித்தும், லூன் இன்ரர்நாஷனலைத் தாக்கி விட்டும் ஓடித்தப்பிவிட்டது. புலிகளினுல் பாதிப்படைந்துதப்பி வந்த வாலிபர்களே (இதனுள் புலிகளும் அடங்குவர்) பிரஸ்தாப சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. புலிகள் வாலிபர் மீது துப்பாக்கியால் சுட்டது அவர்களின் அராஜகத்தின் பிரதிபலிப்பு என்ற கருத்து பாரிஸ் தமிழர்கள் மத்தியில் காணப்படுகிறது. தஞ்சம் தந்த நாடொன்றில் எங்கள் ஆயுதக் கலாசாரத்தை இறக்குமதி செய்வது பற்றி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். "பயங்கரவாதக் குணம்சம்" கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்ப டுத்துவதில் பிரெஞ்சு அரசு உறுதியாகவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முனியின் பதில்கள்

முனிவரே! கிட்டுவைப்பற்றி நான் எழுதிய கவிதையை நீங்கள் தாயகத்தில் பிரசுரிக்காது விட்டீர்கள். அதையே நான் செந்தாமரைக்கு அனுப்பி பிரசுரிக்கச்செய்துவிட்டேன். இது எப்படி இருக்கு?

சம்பந்தன் மிஸிசாகுவா

தாயகத்தினுல் நிராகரிக்கப் படுபவைதான் (உயர் திணை-அஃறிணை) செந்தாமரைக்கு போகின்றன என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம் இது எப்படி இருக்கு.

மாத்தயாவுக்கு புலிகள் மரணதண்டனை வழங்க மாட்டார்கள் என்று நான் சொல்கிறேன் நீர் என்ன சொல்கிறீர் முனிவரே?

ராஜன், ரொரன்ரோ

ரகசியமாக மாத்தயாவை 'தட்டி' விட்டு நாமும் மாத்தயாவுக்கு மரண தண்டனை வழங்கக் கூடாது என்று தான் ஆலோசிப்படுகிறோம் என்ச் சொல்லக்கூடியவர்கள் புலிகள்.

எங்கே போகிறது எமது போராட்டம்?

ராஜன் ரொரன்ரோ

தமிழர் போராட்டம் ஒருகாலத்தில் ஆதார தேவையாக இருந்தது இப்போது ஆதாய தேவையாக மாறிவிட்டது.

யுத்தத்தை வெல்லப் போவதாக ஸ்ரீலங்காவின் புதிய தளபதி அறிவித்திருக்கும் போது பேச்சு வார்த்தைக்குத் தயார் என ஜனாதிபதி தெரிவிக்கிருர். எமது நாட்டின் அரசியல் போக்கைப் பார்த்தீரா?

சி.மோகன், ரொரன்ரோ

ஆனுல் இருவரையும் புலிகள் மகிழ்ச்சிப் படுத்தமாட்டார்கள்.

முஸ்லிம்களை யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டுவது சரி என்பவர்கள் நாளை மலையகத்தமிழர்களை சிங்களவர்கள் விரட்டும் நிலைவந்தால் அதையும் சரி என்பார்களா?

கருணு, வன்கூவர்

யாழ்ப்பாணிகளின் அரசியல் பார்வை விசித்திரமானது. யாழ்ப்பாண பகுதியில் சிங்களவர்கள் நிலம் வாங்க முடியாதபடி தடுக்கும்தேசவழமைச் சட்டத்தை ஏற்றுக்கொண்டே கொழும்பில் வீடு வாங்கும் புனித ஆத்மாக்கள் அல்லவா நாங்கள்.

மீண்டும் துப்பாக்கிச்சூடு என்று ஸ்காபரோ பகுதி அமளிப்படுகிறதே, முனிவா! இது எங்கே போய் முடியும்?

சிவா ஸ்காபரோ

ஒரு சமூகம் யுத்தத்தின் மத்தியில் வாழ்ந்துவிட்டு யுத்தத்தை வெறுத்து வெளியே வருகிறது. அதே யுத்தத்தை காரணம் காட்டி அகதியாகிறது. இப்படிப்பட்ட சமூகம் காட்டு மிராண்டிகள் போல தஞ்சம் தந்த இடத்தில் நடந்து கொள்ளும்போது "பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டதுகள் மாதிரியா இதுகள் இருக்குது?" என்ற சந்தேகம்தான் வருகிறது. சே.... இந்த வெட்கக்கேட்டை நிறுத்துவது எப்படி என்று யாராவது சொல்வார்களா?

நாட்டைவிட்டு அகதியாய் வந்து எத்தனையோ இடர்களுக்கும் மத்தியில் வாழும்தமிழ்ப் பெண்களை கொச்சைப்படுத்திப் பேசியும், கேலி செய்வதும் குரூர திருப்தி காணும் எமது ஆண்களைப் பற்றி உமது கருத்து என்ன?

சிவா ஸ்காபரோ

முன்பு ஒருமுறை ஒரு விழாமலரில் வேண்டுகோள் எனும் தலைப்பில் படித்துவிட்டு நான் மனதில் பதித்துவைத்த கவிதை ஒன்றை இதற்குப் பதிலாக தருவது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

பண்பான இளைஞர்களே
உங்களிடம்
ஒரு பணிவான வேண்டுகோள்
நீங்கள் வெளியே நடமாடும்போது
உங்கள்
"பெற்ரோல்" பார்வைகளை இந்த
சந்தன மரங்களிடம்
வீசாதீர்கள்
ஏனெனில் இவை
மௌனமாக
எரிந்து கொண்டுதான்
இருக்கின்றன

(இக்கவிதைக்கு பெற்ரோல் பார்வைகளும் சந்தன மரங்களும் எனப் தலைப்பிடப்பட்டிருக்கலாமோ...?)

உலகெங்கும் கம்யூனிசம் தத்துவம் தோல்வியுறுகிறதென்ருல் அதற்கு மாக்ஸின் தவருன கொள்கைகள்தானே காரணமாகும்?

விபுலானந்தன், கொழும்பு

எங்கோ மார்க்ஸிஸம்தோற்றதற்கு மார்க்ஸின் கொள்கைகள் காரணமில்லை. வேருேங்கோ மார்க்ஸின் கொள்கைகள் தோற்றதற்கு மார்கஸ் காரணமில்லை. சுருக்கமாக சொன்ஞல் மார்க்ஸ் மட்டும் தான் இன்று வாழவில்லை.

வீட்டிற்கு லேட்டாகவே வரும் எனது காதலிக்கு பிறந்தநாள் பரிசாக எதைக் கொடுக்கலாம் முனிவரே?

விக்கி ரொரன்ரோ

ஒரு ஜோக் சொல்லட்டுமா?

" Any idea what I can give



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

my girlfriend for her birthday,"
" Does she like you?"
" Of course she likes me..."
" Then, if she likes you she'll like anything"

முனிவரே நீர் காதலிக்கிறீரா?
சுந்தரம் மிசிசாக்கா

அடுப்பங் கரையை நாட விருப்பம் இல்லை அந்தப் பூனையாய் இருக்க ஆசை..

தென்னாபிரிக்காவில் ஏற்பட்டுவரும் குழப்பமும் பாலஸ்தீனியர்கள் செய்துவரும் குழப்பமும் ஈழத்தமிழர்களிடையே இருக்கும் குழப்பமும் ஒரே மாதிரியானவைதானே!
சதாசிவம் நியூயோர்க்

தென்னாபிரிக்காவுடனும், பாலஸ்தீனியர்களுடனும் எம்மினை ஒப்பிடமுடியாது. அவர்களது அரசில் தலைமை மிதவாதப்போக்குடையது. எமது அரசியல் தீவிரவாத போக்குடையது.

இந்தியப் படைக்கு உளவு சொன்னதால்தான் மாத்தயாவுக்கு புலிகள் இயக்கம் மரணதண்டனை கொடுக்கிறதாம் முனிவரே உண்மையா?
சதாசிவம் நியூயோர்க்

நான் காவது இராணுவத்தையே அடித்து விரட்டிய தலைவர்களில் ஒருவராம் பிரபாகரனோடு கொஞ்சநாள் கதைக்கவில்லையாம். அதனால் கிட்டு வருகையைப் பற்றி ரோவுக்கு அறிவிக்கிறாராம், அதுவரை பேசாமலிருந்த புலிகளின் உளவுப்படை திடீரென தமிழ்ப்படத்தில் வரும் போலீசுக்காரர்கள் போல எல்லாம் முடிந்ததும் வந்து அரஸ்ட் பண்ணுகிறார்களாம்.. நல்ல கதை ஐயா இது. எம் புலி மாமா கதை அம்புலி மாமா கதையை விட குழந்தைத்தனமாக இருக்கிறது.

சென்றவாரத் தாயகத்தில் கவிதையாம் தூ... என ஆனந்த் பிரசாத் சாடியிருக்கிறாரே...!
எஸ்.கே. மொன்றியால்

பிறர் ஈனநிலை கண்டு துள்ளும் ஒரு சில கவிஞர்களில் முதன்மையானவர் கவிஞர் ஆனந்த பிரசாத் என்பது எனது அபிப்பிராயம் ... சாத்தையா பிரசாத்தைய்யா...

முனிவரே என் அபிமான பாடகர் மனோ இப்போது அதிகம் பாடுவதில்லையே, ஏன்? சமீபத்தில் நீர் கேட்ட பாடல்களில் உமக்கு பிடித்த பாடல் எது என்று சொல்வீரா?
கிறிஸ்டினா, ரொறன்ரோ

உங்கள் கேள்விகள் இரண்டை ஒன்றாக்கியுள்ளேன். மனோ பாடி நான் சமீபத்தில் கேட்டு தினசரி முணுமுணுத்துத் திரியும் பாடல் எது தெரியுமா? மாப்பிள்ளை வந்தாச்சு... படத்தில் வரும் "முத்தாலம்மா முத்தாலம்மா..." என்ற பாட்டு.. கேட்டுப்பாருங்களேன்.. (இந்த முத்தழகி புத்தி கெட்டுப் போனாளம்மா...)


ஸ்காபரோவில் நவீன வசதிகளுடன் கூடிய

ஒரு மியூசிக் ஸ்டூடியோ

SPECTRUM REHERSAL STUDIO

★இசைக்குழுக்கள் ஒத்திகைகள் நடத்த சிறந்த தளம்
★நவீன மின்னணு ஒலிச் சாதனங்களுடன் கூடிய வசதியான ஸ்டூடியோ

விபரங்களுக்கு
SPECTRUM SOUNDS
சுந்தர் அல்லது ரவி
442 2668




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாவகச்சேரியில் குண்டுவீச்சு ஆயர் முறையீடு

சாவகச்சேரியில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் தேவாலயம் தாக்கப்பட்டதுடன் அருகில் உள்ள மிசன் இல்லமும் தாக்கப்பட்டது. கடந்த டிசம்பர் முப்பதாம் திகதி நடைபெற்ற தாக்குதலில் சாவகச்சேரி ஆலயத்தின் மீது ரொக்கட் தாக்குதல் நிகழ்ந்தது. அங்குள்ள குருவின் மனைவி இந்திராணி லோறன்ஸ் என்ற 46 வயதுப் பெண் கடும் காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு இறந்தார். அங்கு சென்றிருந்த ரேஸ்மேரி குணரத்தினம் என்ற பெண்ணும் கடும்காயமுற்றார். வெளியில் நின்ற பத்துப் பேர் கொல்லப்பட்டனர், ஆறு பேர் காயமடைந்தனர்.

இது குறித்து தென்னிந்திய திருச்சபையின் ஆயர் அம்பலவாணர் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளார்.

இதற்குள் சென்ற முறை யாழ்ப்பாணம் சென்று சர்ச்சைக்குள்ளான ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் செல்லவுள்ளார். பெப்ரவரி 5ம் திகதி விமானப்படை விமானத்தில் இவர் செல்லவிருக்கிறார். சுதந்திர தினத்தன்று இவர் செல்லவிரும்பிய போதும் அன்று விமான சேவை இல்லாததால் மறுநாள் இவர் செல்கிறார். இவர் கோரியதற் கிணங்க அரசு இவருக்கு நான்கு சீட்டுக்களை இலவசமாக கொடுத்துள்ளது. இம்முறை இவர் ஆலயங்களுக்கு மட்டுமே செல்வார். எவ்வித சமாதான முயற்சியும் இருக்காது என்றே கூறப்படுகிறது.

கத்தோலிக்க பேராயரான நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவும் தை 25ம் திகதி யாழ்ப்பாணம் செல்கிறார். இவர் அங்குள்ள ஆலயங்களைத் தரிசிப்பார்.

# பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு நட்டஈடு

ஈராக் யுத்தத்தின் போது பாதிப்படைந்தவர்களுக்கான நட்ட ஈடுகள் கொடுப்பது பற்றி ஐ.நா சபை ஆராய்ந்து வருகிறது. மொத்தம் 23 லட்சம் பேர் நட்ட ஈடு கோரியுள்ளனர். 78 நாடுகளிலிருந்து வந்த இக்கோரிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் பல பில்லியன்களாகும்.

ஐ.நா செயலாளர் நாயகம் 'இது முன்னெப்போது மில்லாதவாறு, சரித்திரத்தில் முதல் தடவையாக சர்வதேச சமூகம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நட்ட ஈடு வழங்குகிறது' என்று குறிப்பிட்டு ள்ளார். வெளிநாடுகளில் முடக்கப்பட்ட ஈராக்கின் சொத்துக்களைக் கொண்டு வருகின்ற ஏப்ரல் மாதம் இந்த கொடுப்பனவுகள் நிகழும். இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளில் யுத்தம் காரணமாக வேலை இழந்து அகதிகளாக வந்தவர்கள் நட்ட ஈடு பெற முடியும்.

குவைத் மட்டுமே தனது 700 எண்ணெய்க் கிணறுகள் எரிந்ததற்காக இருநூறு பில்லியன் டொலர்களைக் கோரியுள்ளது.

# புலிகளை அடக்க புதிய தளபதி முயற்சி

புலிகளை வெல்வதற்கு தான் இரண்டு வித அணுகுமுறைகளைக் கொண்டிருப்பதாகவும் குறுகிய காலத்தில் உடனடியாக தாக்குதல்களை ஆரம்பிப்பதும் நீண்ட காலத்தில் அரசியல் தலைமையுடன் சேர்ந்து திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதும் தனது திட்டம் என்றும் புதிய தளபதி தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு மன்னிப்பு அளிக்கும் திட்டத்தை புதிய தளபதி அமுல்படுத்துவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. யு.பி.ஐ நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் 'பொதுமன்னிப்பு அளிப்பது நல்ல திட்டம் தான், ஆனாலும் சிலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்' என்று அவர் தெரிவித்தார்.

தப்பியோடிய பலர் குற்ற அமைப்புகளுடன் இணைந்துள்ள துடன் பலர் கொள்ளைகள், கொலைகளிலும் சம்பந்தப்பட்டி ருக்கின்றனர். நாடு முழுவதும் பொலிஸ் நிலையங்களுக்கு தப்பியோடியவர்களின் படங்கள் அனுப்பப்பட்டதுடன் அவர்களை கைது செய்யும்படியும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

# இந்தியாவில் சாதிக்கலவரம்
## பல்கலைக்கழகப் பெயர் சூட்டலின் விளைவு

மகாராஷ்டிரா மாநிலத்தில் பல்கலைக்கழகம் ஒன்றுக்கு பெயர் சூட்டும் விடயத்தினால் ஏற்பட்ட கலவரத்தில் இருவர் கொல்லப்பட்டி ருக்கிறார்கள். மரத்வாடா பல்கலைக் கழகத்திற்கு டாக்டர் அம்பேத்காரின் பெயர் சூட்டுவதற்கு சிவசேனை எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. அப்பகுதியில் அரிஜன மக்கள் இருபது வீதம் இருப்பதாகக் கூறி சிவசேனை இந்தமுடிவை எதிர்த்திருந்தது. இதன் பின்னர் உயர்சாதி இந்துக்கள் அரிசன மக்களின் வீடுகளை எரித்த போது பொலிசார் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டனர். குன்ஜ் என்ற கிராமத்தில் வீடுகள் எரிக்கப்பட்டன. வேறிடங்களில் கடைகள், அரச கட்டடங்கள், வாகனங்கள் என்பன எரிக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு தலைமைதாங்க முன்வந்த சிவசேனை பால் தக்கரே அங்கு வந்த போது பொலிசார் அவரை தடுத்து விட்டனர். அவர் தற்போது பம்பாய் திரும்பியிருக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழுங் கலை

சிவதாசனின்

நிகழ்வின் ஏற்றுக்கொள்ளல் (Accepting the situation) என்பது வாழ்வியலின் ஒரு முக்கியமான அம்சம். சூழலின் நிகழ்வுகளினுல் வாழ்வியல் இலக்கணங்கள் நிர்ணயிக்கப்படும் போது எல்லைகள் புதிய பரிமாணங்களுக்கு நகர்த்தப்படுகின்ற. இந்த நகர்த்தப்படுதல் (Shifting) ஒருவகையில் சார்பியக்கமாக வரையறை கொள்கிறது.

பரிணும வளர்ச்சியின் அடிப்படை மூலாதாரம் பிரச்சினைகளுக்கான பரிகாரம் தேடல் (problem solving) என்ற செயன்முறையிலிருந்து தான் பெறப்படுகிறது. இந்தப் பரிகாரம் தேடலின் முனைவாக காலத்தால் பரிசோதிக்கப்பட்ட பல வாழ்வியல் இலக்கண நியதிகள் கூட சிலவேளைகளில் நகர்த்தப்பட்டு புதிய இலக்கணங்கள் உருவாகுவதற்கு இடம் கொடுக்கப் பட வேண்டியதாகிறது.

புதிய இடம் புதிய சூழல் புதிய வாழ்முறை என்று நாங்கள் நகர்த்தப்பட்டுள்ள இந்தக் காலங்களில் மாற்றங்கள் அனுசரிக்கப்பட்டு நிகழ்வினை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் நமது விருப்புகளினுல் நம்மிடமே திணிக்கப்படுகிறது.

எந்த சடப்பொருளுக்கும் தனக்கேயுரித்தான குணவியல கொள்ளளவு (Character Capacity) இருப்பது போல, உயிரினங்ளுக்கும் அது இருக்கவேண்டும் என்று அனுமானம் செய்து கொண்டால், இந்த நிகழ்வினை ஏற்றுக் கொள்ளல் கூட எங்கள் கொள்ளவுக்கமையத்தான் இடம் பெற முடியும். அப்படியானுல் (புதிய) மாற்றங்களை உள்வாங்கும் போது மாருத கொள்ளளவைக் கணக்கிலெடுப்பின் பழையன சிலவற்றைக் கழற்றிக் கொள்வது நிர்பந்தமாகிறது. தமிழர் மட்டுமல்ல எந்த இனங்களும் தங்கள் பாரம்பரிய கலாச்சார அனுசரிப்புகளில் பலவற்றை இந்த மாதிரியான நகர்த்தல் செயற்பாடுகளின் போது இழந்து கொண்டேயாக வேண்டும். கம்ப்யூட்டர் தரவு வங்கிகளில் (Databanks) பழைய தரவுகளில் தேவையற்றவற்றை அகற்ருது விட்டால் (Purge) புதிய தரவுகளுக்கு இடமில்லாது போவது வழக்கம். இருக்கிற கொள்ளளவுக்கேற்ற வகையில் நிகழ்வினை ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவை இங்கு ஏற்படுகிறது. அதே வகையில் நாங்களும் புதிய உலகத்துக்காய் புதிய வாழவுமுறைககாய நிகழவினை ஏற்றுக் கொள்ளப் பழகாவிடில் நிரந்தரமான குணவியல்பு மாற்றங்களுக்கு உள்ளாக நேரிடும்.

பல புகலிடத்து நடைமுறைகளில் கொள்ளவின் பரிமாணங்களைச் சரியாக கருத்திலெடுக்காது பழையதுகளையும் விடாது புதியதுகளையும் உள்வாங்கி வீங்கி வெடித்து சூழலின் கைதியாகிச் சுயத்தையே இழந்துகொள்வதைக் கண்டிக்கிரேம். அமுக்கப்பட்ட வாயுவுக்கு எப்படி உஷ்ணம் அதிகரிக்கிறதோ அதுபோல குடும்ப சமூக உறவுகளிலும் இப்படி வீங்கியதாலான அமுக்கங்கள் விரும்பதகாத விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

இந்த நிகழ்வினை ஏற்றுக் கொள்ளல் என்பது ஒருவகையில் தன் கொள்ளளவை உணர்ந்து அதற்கேற்றுப்போல் வாழ்வை சீரணிக்கச் செய்யும் ஒரு நடைமுறை. வெள்ளையனின் நாட்டில் இனவெறியர் இருக்கத் தான் செய்வார்கள். இதற்கெல்லாம் மனம் கொதித்து வெகுண்டெழுந்து வீரம் காட்டிடுவதில் பலன் ஏதுமில்லை. சிங்கள நாட்டில் தரப்படுத்தல் கொண்டு வரப்பட்டது ஒரு வகையில் (Affirmative action) தேவைப்பட்டது தான். அதை விரும்பாது ஆயுதம் தூக்கிய நாங்கள், புகலிடங்களில் அரசுகள் நடைமுறைப்படுத்தும் சமசந்தர்ப்ப (Equal Opportunity) செயன்முறைகளை ஆதரிக்கிரேம் எழுபதுகளில் எங்கள் நாட்டு நிகழ்வுகளை ஏற்றுக் கொள்ளாது விட்டதனுல் நிரந்தர பாதிப்புக்குள்ளாகியது நாங்களேதான் இது மாதிரி நிகழ்வுகள் ஏராளம்.

இந்த நிகழ்வினை ஏற்றுக் கொள்ளல் என்பது ஒருவகையில் எல்லாம் நன்மைக்கே என்ற . (Positive approach) முன்னேடியான அணுகுமுறை. எந்தச் சூழலிலும் வாழ்வு தொடரப் படவேண்டும் என்ற (Positive logic) முன்னேக்கான தர்க்கம் தான் உயிரினங்களை இவ்வுலகத்தில் இன்னும் தக்கவைத்துக் கொள்ள உதவுகிறது கரப்பான் பூச்சி இனம் மில்லியன் வருடங்களாகவும் அழியாது வேண்டிய இடத்தில் ஒளித்து வெளிவரவேண்டிய நேரத்தில் வெளிவந்து வாழ்வில் வளைந்து நெளிந்து சுற்றிச் சுழன்று சூழலின் தாளத்துக்கும் தப்பாது நடனமாடுவது கூட ஒரு கலை. அவசியமான கலை. வாழுங் கலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சோதிடத்தின் மூலகர்த்தா- மேலைத்தேசமா? இந்துக்களா?

சிவப்பிரகாசம்

Fools obey planets wise men control them "என்பர். வான மண்டலத்தில் சஞ்சரிக்கும் கிரகங்கள் மனித வாழ்வில் மாற்றங்களைக் கொண்டுவருமா? ஆம் என்கிறது சோதிடம். இல்லை என்கிறார்கள் பகுத்தறிவுவாதிகள். எண்ணற உபகரணங்களைக் கொண்டு விஞ்ஞானிகள் கணித்து சொன்னால் மட்டுமே எதையும் நம்பத் தயாராக இருக்கும் தற்காலத்தில் காட்டுக்குள்ளே கௌபீனத்துடன் திரியும் முனிவர்களோ (அல்லது ஆய்வு வசதிகள் இல்லாத நிலையில் அக்கால மேதைகளோ) எழுதிவைத்ததை நம்புவது அறிவீனமாகத் தெரியும். அது மருத்துவமோ (medical science) சோதிடமோ (Astrology ) தத்துவமோ (philosophy) ஆத்மீகமோ எதுவானாலும் இந்தச் சந்தேகம் நியாயமானது. ஆனால் எவருமே இரு தரப்பு நியாயங்களையும் சீர்தூக்கிப் பார்க்காததுதான் நியாயம் அற்றது.

சோதிடத்தின் அடிப்படை முற்றுமுழுவதுமாக வானசாஸ்த்திரத்தில் (Astronomy) தங்கியுள்ளது. கிறிஸ்துவுக்கு முன்னதாக எழுதப்பட்டதாக கருதப் படும் புராண இதிகாசங்களில் (Hindu Epics) வானசாஸ்திரமும் சோதிடமும் இடம்பெற்றுள்ளதை விஞ்ஞான மூலம் (புதைபொருள் அகழ்வு) நிரூபிக்ககூடியதாக உள்ளது. மிகத் தொன்மையானதாக கருதப்படும் இந்து மதங்களில் சோதிடம் நேத்திரம் (கண்) என கூறப்படும். அந்தக் காலம் முதல் இந்து மதத்தில் மதக்கருமங்கள் குறிக்கப்பட்ட வேளையிலேயே செய்யப்பட வேண்டிய முக்கியம் வலியுறுத்தப்படுகிறது. உலகம் உருண்டை யென்றும் சூரியன் சுற்றுமல் இருக்க பூமிதான் சூரியனை சுற்றுகிறதென்றும் எப்போதோ இந்துக்கள் எழுதியுள்ளார்கள் என மேற்கு நாடுகள் அறிந்திருப்பினும் அதை மெச்சுவதில்லை. இந்துக்கள் உலகத்தினதும் மனித இனத்தினதும் தோற்றம் கிரகங்களின் சூழற்நிலைகள் பற்றி மிதத் துல்லியமாக கணித்து வைத்துள்ளார்கள். அக்கணிப்பு விஞ்ஞானத்துடன் மிக நெருங்கியுள்ளது பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். இந்துக்கள் மத்தியில் இவ்வாறான கண்டு பிடிப்புகள் ஆதிகாலத்திலேயே இருந்ததை ஒப்புக்கொள்ள விரும்பாத பலர் கிரேக்க ஆய்வுகளை இந்து சோதிடம் கபளீகரம் செய்துவிட்டதாக நிருபிக்க முயல்கின்றனர் எமது சோதிட நூல்களின் படி உலகத்துக்கு (universe) ஆரம்ப முடிவு இல்லை. சேதன அசேதனங் களுக்கும் உயிரினங்க ளுக்கும்அவ்வப்போ தோற்றம் அழிவு எண்டு. அதாவது குறிப்பிட்ட காலங்களில் பிரளயங்களில் உலகம் மூழ்கி இருக்கும். குறிப்பிட்ட காலங்களில் உலகம் இயங்கும். பிரளய காலங்களில் உயிரினம் முற்றாக அழியுமா என்பது பற்றி கருத்து தெளிவின்மை காணப்படுகிறது. கடைசியாக ஏற்பட்ட பிரளயத்தின் பின் 120533094 (120million) வருடம் முடிந்துவிட்டது. இந்த ஆண்டுத் தொகையை பார்த்தவுடன் பொய்யாகத்தான் இருக்குமென நாம் முடிவெடுத்து விடுகிறோம். ஆனால் இதே இந்து சோதிடம் அன்று கணித்தவை எப்படி விஞ்ஞானத்துடன் நெருங்கியுள்ளது என்பதை பார்ப்போம்.

விஞ்ஞானிகள் கூற்றுப்படி செவ்வாயின் சுழற்சி 686 979702 நாட்கள். ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே சோதிட சித்தாங்களில் செவ்வாயின் சுழற்சி 686,99749 நாட்கள் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. செவ்வாய் மட்டுமல்ல மற்றக்கிரகங்களை ஒப்பிட்டுப் பாருங்கள். புதனின் சுழற்சி விஞ்ஞானப்படி 87.969256 நாட்கள் சோதிடப்படி 87. 969702 வியாழனின் சுழற்சி விஞ்ஞானப்படி 4332.58479 நாட்கள் (சோதிடப்படி 4332. 3206 நாட்கள் வெள்ளியின் சுழற்சி விஞ்ஞானப்படி 224. 700798 நாட்கள் சோதிடப்படி 224.698568 நாட்கள் சனியின் சுழற்சி விஞ்ஞானப்படி 10759. 2010 நாட்கள் சோதிடப்படி 10765.7730 நாட்கள்) சனி தவிர்ந்த மற்றயை கிரகங்கள் இந்திய சோதிடப்படியும் விஞ்ஞானப்படியும் அருகி

கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,
அலங்காரப் பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள
ராஜி 796 2672

Net, Colorful Flower Bouquet, Flower Basket



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு, மரக்கறி வகைகள் அனைத்தும்
மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

# துர்க்காஸ் சுப்பர்மார்க்கட்

## Tel:297 9444

## விசேட மலிவு விற்பனை

மிளகாய்த்தூள் 3.29/450 கி
6.99/900 கி

| | 5 கிலோ | 1 கிலோ |
|---|---|---|
| சம்பா அரிசி | 6.99 | 1.49 |
| குத்தரிசி | 6.99 | 1.49 |
| அரிசிமா | 6.99 | 1.49 |

மைசூர் பருப்பு, உழுத்தம்பருப்பு,
துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு
1 கிலோ $ 1.59
2 கிலோ $ 2.99

## THURKAS SUPERMARKET

*4080 Sheppard ave E (Kennedy/Sheppard)*

சீனி 1.39/2 கிலோ
பால் 2% $2.99
முட்டை(12) $1.39
5 றேசஸ் மா $10.99
சவர்க்காரம் .39

மற்றும் ஆட்டிறைச்சி, கோழி,
கோழிக்கால், ஈரல், கிட்னி,
மரக்கறி வகைகள்,
பழவகைகள் அனைத்தும்
மலிவு விலையில்...




# ATLANTIC AUTO CLINIC LTD

## 1960 LAWRENCE AVE EAST

**Car Certification**
**29.99**

## 755 8550
**CALL**
**MIKE or RAJAN**

Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

**We use Quaker State Oil**



www.tamilarangam.net

உள்ளதல்லவா? கிரகணங்கள் எப்போ ஏற்படும் எங்கே தெரியும் என்ற விபரமும் விஞ்ஞானத்துக்கு முன்னர் இந்துக்கள் அறிந்துள்ளனர். விஞ்ஞானத்தின்படியான கிரகணக் கணிப்புகளும் சோதிடரீதியான கிரகணக் கணிப்புகளும் ஒருசில நிமிடங்களே வித்தியாசமாக இருப்பதுகூட ஆச்சரியமல்லவா?

கிரேக்க கணிப்புகளும் சீனரின் கணிப்புகளும் அராபிய கணிப்புகளும் இந்துக் கணிப்புகளுடன் பல விதத்தில் ஒத்திருப்பதால் இந்தியர்கள் கிரேக்கரிடம் இருந்துதான் இவற்றை பெற்றிருக்கவேண்டும் என பல மேலைத்தேச எழுத்தாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். கிரேக்கரிடம் இருந்து பெறமுடியாத விஷயங்களை அராபியர், சீனரிடம் இருந்து பெற்றிருக்கலாம் எனவும் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் மற்றவர்கள் எல்லாம் ஏன் இந்துக்களிடம் இருந்து இவ்விஷயங்களை பெற்றிருக்க முடியாது என்பதை அந்த மேலைத்தேசத்தவர் சிந்திக்க மறுக்கிறார்கள். பிற்காலத்தில் ptolemy போன்ற கிரேக்க விஞ்ஞானிகள் பல நுட்பமான வானசாஸ்திர ஆய்வுகளை செய்தனர். என்பது உண்மைதான், அதனால் எல்லோரும் கிரேக்கரிடம் இருந்துதான் இவற்றைப் படித்தறிந்தார்கள் என்ன நியாயம்?

மேலைத்தேச- கீழைத்தேச- -மத்திய கிழக்கு நாடுகளில் வழங்கப்படும் சோதிட (அல்லது வானசாஸ்திரி) முறைகளில் பல பொதுவான அம்சங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. கிரகங்களின் பெயர்கள் கிழமை நாட்களுக்கும் அதே ஒழுங்கில் கொடுக்கப்பட்டுள்ளது. 12 இராசிகளும் 27 நட்சத்திரங்களும் (ஆதிவேதங்களில் அபிஜித்து என மேலதிக நட்சத்திரம் ஒன்று குறிக்கப் பட்டுள்ளது) அடங்கியிருப்பது, அந்தப் 12 இராசிகளுக்கும் ஒரே பெயர்கள் வழங்கப்படுவது. இவை போன்று பல. கிறிஸ்துக்கு முன்னதாக எழுதப்பட்டாதாக கருதப்படும் இந்து சோதிட நூல்களில் பல நுட்பமான கணிதங்கள் ஏற்கனவே இருந்தமைக்கு சான்று காணப்படுகிறது. கிறிஸ்துக்கு முன் நடைபெற்றதாக கருதப்படும் சரித்திர சம்பவங்களிலும் அதற்கான விளக்கங்கள் காணப்படுகிறது. ஆனால் கி.பி 5000 ம் ஆண்டளவில் எழுதப்பட்ட நூல்களே இன்றைய சோதிட கணிப்புக்கு அத்திவார மானது என்பது உண்மை. அந்த சில நூல்களில் paulus Alexandrius என்ற கிரேக்க வானசாஸ்திரியின் சில கணிப்ப,கள் "பௌலிச சித்தாந்தம்" என சேர்க்கப்பட்டுள்ளதும் உண்மை. சில இன்றைய வழக்கில் உள்ள சோதிடச் சொற்கள் கிரேக்க தழுவலாய் இருப்பதற்கு அதுவே காரணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி இரத்தினகோபால் தனலட்சுமி

**திருமதி தனலட்சுமி இரத்தினகோபால் 15.1.1994 அன்று சனிக்கிழமை இலங்கையில் காலமானார்.**

**இவர் காலம் சென்ற திரு.திருமதி நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலம் சென்ற இரத்தினகோபாலின் (Ex.Supdt of Arsleena Estate, Ginikothona) (C.E.O- Milkwhite) அன்பு மனைவியும் பாக்கியலீலா (இலங்கை) தவகோபால் (இலங்கை) ராசகோபால் (இலங்கை) கமலாம்பிகை (நோர்வே) நந்தகோபால் (இலங்கை) சிவகோபால் (கனடா) விஜயகோபால் (இலங்கை) யோகராணி (கனடா) நந்தினி (இலங்கை) பிரேமலதா (ஜேர்மனி) ராஜினி (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வில்வராஜா (இலங்கை வங்கி, கொழும்பு) தேவராணி (இலங்கை) ஞானேஸ்வரி(இலங்கை), தட்சணாமூர்த்தி(நோர்வே), சந்திராதேவி (இலங்கை), கௌரி(கனடா), சரஸ்சந்திரன்(கனடா), கண்ணதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனகராஜா(மில்க்வைட் தொழிலதிபர்), லோகநாதன், வவநாதன், தனலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் நாகம்மா, இந்திரா, புவனேஸ்வரி, நாகரெட்னம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் சசிகரன், விஜிதரன், சக்தி, காயத்திரி, சுகிதரன், ஹரிப்பிரியா, கிருஷ்ணப்பிரியா, கார்த்தீபன், சாருஜன், கிருபாலினி, ஜெனனி, சயந்தினி, ரமணன், ரேகா, கிருசாந்தி, திசான், சரணியா, சரசாங்கி, நிபர்ணு ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவர்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

**தொடர்புகளுக்கு**
**(416) 431 9775**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவன் ஏதோ நினைத்தான்



அருண்

படலே தட்டப்படும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்து கொண்டேன். பங்கருக்குள் இருக்கும் எனக்கு படலே பலமாகத் தட்டப்படும் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. செவிப்பறையை இழுத்து விரித்துக் கேட்டேன். ஓம் படலே தட்டிக் கேக்குது தான். கண்ணை ஒருமுறை இறுக மூடித் திறந்து பார்த்தேன். முன்னால் சின்னச் சின்ன குமிழ் விளக்குகள் மின்னி மின்னி ஓடிக்கொண்டிருந்தது. கதவு நிலையின் ஒரு பக்கம் 'சீ என்' கோபுரமும் மறுபக்கம் நையாகரா நீர்வீழ்ச்சியும் தொங்கிக் கொண்டிருந்தன. திறந்திருந்த அறைக் கதவுக்கு அப்பால் 'லிவ்விங் றூம் எனும் வெளியில் நிற நிறக் குமிழ்கள் காய்த்த சின்னச் சவுக்கு மரமும் அதற்குக் கீழ் "சந்ரா" வைததுவிட்டுப போன உறை போடப்பட்ட வெறும் பெட்டிகளும் கிடந்தன.- ஓ நான் கனடாவிலே இருக்கிறன்.

வெளிக் கதவு மீண்டும் கட்டப்பட்டது. நேரத்தைப் பார்த்தேன். 6-32 பக்கத்துக் கட்டிலில் மல்லாந்து கிடக்கும் குஞ அண்ணர் பிளந்து கிடக்கும் வாயால் காற்றை இழுத்து ஊதிக்கொண்டிருந்தார்.

அட வசி ஆறரைக்கு வாறன், வெளிக்கிட்டு நில் எண்டெல்லோ சொன்னவன்- பொறி தட்டியது.

மீண்டும் தட்டப்படமுன் கட்டிலிருந்து பாய்ந்து ஓடிப்போய் கதவைத் திறந்து விட்டேன்.

'அருண் நீ என்னும் வெளிக்கிடேலேயே? சொன்னால் சொன்ன நேரத்துக்கு நிக்கிற நீயே..'

'இல்லே மச்சான் 'மிதுனம்' படம் பாத்தனுங்கள். படுக்க ரெண்டு மணியாச்சு. எலாம் வைச்சனான் அதுவும் அடிக்கேலே. பீ.எம் இலே விட்டிட்டன் போல கிடக்குது. பின்னேரம் தான் அடிக்கும்"

வா வந்திரு படாரெண்டு வாறன்"

"சப்பாத்துக் கழட்ட வேணுமே?"

"சீச்சீ கழட்டினால் தான் கோவிப்பம்."

"உடன வெளிக்கிட்டு வா. நேரமாச்சுது"

கதிரை போன்ற ஒன்றிலே வசிகரன் அமர்ந்து கொண்டான்.

'பஸ் நம்பர் பீட் பண்ணியிருக்கு. அடிச்சுக் கேள். அடுத்த பஸ் எப்ப எண்டு' சொல்லிக் கொண்டே நான் கழுவல் அறையுள் புகுந்து கொண்டேன்.

பறிப்பவற்றை பதித்துவிட்டு, பைப்பைத் திறந்தால் ஐஸ் தண்ணீர்தான் வந்தது. வீட்டுக்காரர் மேலே இருக்கக்கூடியதாய் நிலத்துக்குக் கீழே ஒருக்காலும் குடியிருக்கக்கூடாது. இந்தப் பயங்கரக் குளிர் காலத்திலே பொயிலரை நிப்பாட்டிப் போட்டினம். வீட்டுக்கார மோகனதாசை திட்டிப்போட்டு பல்லுக்கு பசையைப்பூசி முகத்துக்கு ஒருவாறு பல்லைக் கடித்துக் கொண்டு தண்ணி காட்டிவிட்டு உடுப்புக்குள் புகுந்து சப்பாத்துக்குள் புதைத்து உறை குளிர் வெளியினுள் சஞ்சரிப்பதற்கான வீர ஆயத்தங்களைச் செய்து கொண்டேன்.

' சாமி கும்பிடேலையோ'

'கடவுளிலே கூடுதலான நம்பிக்கை இருக்கிறதாலே கும்பிடிறதில்லே, என்னை மறந்திடுவாரோ எண்டு அம்மிச்சப்பட்டாத்தானே அடிக்கடி கும்பிடி வேண்டி இருக்கும். ஞாபகப் படுத்துறதுக்கு" புன்முறுவலுடன் தொடர்கிறேன்.

"வா இறங்குவம்"

"இறங்குவமோ?" வசி

"ஏறுவம்". இருவரும் ஏக காலத்தில் சிரித்துக் கொண்டே வெளியில வந்தால் அதிகுளிராக்கி அறைக்குள் நுழைந்தது போன்று குளிர் நிலமெல்லாம் மூடி உறை பனி வியாபித்துக் கிடந்தது.

உறை பனியுள் புதைந்து நகர்ந்தோம்

"அடுத்த பஸ் 3 நிமிசத்திலேயும் அதற்கடுத்தது 28 நிமிசத்திலேயும் வருமாம், மூண்டு நிமிசத்திலே பஸ் ஸ்ராண்டுக்கு போயிடுவமே?" வசி கேட்டான்.

"கஸ்டம் தான் எதுக்கும் கெதியாய் போய்ப்பாப்பம், பஸ் சில வேளை லேற்ருயும் வரும்." நான் பேருந்துத் தரிப்புக்கு வந்து விட்டோம் பெரு வெளி சூழ்ந்த ஒரு தெரு முனையில் தங்கிடக் கூடாரமோ தாவாரமோ இல்லாது தன்னந் தனியனாய் தனித்து நிற்கும் ஒரு தரிப்புக் கம்பத்தை காவல் காப்பது போல அவ் அகால வேளையில் நாங்கள் இருவர் மட்டுந்த தான் பேருந்துக்காகத் காத்து நிற்கிறோம்- தாமதித்தே வரும் என எதிர்பார்த்த பேருந்து வேளைக்கு முன்பே இக் கம்பத்தை கடந்து சென்றிருக்கலாம்,

"என்ன வசி பேசாமலே வாறீர் என்ன கடும் யோசினை" மௌனத்தை முறித்தது நான். ஏதோ சிந்தனையிலிருந்த வசி எச்சிலை விழுங்கியபடி "இல்லே உமக்கு ஒரு விசயம் சொலலவேண்டுமென்று நினைச்சனான் அது தான் எப்பிடித் தொடங்கிறதெண்டு....."

"தொடங்கிறதுக்கு என்ன சொல்லா தேடுறீர்? 'அருண்' எண்டு தொடங்குமன்....."

வசி சிரித்துக்கொண்டே 'பகிடிய விடுகிறீர்....

நான் சொல்லப் போறது ஒரு சீரியசான விசயம் இதை உமக்கு சொல்ல வேண்டுமென்றதற்காகவே முக்கியமா உம்மை இண்டைக்கு என்னோடை வரக் கூப்பிட்டது."

இவ்வேளையில் தமிழ் (?) தூசணப் பேச்சு வார்த்தைகள் அண்மித்துக் கேட்டன. எங்கள் சம்பாசனை தடைபட்டது.

"நான் பிறகு சப்-வேயிலே போகேக்கிலே விசயத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லுறேனே..." வசி மௌனத்தைத் தொடக்கி வைத்தான்.

மூன்று தமிழ் உருவங்கள் எங்களை நோக்கி எங்களை அல்ல, பேருந்து தரிப்பை என்று தான் நினைக்கிறேன். அசைந்து கொண்டன. அவற்றில் இரண்டு தரையில் படிந்து இருக்கும் உறை பனியை அள்ளி ஒன்று மற்றதின் உடுப்புக்குள் போடுவதற்கு போராடிக் கொண்டன. ஒரு உருவம் எதையும் சாட்டை செய்யாமல் முன்னேறிக் கொண்டிருந்தது. அது ஆடி ஓய்ந்த பம்பரமாயிருக்க வேண்டும்.

இவற்றின் குரங்குச் சேட்டைகளைப் பார்க்க எனக்கு சூழல் நிலமை இடந்தரவில்லை. கோடையில் புல் வெளியாய் காட்சி தந்த அந்த சூழலில் பனி பரவி விழுந்து உறைந்து காணப்பட்டது. 'ஊ' எனக்கடுங்காற்று கடுகதியாய் ஓடிக் கொண்டிருந்தது. ஏற்கனவே கடும் குளிர். ஒரு வெளியில் கடும் குளிர் காற்றென்றால் சொல்லவும் வேண்டுமா காதுகள் மூக்கு ஏற்கனவே காணமல் போய்விட்டன. முகத்தில் ஏதோ தடித்த படை வளர்ந்தது போன்ற உணர்வு. தடவிப் பார்த்தால் ஐஸ் வழிந்து உறைந்து கொண்டது கால்கள் கடுக்க நிற்கிறோம் கை கால்கள் எல்லாம் விறைத்து விரல்களில் 'நகச்சுத்து' வந்தது போல் விரல்கள் குத்து வேதனையுடன் எரிவு தருகிறது. எலும்புகளையும் ஊடுருவி உள்ளாக குளிர் ஆளுகிறது. பேருந்தோ வரவில்லை. மூன்று உருவங்கள் மட்டும் வந்து தரித்தன குப்பென்று வெங்காயமும் பொரித்த எண்ணெயின் மணமும் எனது விறைத்த மூக்கையும் உசுப்பியது. எனது ஜக்கற்றை ஒருக்கால மறந்து பார்க்கிறேன். – அப்படி மோசமில்லை. பார்வையை வசியிடம் நகர்த்தினேன். அவன் "சும்மா" நின்றான் என்னைச் சலனப்படுத்திய அதுவும் அவனை உசுப்பவில்லை ஏதோ சிந்தனையில் இருந்தான் எனக்குச் சொல்ல வேண்டியதை ஒத்திகை செய்து கொண்டிருப்பான் எண்டு நினைக்கிறன். அவன் என்ன சொல்லப் போறான்? எனக்குள் ஆவல் ஆக்கிரமித்தாலும் இக் கடும் குளிரின் அதிரடித்தாக்குதலால் ஆவல் வெற்றிகரமாகப் பின்வாங்கப்பட்டது.

இனிமேலும் என்னால் தாங்க முடியுமோ என்று எனக்குத் தெரியவில்லை. "வீட்டுக்கு திரும்பி ஓடிவிடுவமோ" என்றும் நினைத்தேன் கண்ணீர்கூட உதிர்ந்தது.-இந்தக் குளிரால்.

அந்த மும்மூர்த்திகளும் அடங்கி ஒடுங்கி நின்றனர்- குளிரை உணரக்கூடிய மனிதர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் போல் விளங்கியது.

வசி எதுக்கும் அசையவில்லை- அவன் போட்டுவந்திருந்த உடுப்புகள் சப்பாத்துகளில் எனக்கு அபிமானம் வரத்தொடங்கியது. எனது உடுப்புகள் சப்பாத்துகளை நோட்டம் விட்டேன். விளம்பரங்களில் காட்டப்படுவது போல் ஒரு நிகழ்வு. விளம்பரக்காரன் கண்டிருந்தால் படமாக்கியிருப்பான் அவன் போட்டிருப்பது போலவே நானும் இனி வாங்க வேண்டும். விளம்பரத்தை பார்த்து நினைக்கும் 'அப்பாவி' போல் ஆனேன்.

கால்களின் பாதப்பகுதி இல்லாததை உணர்ந்தேன் கைகளையும் ஒன்றோடு ஒன்று கசக்கிக்கொண்டு நின்ற இடத்திலேயே நின்று ஓடினேன்.- மற்றவர் சிரிப்பினம் எண்டு எனக்குக் கவலையில்லை- அவ்வளவு குளிர்

இந்தக் கடும் குளிரின் வரப்பிரசாதத்தால் எல்லாவற்றையும் சபித்துக்கொண்டிருந்த வேளை 'கார்' ஒன்று வந்தது. உக்கி விழுவது போல் உருவம் ஆனாலும் அதன் இதயம் இன்னும் இதமாக ஓடிக்கொண்டிருந்தது. உள்ளுக்குள் ஒரு தமிழர் அதை செலுத்திக் கொண்டார். அவர் 'காரை' நிறுத்தி அந்த மூவரையும் ஏறும்படி கேட்டார். இவர்கள் மறுத்து விட்டார்கள் ஆச்சரியமாக! எங்களைக் கேட்க மாட்டாரா என்ற ஏக்கம் எனக்குள் "கேட்க நினைத்திருப்பார் இந்த வெங்காயங்கள் அபாயக்கரத்தையே தட்டிவிட்டதின் மரண அதிர்ச்சியாலே முன்பின் தெரியாத எங்களை ஏன் கேக்கப் போறார்" அவர் எங்கள் மேல உதறிவிட்டுப் போன இயலாமைப் பார்வை இவர்கள்மேல் எனக்கு சூட்டை ஏற்றியது.

"அவற்றை காரின்ரை திறத்திலை எங்களை ஏறச் சொல்லிக் கூப்பிடுறார்" மூன்றில் ஒன்று இதை மொழிய மற்ற 'இரண்டு' வழிமொழிந்தன. நக்கல் சிரிப்புடன் இவர்களின் சிரிப்பு எனது நெற்றிக் கண்ணுடன் மோதித் தணிந்தன.

வசி ஒரு பார்வையுடன் இவர்களைப்பார்த்து விட்டு ஒரு ஞானியின் புன்சிரிப்புடன் திரும்பிக் கொண்டான். "எனக்கு வசியைப் பிடிபடவில்லை" அந்த மூவரும் அந்த வெற்றிவாகைபற்றி புளகாங்கிதம் கொண்டது புரிந்தது.

"இவர்கள் தங்கட பங்காளவிலை அவர்களின்ரை 'ஜக்வார்' கார்களை வைச்சுப் பூட்டிப் போட்டு குளிரை ஒருக்கால் அனுபவிச்சிட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டு வந்திருக்கினம் எண்டு நானும் வசியும் நினைப்பம் எண்டு பெருமைப் பட்டிருக்கலாம் பாவம் இதுகள்"

பேருந்து 'பிறேக்' இழுபட வந்து அமர்ந்தது அவர்கள் ஓடாவண்ணம் ஓடிப்போய் புகுந்து கொண்டார்கள். வசி நிதானமாய் போய் அமர்ந்தான். நான் மெதுவாய் மிதந்து புகுந்தேன். படியில் கால் வைத்தது கண்ணுக்குத் தெரியாமல் உணர முடியவில்லை'.இது என்ன எனக்கு மட்டும் இப்படி குளிர் படாத பாடு படுத்துது. மற்றாக்கள் எல்லாம் சாதாரணமாய் போகினம் வருகினம்" ஆசனத்தில் சீராய் அமர்ந்து கொண்டு கைகளை உரஞ்சி கசக்கி சூடேற்ற முயல்கிறேன். 'எல்லாருக்கும் இப்படித்தான் இருக்கவேணும் அவையும் மனிசர் தானே. குளிர் எல்லோருக்கும் பொதுதானே என்ரை வேதனை எனக்குத்தான் விளங்குது? மற்றாக்களுக்கு சொல்லுறேனே? ஏன் நான் நினைப்பது போலதான் அவையளும் நினைப்பினம்." பேருந்து இன்னொரு தரிப்பில் சாய்கிறது. முகமெல்லாம் இரத்தமாய் வெள்ளையர் ஏறி வருகிறார்.

"என்ன அருண் கடுமையாய் யோசிக்கிறீர்?"

வசி ஊடறுத்தான்.

"இல்லை, உயிர்போகிற மாதிரி குளிர் கணடாவே வெறுக்குது. உமக்கு குளிர் பழகிப் போச்சா?"

சிறு நகைப்புடன் வசி தொடர்கிறான்

"பழகிப் போற மாதிரி குளிர் அப்படி சினேகிதமானதில்லை." ஒரு இடைவெளி நாம் இருவரும் மூச்சுவிடுவது இதனிடையே நடந்தது. -வசி தொடர்கிறான் 'குளிருக்கு என்ரை உடம்பு மரத்துப் போச்செண்டில்லை..." ஆழ்ந்த ஒரு பெருமூச்சை செலவிடுகிறான் எனக்கென்னவோ இந்தக் குளிரின் கொடுமைகளையெல்லாம் கவனிச்சுக் கொள்ளுறமாதிரி மனநிலை இல்லை...

"கவனமெல்லாம் வேறெங்கேயோ இருக்குது..."

இப்படி நான் எதையோ குத்திக் காட்டுவதை உணர்ந்த வசி, 'நீர் ஷிராணி பற்றிச் சொல்லுறீர் எண்டு

**15ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூரியக்கந்தை சடலக் குழிகள்

## அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் பொறுப்புகள்

***1994 ஜனவரி 09 ம் திகதி யுக்திய ஆசிரியர் தலையங்கம்***
***தமிழாக்கம்;செ. லோகநாதன்***

முதலாவதாக கடத்தப்பட்ட பிள்ளைகள் அரசபடையினால் கொல்லப்பட்டதாக இப் பிள்ளைகளின் பெற்றோர் கூறினர். இரண்டாவதாக, இந் நாட்டு பொதுசன தொடர்பு சாதனங்கள், அவ்வாறே கூறியதோடு அவற்றுக்கான சாட்சியங்களையும் காட்டின. பெற்றோர் கூறிய கதைகளையும் பிள்ளைகள் கடத்தப்பட்ட விதத்தையும் பற்றி விபரமாக எழுதின.

மூன்றாவதாக, அனைத்துலக மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகள் இதனை உலகம் பூராவும் உறுதிப்படுத்திக் கூறின. கடத்தப்பட்ட பிள்ளைகள் தொடர்பாக விசாரணை நடாத்துமாறு அரசைக் கோரின.

நான்காவதாக, இப்பிள்ளைகள் கடத்தப்படட சம்பவத்தில் அரச படைகளுக்கு தொடர்பு உண்டு என அரசாங்கத்தின் மனித உரிமை அமைப்பின் (HUMAN RIGHTS TASK FORCE) ஆணையாளரான சொய்சா அவர்கள் நேரடியாகவே எழுதினர்.

எதிர்க்கட்சி அரசியல் வாதிகளும் தொடர்ச்சியாக இப்பிரச்சனையைக் கிளப்பினர். இப் பிள்ளைகளின் பெற்றோர் அரசாங்கத்துக்கு அனுப்பிய ஐந்நூறுவது கடிதத்திலும்சுதந்திரமான ஆணைக் குழு ஒன்றை அமைத்து தமது பிள்ளைகள் காணாமல் போன விதத்தை கண்டு பிடிக்குமாறு கோரியவாறே, மேலே கூறப்பட்ட அனைவரும் அமைப்புகளும் கோரின.

அரசாங்கம் வழமைபோல் தனது "மௌனத்தின் சதி" மூலமாக இப் பயங்கரமான குற்றமும்கூட காலப் போக்கில் மறைந்து போய்விடும் என எண்ணியது.

தமது பிள்ளைகள் காணாமல் போனது தொடர்பாக பெற்றோர்கள் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு மன ஆறுதலை ஏற்படுத்தக்கூடிய பதிலைக் கூட இத் "தார்மீக" ஆட்சியாளர் அனுப்பவில்லை. அதி உயர்ந்த ஆட்சி மன்றமான பாராளுமன்றத்தில் மீண்டும் மீண்டும் பிரச்சனை கிளப்பப்பட்ட போதிலும் இப்பிள்ளைகள் தொடர்பாக போதிய பதில் கிடைக்கவில்லை.

ஆனால் இன்று இவ் அதர்ம ஆட்சியாளரின் செவிப்பறை வெடிக்கும் அளவுக்கு உரத்த குரலில் சாட்சியங்களுடன் வரலாறு பதில் கூறியுள்ளது. கடந்த 03ம் திகதி திங்கட்கிழமை சூரியகந்தை குழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட மனித எலும்புகள் உடுதுணி துண்டுகள், போல் பொய்ண்ட் பேனை ஆகிய விஜேதுங்க ஆட்சியின் வாயை மூட வைத்துள்ளன.

இம் மாபெரும் குற்றத்திலிருந்து ஜனாதிபதி விஜேதுங்க தப்பித்துக் கொள்ள முடியாது. இச்சம்பவம் இடம் பெறும் போது விஜேதுங்க பிரதமராக பதவி வகித்தார். ஜனாதிபதி பிரேமதாச இன்று உயிருடன் இல்லாத காரணத்தால் அடுத்ததாக பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு, எவ்வித சந்தேகமும் இன்றி டிங்கிரி பண்டா விஜேதுங்காவையே சார்ந்த தாகும்.

சூரியகந்தையில் தோண்டி எடுக்கப்பட்ட, இன்னும் எடுக்கப்படுகின்ற மனித உடல்கள் அனைத்துக்கும் இச் சண்டாள யூஎன்பி ஆட்சியாளரே பதில் கூற வேண்டும்.

எம்பிலிப்பிட்டியவின் காணாமல் போன பிள்ளைகள் பற்றி கிளம்பிய குற்றச் சாட்டுகள், மக்கள் அபிப்பிராயம் காரணமாக இரகசிய பொலீசாரைக் கொண்டு அரசாங்கமே விசாரணை ஒன்றை நடாத்தியது. அவ் விசாரணை அறிக்கையிலும் கூட குற்றவாளிகளாக சந்தேகிக்கப் படுபவர்களைப் பற்றி குறிப்பிடப்பட்டதோடு அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்துமாறு பிரேரிக்கப்பட்டது என்பதும் இன்று அனைவரும் அறிந்த விடயமாகும்.

ஆனால் அரசாங்கம் அவ் விசாரணை அறிக்கையையும் குப்பைத் தொட்டியில் வீசியது.

இது தொடர்பான நீதிமன்ற விசாரணைக்காக குறிப்பிட்ட பாதுகாப்பு படை அதிகாரிகள் அழைக்கப்பட்டால் அரசாங்கத்தின் பிரபல அரசியல் வாதிகளும் இப் பெரும்குற்றத்துக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதும் இழுபட்டு வெளிவரலாம் என்ற காரணத்தாலேயே அரசாங்கம் அவ் அறிக்கை பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை என நம்பத் தகுந்த விடயங்கள் உள்ளன.

எம்பிலிப்பிட்டிய பெற்றோரின் பெருமூச்சு காற்றுடனும் சிந்திய கண்ணீர் பூமியிலும் சேர்வதைத் தவிர வேறு எந்தவொரு விளைவும் ஏற்படப் போவதில்லை என்றே பார்வைக்கு தெரிந்தது.

ஆனால் பெற்றோர் போராட்டத்தைக் கைவிடவில்லை. "இறந்த தமது குழந்தைகளுக்காக அல்ல எனவும் கூடுதலாக வாழும் பிள்ளைகளைப் பாதுகாக்கும் அபிப்பிராயத்துடனேயே முயற்சி எடுப்பதாகவும்" மீண்டும் மீண்டும் அவர்கள் செய்திப் பத்திரிகைகளுக்கு விளங்கப்படுத்தினர்.

தீர்மானம் ஒன்று எடுக்கும் வரை பிள்ளைகள் கொல்லப்பட்டனரா இல்லையா? கொல்லப்பட்டால் கொலையாளி யார்? ஏன் கொல்லப்பட்டார்கள்? ஆகிய கேள்விகளுக்கு பதில் கிடைக்கும் வரை போராட்டத்தை முன்னெடுக்கும் மன உறுதியுடன் அப்பெற்றோர் இருந்தனர். சரியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறுவதாயின் தனது வால் மூலமாக சமுத்திரத்தை வற்றவைக்க முயற்சித்த அணிலைப்போல இருந்தனர்.

சூரியகந்தையில் தோன்றிய சாட்சியத்தின் மத்தியிலே அரசாங்கத்தால் தொடர்ந்தும் மௌனம் சாதிக்க முடியாத அளவுக்கு இன்று இயற்கையும் வரலாறும் அப்பெற்றோருக்கு ஆதரவாக வந்துள்ளன.

ஜனாதிபதி விஜேதுங்கவும் பிரதமர் ரனிலும் பதில் கூறியே ஆகவேண்டும். அதுமட்டுமன்றி அக்காலத்தில் எதிர்க்கட்சியில் இருந்த போது இவ்வாறான படுகொலைகளை காரணமாகக் கொண்டு அரசாங்கத்தை விமர்சனம் செய்த அமைச்சர் அநுர பண்டாரநாயகவும் பேசவேண்டும். இச் சடல குழிகளுக்கான பொறுப்பை எடுப்பது யார்? விஜேதுங்கவா? ரனிலா? மத்தியூவா? எவராவது இதற்கு பொறுப்பு எடுக்க வேண்டும். ஏனெனில் சூரியகந்தை நந்த மத்தியூவின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசமான கொலன்ன தேர்தல் தொகுதியைச் சார்ந்ததோடு, கொலன்ன தேர்தல் தொகுதி ரனிலும் விஜேதுங்கவும் ஆட்சி செய்யும் இலங்கையின் ஒரு பகுதியாகும். இவர்கள் தப்பி ஓடமுடியாது.

சூரியகந்தை சடலக்குழிகளை தேடிக் கண்டுபிடித்த எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களைப் போற்றவேண்டும். இதுவரைகாலமும் இடம் பெற்ற அனேக சம்பவங்களுக்கு நேர்ந்த கதியைப்போல் இச்சம்பவத்தையும் இத்துடன் மறைந்து போக இடமளிக்காமல் இவ் எதிர்க்கட்சிகள் கவனம் செலுத்தவேண்டும் என வேண்டுகிறோம். இதன் மூலமாக தமது வாக்காளர் குறித்து பொறுப்பு வாய்ந்த எதிர்கட்சிகளாக 1994ல் முதலாவது அடியை இவர்கள் எடுத்து வைப்பார்களாயின் அப்போது ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்கும் ஒரு புதிய தெம்பு பிறக்கும் என்பது நிச்சயமாகும்.

படுகொலை செய்யப்பட்ட இப்பிள்ளைகளுக்கு நாம் செலுத்தும் மிக நல்ல காணிக்கையும் அதுவேயாகும்.

## அவன்...

நினைக்கிறன் (நான் தலையாட்டி உடன்படுகிறேன்....) "ஆனால் நீர் நினைக்கிற கிளுகிளுப்பான விசயமில்லை ஷிரானி சம்பந்தப்பட்டது தான்...."

பேருந்து குகை(புகை) இரத நிலையத்தை தொட்டு நின்றது. எல்லோரும் கொட்டுண்டுகிறார்கள்.. எங்களை மொய்த்திருந்த அந்த ஆறு கண்களும் உதிர்கின்றன. நாங்கள் இருவரும் சாகவாசமாய் இறங்கி குகையுள் நுழைகிறோம். கை, கால்கள், ஓரளவு விறைப்பில் இருந்து விடுபட்டிருந்தது.

"என்ன சும்மா வாறீர். விசயத்தைச் சொல்லுமன்" நான் துரு துருத்துக் கொள்கிறேன். அந்த கிளுகிளுப்பில்லாத விசயத்தை உடனேயே சுடச் சுட அறிந்து கொள்ளும் பேர் ஆவல்- வசியோ நிதானமாய் நகர்கிறான். என்னுடைய செவியோ அவனுடைய வாயையே குவியப் படுத்தியபடி இருந்தது.

ஒரு சிறு கனைப்புடன் வசி "நாங்கள் ஏன் ஹொஸ்பிற்றலுக்குப் போறமெண்டு உமக்குத் தெரியுமே?"

"இல்லை" என்னவாய் இருக்கும் என்ற சிந்தனையுடன் பதில் சொன்னேன்.

"இந்த விசயம் நான் ஒருவருக்குமே சொல்லேலேலை ஷிரானிக்குக் கூட சொல்லேல்லை அவவுக்குத் தெரியவும் கூடாது ஆனால் எனக்கு ஆரக்கெண்டாலும் சொல்லியே ஆகவேண்டு மெண்டு படுகுது." வசி நிறுத்தினான் ஏதோ சோகத்தின் விதை ஊன்றப்படுவதை நான் உணர்ந்தேன்.

அந்நேரம் 'குகை இரயில கடகடத்து வந்து கீச்சிட்டு நின்றது. இறங்க வேண்டியவர்கள் இறங்க ஏறிக் கொள்ள வேண்டியவர்களுடன் நாமும் ஏறி அமர்ந்து கொண்டோம்.

"என்ன வசி சொல்ல வேண்டியதைச் சொல்லுமன் ஹொஸ்பிற்றலுக்கு ஏன் போறம்? வசி சாத்தப்படும் கதவினையே வெறித்துக் கொண்டிருந்து விட்டு திரும்பினான் கண்களில் கண்ணீர் முட்டிக்கொண்டு நின்றது.

"என்ன வசி என்ன நடந்தது. என்னென்டாலும் சொல்லும்... எனக்கும் தொண்டை கற கறத்தது. மூக்கை அரித்தது. வசி கண்கலங்கியதால் அது என் கண்ணீர் சுரப்பியை தூண்ட எத்தனிக்கும் அறிகுறிகள்.

கண்களை கசக்கிக் கொண்டு வசி சொன்னான். "எனக்கு இண்டைக்கு முக்கியமான ஒரு ரெஸ்ற் இருக்குது. ஒரு ஸ்பெசலிஸ்ருடன் அப்பொயின்மென்ற் அவரிட்டை போன மாதமும் போனனான் அந்தண்டு தான் ஷிராணியும் கனடா வந்தவை இண்டைக்கு ரெண்டாவது அப்பொயின்மென்ற் இண்டைக்கு வரயிக்கை இன்னொரு ஆளையும் துணைக்குக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னவர். போகேக்குலே ரக்சியிலேயும் போகவேண்டி வருமெண்டும் சொன்னவர். 'நிறுத்தினான். இதற்கிடையில் இரண்டு தரிப்புகள் கடந்து மூன்றும் தரிப்புக்கு கீச்சிட்டது இரயில்.

"அப்படி என்ன ரெஸ்ற் என்ன வருத்தம் உமக்கு?"

வசி பேசாமல் இருந்தான். இறங்குவோரிலும் ஏறுவோரிலும் பார்வையிருந்தது. எனக்குத் தெரியும் கவனம் அதில் இல்லை. சிந்தனை வேறெங்கோதான்.

இரயில் தரிப்பில் இருந்து விடுபட்டது.

"உமக்குத் தெரியுமே அருண், நான் கொஞ்ச நாளிலை செத்துப்போயிடுவன்...."

எனக்கு குகை ரயில் தடம்புரண்டது போல் அதிர்ச்சி.

"என்ன? என்ன சொல்லுறீர் உமக்கென்ன விசரே?" என்ன அறியாமலே ஏதோ கேட்கிறேன் வசி பேசவே இல்லை. ஆசனத்தில் சாய்ந்து கொண்டே முகட்டை வெறித்து அண்ணாந்து கொண்டிருந்தான் பெருமூச்சொன்றை செலவழித்துக் கொண்டு நிமிர்ந்து என்னை நோக்கினான். கண்கள் சிவந்திருந்தன.

"நான் சீரியசாகத்தான் சொல்லுறன், எனக்கு ஒரு வருத்தம் இருக்குது என்ரை இருதயம் கொஞ்சம் கொஞ்சமாய் வீங்கிக்கொண்டு வருகுது. நாலஞ்சு வருசத்துக்கு முன்னமே எனக்கு நெஞ்செரிவு இருந்தது. அப்ப நான் ஏதோ உறைப்புச் சாப்பாட்டதாலை தான் என்று. நல்லா குடிப்பன் அப்ப எனக்கு

**24ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜெயந்தீஸனின் லக்ய சித்ராபிஷேகம்

# திருவின் முடிவும் திருமதியின் கலக்கமும்



கவியரங்கம் பற்றிப்பேச திரு.OC சும்மா வரவில்லே. ஒரு "சமாதான நீதவானை'' த் தூக்கி மேசையில் வைத்தார். "கவியரங்கம் இன்றைக் கில்லேயே!'' என்று அவரிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது. ரெண்டு கிளாஸைத் தூக்கி மேசையில் வைக்க அவைகளிற்குள் நீதவானை விட்டார். "கோலா கலக்கவோ?" என நான் கேட்க, "கலந்தா டேஸ்ட் கெட்டு போகும்." என்றபடி தனது கிளாஸைத் தூக்கி செல்லமாக எனது கிளாஸுடன் தட்டினுர். எனது மனதோ எப்படி கவியரங்க கவிஞர் பட்டியலிலுள்ள இவரது பெயரை நீக்கி அந்த இடத்தில் திருமதி.OC ஐப் போடுவது என யோசித்தது. திருமதிக்காக நான் வக்காலத்து வாங்கினுல் திரு நிச்சயமாக மாறி விளங்குவார் என்பது எனக்குத் தெரியும். போதாக் குறைக்கு நீதவானுேடு வேறு வந்துள்ளார். என்ன செய்யலாம்! சற்றே நாக்கை நனைத்துக் கொண்டேன். மூளை கணகணப்பாகியது.

"நீங்கள் பெண்ணிலேவாதியோ?" எனக் கேட்டதும், என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

"நான் பெமினிஸ்ட் எண்டது இலக்கிய உலகம் முழுவதுக்குமே தெரியும், பிறகேன் கேட்டனீர்?" ஏதோ அவர் வெருட்டுவது போலதான் எனக்குப்பட்டது.

"கிட்டடியிலே ஒரு பெண்ணிலே வாதியைச் சந்திச்சனுன்...."

"என்ன! அவள் என்னைப் பற்றி ஏதும் சொன்னவளோ?''

"இல்லே. நாங்கள் சீரியஸா ஆணுதிக்கம் பற்றிப் பேசினனு ங்கள். இலக்கியவாதியளிலே முக்கால் வாசிப்பேர் பெம்பிளைக் கள்ளன்கள் எண்டு அவ சொன்னவா, இதை நீங்கள் அக்செப்ற் பண்ணிறியயோ?''

படக்கென்ற தனது கிளாஸிற்குள் நீதவானை ஊற்றி ஒரு இழுவை இழுத்தார்.

"பெண்ணிலேவாதி சொன்ன தெண்டிறீர். அப்ப அக்செப்ற் பண்ணத்தான் வேணும். உந்தப் பெண்ணிலேவாதத்தை விட்டிட்டு எங்கடை கவியரங்கத்தை எப்பிடித் திறமா நடத்திறதெண்டதைப் பற்றிப் பேசுவம். நான் கவிதை பிறிப்பெயர் பண்ணீட்டன், ஒருக்கா வாசிச்சுப் பாரும்....'' என அவர் தொடங்க நான் குறுக்கிட்டேன்.

"பெண்ணிலே வாதத்துக்கும் இந்தக் கவியரங்கத்துக்கும் ஒரு சம்பந்தம் இருக்கெண்டதாலேதான் அதைப்பற்றித் துவங்கினனுன்."

"சம்பந்தமோ? அதென்ன சம்பந்தம்? கவியரங்கை ஓர்கனைஸ் பண்ணிறது பெண்ணிலே வாதிகள் இல்லேயே"

"அது எனக்குத் தெரியும்! பெண்களுக்குச் சம உரிமை வேணுமெண்டு கோஷம் போடுற நாங்கள் அதை நடைமுறையிலேயும் நடத்திக் காட்ட வேணும். பெம்பிளையள் ஆம்பிளையளுக்கு எவ்வளவு உரிமையை வழங்கினம். ஆம்பிளையள் பெம்பிளையளுக்கு உரிமையளை வழங்கிறது குறைவு..

"என்ன பெம்பிளையள் ஆம்பிளையளுக்கு உரிமையளை வழங்கினவையோ? அப்பிடி என்ன உரிமையளை வழங்கினவை?"

"பெம்பிளையள் வெளியிடுற புத்தகங்களிலே எத்தினை ஆம்பிளையளெண்டு எழுதித் தள்ளினம். ஆம்பிளையள் வெளியிடுற புத்தகங்களிலே பெண்பிள்ளேயள் எழுதிறது வாறதும் இல்லே, அப்பிடி பெம்பிளைப் பெயரிலே ஏதும் வந்தா அது ஆம்பிளேயளின்ரை புனைபெயராத்தான் இருக்கும் நாம் முடிவு கட்டவேணும்!'' என மேசையைத் தட்டிச்சொன்னவுடன் திரு அதிர்ந்து விட்டார்.

"ஜெயந்தீஸன், உணர்ச்சி வசப்படாதையும். சரி, நாங்கள் ஒரு புத்தகம் விட்டு கண்டிப்பா பெண்கள் எழுதுறதை மட்டும்தான் பிரசுரிச்சா, புரட்சி செய்தது மாதிரி இருக்காதோ?''

"உது நல்ல ஐடியாத்தான். உதை விட மணியான ஐடியாவொண்டு என்னிட்டை இருக்கு" என்றதும் "என்ன?'' என்று வாயைப் பிளந்தார்.

"எங்கடை கவியரங்கிலே கவிதை பாடுறவை எல்லாரும் ஆம்பிளையள் ஒரு கவிஞரை நீக்கி அந்த இடத்திலே ஒரு கவிஞையைப் போட்டா பெண்களுக்கு உரிமை கொடுத்ததாவும் அத்தோடை கவியரங்கம் களை கட்டிறதாகவும் இருக்கும். இதைப் பற்றி டிப்பா யோசியுங்கோ!" என்றேன்.

நீதவானைப் போத்தலோடு தூக்கி உறிஞ்சினுர். அவரது கண்கள் சிவந்தன.

"கவியரங்கம் நடந்திருங்களாம் கவியரங்கம், அதுவும் ஒரு பெம்பிளையைக் கவிதை பாடப் போடாமல் ...கவிதை பாடத் தெரிஞ்ச ஒரு பெட்டையின்ரை பேரைச்சொல்லும், நான் அவளைக் கவியரங்கிலே கவிதை பாடச் செய்து காட்டிறன்...'' என்று சபதம் செய்தார். திரு.OC

மாஜிக்காதலி அனிஷாவைப் பிரிந்திருப்பதால் அவளைக் கேட்க முடியாது. அது எனது நோக்கமும் அல்ல. திருமதி OC ஐ மேடையில் ஏற்றுவது அல்லவா என் திட்டம்! இதை எப்படித் திரு OC இடம் சொல்வது. ஏற்கனவே திரு.OC க்கு என்மீது சந்தேகம்- போதாக் குறைக்கு அவவின் பெயரைப் பிரேரிக்க, அவரிருக்கும் நிலேயில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வம்பு கிம்பு வந்துவிட்டால் வருவது வரட்டும் என்று வாயைத் திறந்தேன்.

"உங்கடை அவ கவிதையள் எழுதிறவா! அவவிட குரலும் கவிதை பாடச் சோக்கானது. அவவைப் போட்டமெண்டா....."

"என்ன என்ரை மனிசியை மேடையிலே ஏறச் சொல்லிறீரோ?"

"இது ஒரு ஐடியாத்தான். இனி நீங்களும் அவவுமா கலந்தாலோசிச்சுத்தான் முடிவு எடுக்க வேணும். நான் ஏதும் குறையாச் சொல்லீட்டேனோ?"

"இதிலே குறையெண்டு ஒண்டுமில்லே. நீ உம்மடை மனதிலே பட்டதைத்தானே சொன்னனீர்.... எனக்கெண்டா அவள் மேடையிலே ஏறச் சம்மதிப்பாளோ எண்டது தான் சந்தேகமா இருக்குது..."

"நீங்கள் விரும்பினா நான் அவவோடை கதைச்சுப் பாக்கிறன்"

"சரி, அவள் ஓம் எண்டிருள் எண்டு வைப்பம். அப்ப கவிஞர் பட்டியலிலே இருந்து ஆரை நீக்கிறதாம்?"

"உங்களைத்தான்" என்று எப்படி அவரிடம் நேரில் சொல்வது? லக்ய சமாச்சாரங்கள் என்றுலே சங்கடங்கள் தாம்.

" நீங்களும், உங்களுடை அவவும் ஒரு மேடையிலே ஏறினா, ஏதோ நீங்கள் குடும்ப இலக்கியம் நடக்கிறதெண்டு கதை கட்டிப் போடுவாங்கள். நீங்கள் விலகி உங்கடை இடத்துக்கு அவ போடபட்பட்டா, பெண்ணிலே வாதத்துக்காக நீங்கள் செய்த தியாகமெண்டு மேடையிலே நான் சொல்லுவன்."

திரு. OC தீவிரமாக யோசித்தார்.

"ஜெயந்தீஸன், எனக்கொரு ஹெல்ப் பண்ணுவீரே?"

"நந்தினி, இப்ப ஒரு மூக்குத்தி போட்டிருக்கிருள். ஆர் வாங்கித் தந்தது எண்டு கேட்க, தான் வாங்கினதெண்டவள் எனக் கெண்டாச் சந்தேகம். கார்த்திக் சொன்னவன் நீர் எண்டு. எனக்கெண்டா நம்பிக்கையில்லே அது ஆரா இருக்குமெண்டு நினைக்கிறீர்?"

ஐயகோ! கவியரங்கத்துக்கும் மூக்குத்திக்கும் என்ன சம்பந்தமாம்! பெண்கள் மூக்குத்தி அணிந்தாலும் சந்தேகிக்கின்ற அவலட்சண உலகில் ஏன் தான் பிறந்தேனோ?

"ஏன் சந்தேகப்படுறியள்! அவ பீரோக் கிளினிங் செய்யிரு? அவ தான் வாங்கியிருப்பா எண்டு நான் நம்புறன். சரி உங்கட இடத்துக்கு அவவைப் போடுவமே!"

நீதவானைக் காலியாக்கி விட்டு, "என்ரை மனிசிக்காக நான் எதையும் செய்யத் தயார். இது சத்தியம்" என மேசையில் ஓங்கி அறைந்தார். உடனடியாக நான் "உங்கடை மனிசிக்காக அல்ல பெண்ணிலவாதத்துக்காக..." எனத் திருத்தினேன். நீதவான் முடிந்ததால் இன்னொரு நீதவான் வாங்க வேண்டும் என்றபடி அவர் கீழே இறங்க, அடுத்த நீதவான் வந்தால் எடுத்த முடிவு தவிடு பொடியாகிவிடும் எனப் பயந்து அவரைத் தடுக்க, சமாளித்து, ரயில் ஏற்றிவிட்டு வந்து அவவிற்கு போன் பண்ணினேன்.

"அவர் இண்டைக்கு ஓம் எண்டுவார், நாளைக்கு தான் அப்பிடிச் சொல்லேல்லே எண்டு கதை விடுவார். இண்டைக்கு அவர் வந்து கொழுவினுரெண்டா, நான் இறங்கி உம்மிட்டை வந்திடுவன்."

நற்செய்தி கேட்டவுடன் அவ இப்படிச் சொன்னதும் "எப்படியும் கவியரங்கத்திலே உங்கடை பெயரைப் போட வைக்கிறன். அது முடிஞ்சோணை தீர்வு பற்றி யோசிப்பம்" என்றவுடன் "தாரும்" என்ரு. கொடுத்தேன். அது 'இச் இச்' என்ற ஓசையை எழுப்பியது.

(அடுத்த வாரம் கவியரங்கம், இதில் திருமதி OC பாடினுரா? கலந்து கொண்டோர் யார்? அங்கே நடந்தன எவை? இவைகளை அடுத்த வாரம் பார்ப்போம்.)

பென் சூரியனின் குட்டிக்கதைகள்

# காசும் கடிதமும்



சேனாதிராயன் கனடா வந்தது பெரிய கதை. சுருக்கமாய் சொன்னால் காணி, பூமியை ஈடு வைத்து நகையை அடைவு வைத்து வட்டிக்கு எடுத்து புலிக்கும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துத் தான் வந்து சேர்ந்தான். இந்த இமிக்கிரேஷன் அலுவல்கள் முடிந்து . ஒருமாதிரி வெல்பெயரையும் எடுக்கத் தொடங்கி விட்டான். வெல்பெயரிலும் கொடுக்கிற அலுப்புகளால் சேனாதிக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. இதிலும் பார்க்க ஊரில் நின்றிருக்கலாமே என்ற எண்ணமும் வரும் இடைக்கிடை.

வந்த சேனாதி மறுநாளே சுகமாக வந்து சேர்ந்ததாக கடிதம் போட்டான் தாயார் சின்னச்சிப்பிள்ளை பக்கத்து வீட்டுக்காரப் பெட்டையைப் பிடித்து எழுதிய கடிதத்தில் 'மேனை, நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை, ஒழுங்காய் சாப்பிடு, உடம்பைக் கவனி, அடிக்கடி கடிதம் போடு' என்று வந்தது. ஒழுங்காய் சாப்பிட்டு உடம்பைக் கவனித்த கனடிய ஓட்டச் சுழிக்குள் அகப்பட்டுக் கொண்டான். றூம் மேட்டுக்கள் 'குளிரைச் சமாளிக்க பியர் குடிக்க வேணும் ஐஸே' என்று சொல்லி பழக்கி விட்டதில் வெல்பெயர் காசு கொஞ்சம் கரைந்தது. அம்மா கடிதம் தானே

74 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிக் ஃப்றீட் கவிதைகள்

தமிழில் மணி



## பேச்சற்றேன்

'கவிதைகள் மூலஞ்
சிறுபான்மையானோரை
சென்றடையலாம்
என்ற போதும்
நீ ஏன்
இன்னமுங்
கவிதை எழுதுகிறாய்?'

என்று பொறுமையற்ற
என் நண்பர்கள் கேட்கின்றனர்
ஏனெனில் அவர்கள்
தமது மார்க்கங்களூடுஞ்
சிறுபான்மையானோரையே
சென்றடைகின்றனர்

அவர்களுக்கு
என்ன பதில் சொல்வதென்று
எனக்குத் தெரியவில்லை.

## தாக்கும் வலிமையைப் பேணுவதற்கான உபதேசங்கள்

எதிரிகள்
வெகு தொலைவில் உள்ளனர்
அத்துடன் பெருமளவிற்கு
நல்ல பாதுகாவலுடன் உள்ளனர்

எனவே நும் நண்பர்களை
எதிரிகள் என்பீர்
அவர் பற்களைக்
குத்தி உதிர்ப்பீர்

இவ்வாறு
அவர்களை எதிரிகளாக்க
உம்மால் இயலும்
அதன்பின் நீர் பெருமை பேசலாம்:

"அவர்கட்கெதிரான போராட்டத்தில்
எழுந்து நின்று
முதல் உதை கொடுத்தவன் நானே"

அச்சங்களும் மிச்சங்களும்
தான் அஞ்சுவதாக
என்னிடஞ் சொல்பவனைப் பற்றி
ஐயுறுதே
தன்னிடம் ஐயங்களே இல்லையென
உன்னிடஞ் சொல்பவனைப்பற்றி
அஞ்சு

## செய்முறைப் பணி

திக்குவாயர்களுக்கு
பேசக்
கற்பிக்க

அவர்களுள் ஒருவன் போற்
சரளமாகத்
திக்கிப் பேசக் கற்றேன்

அவர்கள்
ஏன் இப்போது
என்னை உதைக்கிறார்கள்?

## வாழ்க்கை

பிறத்தல்
பிறிதறிதல்

உணர்தல்
உண்ணுதல்

சிந்தித்தல்
செயற்படுதல்

காணுதல்
காமுறுதல்

இன்புறுதல்
இழந்து நிற்றல்

இன்னபிற
இறக்கும் வரை

எனக்குமட்டும்
இங்கு ஏனோ

மெல்ல மெல்ல
மேலே போதல்

என்பதே
வாழ்வாய்.

செந்தில் பிரான்ஸ்

## காணமற்போன முத்துக்கள்

எங்களுடைய வானங்களில் அழகான முத்துக்கள் விளைந்தன
மேகங்கள் மேகங்களைக் காற்று விரட்டியது
மேகங்களின் மடியினின்று முத்துக்கள் விழுந்தன
விழுந்த முத்துக்களைப் பூமி அள்ளியெடுத்தது
காட்டு மல்லிகைகள் அவற்றை இரவல் வாங்கின
மல்லிகைகளை அலங்கரித்த முத்துக்களைப்
பெண்கள் கொய்து கூடைகளில் இட்டனர்
பெண்கள் பள்சாலைக்குக் கூடைகளுடன் போகையிற்
காதலர்கள் முறுவல்
பெண்களைக் களவாடிச் சென்றது
காதலர்களைக் கறுப்புப் பூனைகள் களவாடின
மீளாத காதலர்கட்காகக்
காத்திருந்த பெண்களின் விழிகளில் விளைந்த முத்துக்கள்
அவர்களது மூச்சின் வெம்மையிற்
பற்றி எரிந்தன
பெண்களது பூக்கூடைகள் பற்றி எரிந்தன
காட்டுமல்லிகைச் செடிகள் பற்றி எரிந்தன
பூமியும் பற்றி எரிந்தது
காற்றிலும் தீபரவி
மேகங்கள் எரிந்தன
எங்கள் வானங்கள் எல்லாமே எரிந்தன

புவனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழிசைக்கலாமன்றம் விருது 1993

கடந்த சனிக்கிழமை பிற்பகல்...... காலநிலே கடும் குளிர் வெளியே போதிய பாதுகாப்புடைகளின்றிப் பத்து நிமிடங்கள் நின்ருல் உறைந்து போய்விடுவீர்களென்று தொலைக்காட்சி பயமுறுத்திக் கொண்டிருந்தது. இந்த நிலையில் தமிழிசைக்கலாமன்றத்தின் கடந்த வருட இசைப்பரீட்சையில் தோற்றியவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் நடப்பதாக அழைப்பிதழ் வேறு... தமிழைச்கலாமன்றத்தின் கடந்த கால இசைநிகழ்ச்சிகளின் அபிமான ரசிகன் என்றவகையில் அழைப்பிதழை நிராகரிக்கவும் வரவில்லை...

காரில் ஏறினல் கார் இயங்கமறுத்து அட....இரும்புக்கே இவ்வளவு குளிரென்ருல் காரினுள் என் பாடு!...... ஒருவாறு காரைத் தட்டிக்கொடுத்து இயக்கினேன்... காரினுள் இருந்த வானெலி -35 C என்று பயமுறுத்தியது. ஒருவாறு அஜின்கோட் கல்லூரிக்குள் நுழையும் போது இந்தக்குளிரிலும் சரியான நேரத்துக்கு ஆரம்பித்திருந்தது மட்டுமன்றிச் சுமார் முந்நூறுபேர்வரையில் வந்திருந்தார்கள்...

இங்கே தமிழிசை கலாமன்றம் பற்றிச் சிலவரிகள் சொல்ல வேண்டியுள்ளது.. இசைக்கொரு அரங்கம், பாரதிவிழா, இசைமஞ்சரி, இசை ஆலாபனை, இசை அரும்புகள் (இது முற்றிலும் இளம் சிருர்களை உள்ளடக்கிய அருமையான நிகழ்ச்சி) போன்ற பல தரமான நிகழ்சிகளை நடாத்தி மிகக்குறைந்த காலத்தினுள் தமிழிசை கலாமன்றம் என்ற ஆர்வத்துடன் தமது நேரத்தையும், உழைப்பையும் அர்ப்பணித்துச் சிலர் செய்த செய்கையினுல் உருவான இந்த தமிழிசைக்கலாமன்றத்தின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவர் திரு.சொர்ணலிங்கம் அவர்கள்.

இலங்கையின் வட இலங்கைச் சங்கீத சபையிற்கு அடுத்தபடியாக புலம்பெயர்ந்து தமிழர் வாழும் நாடொன்றில் பரீட்சை இதுதானென ஒரு பேச்சாளர் குறிப்பிட்டார். மேற்படி பேராசிரியர் திரு.ஜிம் கிப்பொன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துக் கொண்டார். இவர் மேற்கத்திய இசையுடன் இந்திய சாஸ்திரிய சங்கீதத்திலும் புலமை கொண்டவர். என்பதோடு இந்திய இசைக்கருவிகளான தபேலா, மிருதங்கம் என்பனவற்றை வாசிக்கவும் கூடியவர் என்பதை அறிந்தபோது அவர்மேலுள்ள மதிப்பு இரண்டு மடங்கானது...

இசைப்பரீட்சையில் பங்குபற்றிய 116பேருக்கு அன்று நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவ்வளவு தொகையான மாணவ மாணவியர் சாஸ்திரிய இசையைப் பயிலுகின்றனர் என்பதை நினைத்த மனம் உவகையால் துள்ளியது. அவர்களுள் 13 பேருக்கு முதல் தர சித்தி வழங்கப்பட்டது. வாய்ப்பாட்டு வயலின் புல்லாங்குழல் மிருதங்கம் வீணை போன்ற பலவிதமான துறைகளுக்கு இவை வழங்கப்பட்டன. பிரதம அதிதி பேசுகையில இங்குளள மாணவ மாணவியரின் திறமையும், ஆர்வமும தன்னை வியக்கவைத்துள்ளதென்றும், இந்திய சாஸ்திரிய இசையானது ஒரு சமுகத்துக்கே உரிய இசையல்ல, அது ஒரு சர்வதேச இசை... என்றும் குறிப்பிட்டார். அதோடு வருங்காலத்தில் சாஸ்திரிய இசையை இங்குள்ள பாடசாலைகளில் கிறடிட் பாடமாகச் செய்வதற்குத் தான் அரசிற்குச் சிபார்சு செய்வதுடன் தன்னுலான உதவிகளையும் செய்யத்தயாராக இருப்பதாகக் கூறினுர்.

முதல்தரசித்திபெற்ற மாணவ,

**33ம் பக்கம் பார்க்க..**

# உடுகம்பொல இடைநிறுத்தம்

உடுகம்பொலவின் சகோதரரான மேஜர் உடுகம்பொல சிங்கப்பூரில் இருந்து தங்கம் கடத்தியது காரணமாக இடைநிறுத்தப் பட்டிருந்தார். பின்னர் நீதிமன்றத்தில் சுற்றவாளியாகக் காணப்பட்டு விடுவிக்கப்பட்ட போதும் இவர் மீண்டும் இராணுவத்தில் சேர்க்கப் படவில்லை. தன் மீது இக்குற்றம் சோடிக்கப்பட்டதாக அவர் கூறுகிருர். ஆயினும் புதிய தளபதி இதுகுறித்து சரியான விசாரணை முடிய முன் இவரைச் சேர்க்க முடியாது என்று கூறியுள்ளார்.

# ராஜீவ் கொலைவிசாரணை

ராஜீவ் கொலை சம்பந்தமான விசாரணைகள் ஆரம்பித்துள்ளன. இதில் பதினுறு இலங்கையரும் பத்து இந்தியர்களும் விசாரணைக்குள்ளாகிருர்கள். இந்த விசாரணைகள் ஒரு வருடம் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் சாட்சியமளிக்க 1014 பேர் அழைக்கப்பட்டிருக்கிருர்கள். சென்னையில் பலத்த பாதுகாப்புடன் நடைபெறும் இவ்விசாரணைகளில் பார்வையாளர்களும் பத்திரிகையாளர்களும் அனுமதிக்கப்பட மாட்டாாகள. பூநதமலலி சிறையில நடைபெறும்விசாரணைகள் குறித்து வெளியில் பத்திரிகையாளர்களுடன் பேசக் கூடாது என்று நீதிபதி உத்தரவிட்டிருக்கிருர்.

எதிரிகள் தாங்கள் சுற்றவாளிகள் என்று கூறி வருகின்றனர். கொலைசெய்யச்சதி, பயங்கரவாத நடவடிக்கைகள், வெடிமருந்துகளை கையாண்டமை, பாஸ்போட் மோசடி என்று பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன.

பிரபாகரன், பொட்டம்மான் போன்ருேர் மீது அவர்கள் இல்லாமலேயே விசாரணை நடைபெற உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரித்திரியா:
# இப்போது யுத்தம் இயற்கையுடன்

சுதந்திரத்தையும், அமைதியையும், சமாதானத்தையும் நீண்ட காலத்தின் பின்னர் எண்ணற்ற துன்பங்களுக்குள்ளும், எல்லையற்ற தியாகங்களினுலும் பெற்றுக் கொண்ட உலகின் புதிய தேசங்களில் ஒன்ருன எரித்திரியா இப்போது இயற்கை வழிவந்த இன்னுமொரு பிரச்சனையை எதிர் கொள்ளவேண்டி வந்துள்ளது. ஆபிரிக்காவின் புதிய தேசம் .... கடந்த மே மாதம் தன்னை எதியோப்பியாவிடமிருந்து தனியாக பிரித்துக்கொண்ட தேசம் இப்போது இயற்கையுடன் ஒரு புதியபோரை மேற்கொள்ளும்நிலை எழுந்துள்ளது. சமீபத்தில் வெளியாகிய ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய பிரிவின் அறிக்கையின்படி எரித்திரியாவின் இவ்வருட அறுவடையில் 70% வெற்றியளிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எரித்திரியாவின் கணிப்பீட்டின் படி அறுவடையில் 20% தோல்வி எனக் குறிப்பிடப்படுகிறது.

வழமையாக எரித்திரியாவில் தொடர்ந்து பெய்கின்ற நீண்ட மழை செப்ரெம்பர் மாதம் வரை தொடரும். ஆனுல் இம்முறையோ யூலை மாதத்திலேயே மழை நின்றுவிட்டது. முக்கியமான தானியங்கள் பயிராகும் உயர் நிலப்பகுதிகளில் ஆகஸ்ட்மாதம் மழைபெய்யவே இல்லை. செப்ரம்பர் மாதம் சிறிய அளவில் மழை பெய்தது. வாடிய பயிர்களை கிருமிகளும் நாசம் செய்தன. விளைவு எதிர் வரும் நாட்களில் எரித்திரியாவில் உணவுப் பற்றுக் குறை ஏற்படும் நிலைமை குறிப்பாக டிசம்பர் தொடக்கம் மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதி எரித்திரியாவின் உணவுப் பிரச்சனை மோசமான நிலைமையை அடையும் என எதிர்ப்பார்க்கப் படுகிறது. அமெரிக்கா எரித்திரியாவை மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதி' என அறிவித்துள்ளது.

எரித்திரியா இந் நிலையை சமாளிக்க செல்வந்த நாடுகளிடம் 3 இலட்சம் தொன்கள் உணவை கேட்டு கோரிக்கை விடுத்துள்ளது. தனது 3 மில்லியன் மக்கள் தொகையின் மூன்றில் இரண்டு பகுதியினருக்கு உணவளிக்கவே எரித்திரியா இந்தக்கோரிக்கையை விடுத்தது. ஐ.நாவின் உலக உணவுப் பிரிவு உலக நாடுகளிடம் உடனடியாக எரித்திரியாவுக்கு 2 இலட்சத்து 55 ஆயிரம் தொன் உணவை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது இவ்வுதவியின் மூலம் தான் உணவின்றி உடனடி அபாயத்துக்குள்ளாகியிருக்கும் 4 இலட்சம் எரித்திரிய மக்களைக் காப்பாற்ற முடியும் என இவ்வமைப்பு நம்புகிறது. இந்தக் கோரிக்கை நிறைவேற்றப் பட்டாலும் கூட பலர் பட்டினிக்கு ஆளாகவேண்டியே இருக்கும். முன்னர் எரித்திரியாவுக்குக் கிட்டிய உணவு உதவிகளின் காரணமாக உள்ளூர் தானியங்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படாத போதிலும் மக்கள் பஞ்சத்தால் எதிர்நோக்கி ஆடு, மாடு கோழிகள் போன்றவற்றை விற்பதற்கு ஆரம்பித்து விட்டார்கள்.

சாதாரண வருடங்களிலேயே எரித்திரிய மக்களின் நான்கில் மூன்று பகுதியினருக்கு உணவு உதவி தேவைப்பட்டிருக்கிறது. இது தவிர சூடானில் இன்னமும் அகதி முகாம்களிலிருக்கும் 5 இலட்சம் எரித்திரியர்களும்நாடுதிரும்பினுல் நிலமை இன்னமும் மோசமாகும். போதாதற்கு மழை பெய்யக்கூடிய அறிகுறிகளும் இல்லை. புழுதி பறக்கும் உயர்நிலைப் பகுதிகளில் வெப்பம் தகிக்கிறது. யுத்த காலகட்டத்தில் எரித்திரியப் போராளிகளுக்கு மறைவிடங்களைக் கொடுக்கின்றன என்ற காரணத்தால் எதியோப்பிய இராணுவத்தால் பெரும்பான்மையான மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. உண்மையிலேயே சுதந்திரத்தையும், சமாதானத்தையும் சந்தோசமாக அனுகிய எரித்திரிய மக்களுக்கு தவருக விதிக்கப்பட்ட தண்டனை இது.

ஆபிரிக்காவிலே ஒரு அபூர்வமான மக்கள் விசுவாசம் கொண்ட அரசாங்கமே தற்போதைய எரித்திரிய அரசு, இப்போது எரித்திரிய அரசை நடத்துபவர்கள் மூன்று வருடங்களுக்கு முன்னர் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்த போராளிகளாக தோள்களில் ஏ.கே. 47 தன்னியக்க துப்பாக்கிகளை சுமந்து திரிபவர்கள். இதர ஆபிரிக்க நாடுகளின் அரசியல் தலைவர்களைப் போல எரித்திரிய ஜனுதிபதி இசயாஸ் அஃப்வெர்க்கிக்கோ அல்லது அவரது அமைச்சர்களுக்கோ பெரிய பளிச்சிடும் கார்களுடனே, அடிக்கடி ஐரோப்பிய சுற்றுலா மேற்கொள்வதிலோ பரிச்சயம் கிடையாது. இடைக்கால அரசின் பல அமைச்சர்கள் ஊதியம் எதுவும் வாங்காமலே இன்னும் பணிபுரிகிருர்கள். அதுமட்டுமல்ல இந்த அமைச்சர்களில் பலர் குறைந்த பட்ச உணவு உதவிகளை எடுப்பதற்குத்தான் முனைகிருர்கள்.

இம்முறை எரித்திரியா ஒரு வித்தியாசமான யுத்தத்தை இயற்கையிடம் எதிர்கொள்ள வேண்டி வந்துவிட்டது.




**தி. உமாகாந்தன்**

www.tamilarangam.net

இருந்தாலும் இந்த யுத்தத்தை எரித்தியா சமாளிக்கும். காரணம் எரித்தியாவின் உண்மையான வளமே, வலிமை பொருந்திய அதன் மக்களாகும். 30 வருடங்களாக நடந்த மிக மோசமான யுத்தகாலகட்டத்தில் எதியோப்பிய படையினரின் மிலேச்சத்தனமான குண்டு வீச்சுக்களிலிருந்து தமது அன்றாட வாழ்க்கையை மட்டுமல்ல எதிர்காலத்தையும் பாதுகாத்துக் கொள்ள எரித்திரிய மக்கள் நிலத்துக்கு கீழே பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஆயுத தொழிற்சாலைகள் போன்றவற்றை தமது கடுமையான உழைப்பினால் அமைத்தனர். இந்த வருடம் தமது அயராத உழைப்பின் மூலம் 25% புதிய விவசாய நிலங்களை ஏற்படுத்தியுள்ளனர். செய்கின்ற வேலைக்கு ஊதியமாக உணவு எனும் திட்டத்தின் கீழ் பெருந்தொகையான கிராம மக்கள் பங்கு கொண்டு ஏராளமான சிறிய அணைக்கட்டுக்களையும் சமவெளிகளையும் அமைத்தனர். விரைவில் ஆட்குறைப்பு செய்யப் படவிருக்கும் உறுதிவாய்ந்த ஒரு இலட்சம் பேரைக் கொண்ட எரித்திரிய இராணுவம் புதிய வீடுகளை அமைப்பதிலும் குன்றுப் பகுதிகளை உடைத்து சமதரைப்படுத்துவதிலும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. சென்ற வருடம் குன்றுப்பகுதிகள் உடைக்கப்பட்டு 41 ஆயிரம் கிலோமீற்றர் சமதரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என அரச புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. அது மட்டுமல்ல எதியோப்பிய இராணுவத்தால் மரங்கள் அழிக்கப்பட்டதால் இப்போது ஏற்பட்டிருக்கும் நிலையை கருத்தில் கொண்டு 22 மில்லியன் செடிகள் வளர்க்கப்படுகின்றன. இவை விரைவில் உயர்நிலப் பகுதிகளில் நாட்டப்படும்.

ஆனால் கடுமையான உழைப்பு மாத்திரம் எரித்திரியாவின் பிரச்சனைகளுக்கு முடிவைத் தந்துவிடும் என எரித்திரிய அரசு நினைத்து விடக்கூடாது. விடுதலை அமைப்பு என்பது வேறு அரசு என்பது வேறு ஒரு பிரச்சனைக்கான பல முனைத் தீர்வுகளை அரசு பரிசீலிக்க வேண்டும். நாட வேண்டும் . உதாரணமாக எரித்திரியாவில் சிறந்த நீர்ப்பாசன அமைப்புக்கள் இருந்த போதும், உரங்களும் விதைகளும் இருந்தபோதும் எரித்திரியா முழுவதற்கும் தேவையான உணவை எரித்திரியாவிலேயே உற்பத்தி செய்து கொள்ளலாம் என அரசு நினைத்ததால் அது பெரிய கனவேயாகும். அரசாங்கம் நிதானித்து பொருளாதார ரீதியாக திட்டமிட வேண்டும் எரித்திரிய மக்கள் 80% மானோர் விவசாயிகள் என்பதனால் உணவு இறக்குமதி செய்யக் கூடாது என்பதல்ல. எரித்திரியாவில் உற்பத்தி செய்ய முடியாத உணவுப் பொருட்களை வெளிநாடுகளில் வாங்குவதில் தவறில்லை என்பதை அரசு உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

சுதந்திரத்திற்கான யுத்தத்தின் முன்னர் எரித்திரியாவில் சில வளமான கைத்தொழில் துறைகள் இருந்தன. இவை இத்தாலிய காலனித்துவ காலகட்டத்தில் தொடங்கப் பட்டன. எரித்திரியாவின் நேர்த்தியாக செய்யப்பட்ட காலணிகள், அருமையான கம்பளிப் பின்னல்கள் மாத்திரம் பிரபல்யமானவை அல்ல. இத்தாலிய கட்டட நிர்மாணத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்ட எரித்திரியாவின் தலைநகரமான அஸ்மராவும் அதன் சிறு கடைகளும் செங்கடலின் கரையோரமும் உல்லாசப் பிரயாணிகளை கவர்ந்திழுக்கக் கூடியவை ஆனால் அதற்குமுன்னர் செங்கடற் கரையோரமுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும். அதுபோலவே கைத்தொழில்துறை வளர்க்கப்பட வேண்டுமானால் யுத்தத்தினால் சேதமடைந்து போயிருக்கும் மசாவா துறைமுகம் திருத்தப்படவேண்டும்.

புதிய நாடாகிய எரித்திரியாவில் தனித்து நின்று இவற்றை செய்யமுடியாது. இதற்கான சர்வதேச உதவிகள் எரித்திரியாவுக்குத் தேவை. எரித்திரிய அரசின் கணிப்பீட்டின்படி புனரமைப்புப் பணிகளுக்கு குறைந்த பட்சம் 2 பில்லியன் டொலர்கள் தேவை எனக் கருதப்படுகிறது எரித்திரியாவுக்கு சர்வதேச நிதி நிறுவனத்துடன் எந்த ஒப்பந்தமும் கிடையாது. உலகவங்கி இதுவரை எரித்திரியாவுக்கு எந்த பணக்கொடுக்குமதியும் செய்யவில்லை. இந் நிலையில் உலகின் செல்வந்த நாடுகளின் காதுகளில் எரித்திரியாவின் கோரிக்கை விழுமா? தமது சொந்த நலன்களைக் காக்கவும் தம்மை உலகின் பொலிஸ் காரர்களாகக் காட்டவும் வெளிநாடுகளில் பில்லியன் கணக்கான டொலர்களை விரயம் செய்யும் செல்வந்த நாடுகள் இந்த இளைய தேசத்தின் குரலுக்கு செவி சாய்க்குமா? இருப்பினும் வலிமையுள்ள எரித்திரிய மக்கள் எழுந்து நிற்பார்கள்.


**விற்பனைக்கு**
**டிப்பன்னர்**

**பேக்கரி, பியர், வைன்**

**மொன்றியலில் Busy மெட்ரோ முன்பாக**

**விபரங்களுக்கு**
**514-739-9938**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜேவிபியின் பெயருள் மறைந்திருந்த கரும்பூனைகள் உடுகம்பொலவின் அம்பலப்படுத்தல்

1989 பொதுத் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையிலும் இக் காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் அனைத்தும் ஜேவிபி யினுல் நடாத்தப் பெற்றவை அல்ல எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. தேர்தல் ஆணையாளர் தனது அறிக்கையில் இவ்வாறு கூறுகிருர். "இக் கோர நிலமைகளின் கீழ் அநுராதபுரம் போன்ற சில மாவட்டங்களிலிருந்து கிடைத்த அறிக்கைகளின்படி இப் பயங்கர சம்பவங்களுக்கு பொறுப்பாளிகள் பொதுவாக அறியப்பட்ட சீர்குலேவாளர்கள் அல்ல என தெரியவந்துள்ளது. இது ஆச்சரியமான விடயமாகும். இது தேர்தல் மோசடிக்கென்றே ஒழுங்கு செய்யப்பட்ட வேலேயோ என இருந்த சந்தேகம் பின்னர் உறுதி செய்யப்பட்டு விட்டது." (இலங்கையின் 9 வது பாராளுமன்றத்தின் பொதுத் தேர்தல் பற்றிய தேர்தல் ஆணையாளரின் அறிக்கை 134ம் பக்கம்)

"அனுராதபுர மாவட்டத்தில் இருந்து அறிவிக்கப்பட்ட இவ்வாருன சம்பவங்கள் மிகவும் வெறுப்புக்குரியவை. சில பொலீஸ் உத்தியோகத்தர்கள் நேரடியாகவே இவ்வாருன விவகாரங்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டும் உண்டு." (அதே அறிக்கை 252 ம் பக்கம்)

தேர்தலுடன் தொடர்பான வன்செயல்கள் மட்டுமன்றி வேறு சம்பவங்களும் எவ்விதகுறைவுமின்றி இக்காலகட்டத்தில் இடம் பெற்றன. ஆனுலும் தேர்தலுடன் தொடர்பான வன்செயல்களே பிரபல்யமான முறையில் வளர்ச்சி பெற்றன. ஜனுதிபதி தேர்தலுடன் ஒப்பு நோக்கும் போது பொதுத்தேர்தலில் வாக்களிப்பு எட்டு வீதம் அதிகமாகவிருந்தது. நிலவிய சூழ்நிலேயின் கீழ் யூஎன்பி கட்டாயமாக வெற்றிபெறும் என்றும் நிலேயே காணப்பட்டது. யூஎன்பி 110 தொகுதிகளிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 58 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. தேசியப்பட்டியலில் இருந்து நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்த்து யூஎன்பியில் 125, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் 67 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். வாக்களிப்பைப் பொறுத்த வரையில் 88 ஜனுதிபதி தேர்தலேயும் விட கூடுதலான வாக்குக்களே யூஎன்பி பெற்றபோதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பெற்ற வாக்குகள் ஜனுதிபதி தேர்தலேவிட குறைவாகவே இருந்தது. எவ்வாருயினும் யூஎன்பிக்கு 2/3 பாராளுமன்ற பெரும்பான்மை கிடைக்காததும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட எதிர்க்கட்சியினருக்கு முன்னேய பாராளுமன்றத்தில் இருந்ததைவிட கூடுதலான பிரதிநிதித்துவம் பெற்றதும் ஒரு விதத்தில் நன்மை என்று கூற முடியும்.

பொதுத் தேர்தலின் பின்னர் நிலமை மேலும் மோசமடைந்ததே தவிர தளர்வு அடையவில்லே. ஆனுல் பொதுத் தேர்தலுக்கு பின்னரான காலம் ஜேவிபிக்கு அவ்வளவு நல்லகாலமாக அமையவில்லே. அதே அரசாங்கமான போதிலும் மேலும் ஆறுவருடகாலத்துக்கு ஆட்சி அதிகாரத்தைப் பெற்று ஒரு வகையிலான நிலேயான தன்மையை ஏற்படுத்தியதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றத்துள் 67 உறுப்பினர்களேப் பெற்று முன்பு இருந்ததைவிட கூடிய பலத்தைப் பெற்றதும் ஜேவிபிக்கு அவ்வளவு நன்மை அளிப்பதாக இருக்கவில்லே. விசேடமாக அரசு இயந்திரத்துள் அரசாங்கத்தின் இருப்புத்தொடர்பாக நிலவிய இருமனநிலே அற்றுப்போனது ஜேவிபிக்கு பாதகமாக அமைந்தது. அவ்வாறே அரசாங்கம் எந்நேரத்திலும் கவிழலாம் என மக்கள் மத்தியில் நிலவிய உணர்வும் இந் நிலமைகள் ஜேவிபியின் முன் பயணத்திற்கு தடையாக அமைந்த பிரதான காரணிகளாகும். ஒரு புறம் இந்நிலமைகளே விளங்கிக்கொள்ள ஜேவிபியினுல் முடியவில்லே. மறுபுறம் ஜேவிபி இம்சை நடவடிக்கைகளுக்கூடாக போயிருந்த தூரத்தின்படி இந்நிலமைகளே விளங்கியிருந்தாலும் கூட அதே நடவடிக்கைகளுக்கூடாக பயணம் செய்வதைத் தவிர வேறு ஒரு செயல் முறைக்கு மாறும் ஆற்றலும் அதற்கு இருக்கவில்லே. கடைப்பிடித்த பாதையை கைவிடுதல் என்பது அவர்கள் கட்டி எழுப்பியிருந்த வெளித்தோற்ற ரீதியான சக்தி அழிந்து போகும் என்பதாகும். இதனுல் தமது அரசியல் மூலமாக தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த இம்சை செயல் முறைகளேயே அவ் நிச்சயித்த காலகட்டத்திலும் மேலும் பரவலாகவும் வேகமாகவும் முன்னெடுத்துச் செல்ல நேரிட்டது. அது மட்டுமன்றி இச்செயல் முறைகள் பெற்றுக்கொடுத்த மாயை வெற்றிகளால் மோகனமடைந்திருந்த ஜேவிபி அரசு அதிகாரத்தை இலகுவாக கைப்பற்றலாம் என்னும் அதி எதிர்பார்ப்புடன் அச் செயல்முறைகளேயே கட்டி அணேத்துக்கொண்டது.

## வடக்கின் ஆயுதக்குழுக்களுடன் ஜேவிபி தொடர்புகளே ஏற்படுத்திக் கொள்ளல்

வடக்கின் ஆயுதக் குழுக்கள் தொடர்பாக உக்கிரமமான எதிரிக் கண்ணேட்டத்தைக் காண்பித்ததோடு வடக்கின் ஆயுதக் குழுக்களுடன் தொடர்புகொண்டுள்ளார்கள் எனக் குற்றம்சுமத்தி துரோகிகள் "மண் நிறப் புலிகள்" என நாமம் சூடி ஜேமிஸ் அத்துகல போன்ற இடதுசாரிகளே பச்சையாக படுகொலே செய்வதற்கு ஜேவிபி தமது ஆயுத பிரிவையும் ஈடுபடுத்தியது. ஜேவிபி வெளிப்படையாக இவ்வாருகப் பிரச்சாரம் செய்தாலும் இரகசியமாக வடக்கின் சில அமைப்புகளுடன் தொடர்புகளே ஏற்படுத்த செயல்பட்டது. இது ஒருவருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம், ஆனுல் ஜேவிபியின் யதார்த்தத்தை விளங்கிக் கொண்ட எவருக்கும் ஆச்சரியமான ஒன்றல்ல.

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னுன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ. லோகநாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொண்டமானைத் தாறுமாறாகத் தாக்கியும் அரசாங்கத்துடனோ அல்லது தொண்ட மானுடனோ எவ்வித இரகசிய பேச்சுவார்த்தைகளையும் நடாத்த மாட்டோம் என சத்தியம் செய்து கூறிய ஜேவிபி சிறிது காலத்தில் தொண்டமானுடன் பல தடவைகள் பேச்சு வார்த்தை நடாத்தியது இன்று எவருக்கு தெரிந்த இரகசியமாகும்.

விடுதலைப் புலிகளுடனும் புளொட் உடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள ஜேவிபி முயற்சித்தது. இவ் இரு அமைப்புகளும் இந்திய விரோத நிலைப்பாட்டை அடைந்திருந்ததே இதற்கான அடிப்படைக்காரணமாகும். ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள், புளொட் ஆகிய இரு அமைப்புகளையும் கடும் கோபத்துடன் தாக்கிய ஜேவிபி படிப்படியாக இவர்கள் மீதான தாக்குதல்களைக் குறைத்துக் கொண்டது. இதற்கு சமாந்தரமாக நீசுடுகு போன்ற அமைப்புகள் மீதான தாக்குதல் வேகப்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த ஜேவிபி யினால் முடிந்ததா என்பதை எம்மால் திட்டவட்டமாகக் கூறமுடியாது. யால, குமன அண்மித்த பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் ஜேவிபி அங்கத்தவர்களுக்கு யுத்தப் பயிற்சி வழங்கியதாக பலவித தீய வதந்திகள் பரவியபோதிலும் இதுபற்றி நிச்சயமாக ஏதும் கூறுவது கடினமானது. ஆனாலும் பிற்காலத்தில் கேரள பிராந்திய பிரதான பத்திரிகைகளில் ஒன்றான "தாய்நாடு" செய்திப் பத்திரிகையின் K.S.K. குஷிம்பும் நடாத்திய உரையாடலின போது விடுதலைப 'புலிகளும் ஜேவிபியினரும் இந்திய சமாதானப் படைககு எதிராக இணைநத நடவடிக்கைகளை மேற்கொண்டதாக பிரபாகரன் கூறியதாக தெரியவந்தது. விடுதலைப் புலிகளுடன் ஜேவிபி தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டது பற்றிய உண்மைகள் எதுவாயினும் புளொட் இயக்கத்துடன் நிச்சயமாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. இவ் இரு அமைப்புகளாலும் உரையாடல்களுக்கு ஜேவிபியின் சார்பில் கலந்து கொண்ட மத்திய குழு உறுப்பினரின் பெயரை திட்ட வட்டமாக கூறமுடியாவிட்டாலும் புளொட் இயக்கத்தின் சார்பில் உமா மகேஷ்வரனும் கலந்து கொண்டார். ஜேவிபிக்கும் புளொட்டுக்கும் இடையேயான பேச்சுவார்த்தை களின்போது எஸ்.டி.பண்டாரநாயக அவர்களே தரகராக கலந்து கொண்டார். எஸ்.டி. பண்டாரநாயக அவர்களது வீட்டில் நடைபெற்ற உரையாடல்கள் பலவற்றுக்கும் உமா மகேஷ்வரன் உட்பட்ட சில புளட் பிரதிநிதிகளும் ஜேவிபியின் தலைமை மட்ட பிரதிநிதிகள் சிலரும் கலந்து கொண்டனர். இவ் உரையாடல்களின் பின்னர் கம்பஹாவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உமா மகேஷ்வரனும் உரை நிகழ்த்தி யுள்ளார். புளொட் இயக்கம் ஒரு புறம் ஜேவிபியுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த போதிலும் ஏனைய இடது சாரிகளுடனான தொடர்புகளை தொடர்ந்தும்பேணியது. ஆனால் ஒன்று இரண்டு குழுக்களைத் தவிர ஏனையோருக்கு இத் தொடர்பு அம்பலமாகாமல் இருப்பதில் கவனம் செலுத்தினர். ஜேவிபி யுடன் இணைந்து செயல்படுவது தொடர்பாக புளொட் இயக்கத்துள் கருத்து வேறுபாடு நிலவியது என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். புளொட் இயக்கத்தின் இராணுவ பிரிவின் தலைவர் மாணிக்கதாசன் இவ்வாறான ஐக்கியத்திற்கு விருப்பத்தை காண்பிக்கவில்லை. உமா மகேஷ்வரன் அவ் ஐக்கியத்திற்கு ஆதரவாக இருந்தது மட்டுமல்ல இயக்கத்துள் நிலவிய எதிர்ப்பையும் கவனத்தில் கொள்ளாமல் ஜேவிபியுடன் ஐக்கியத்தை ஏற்படுத்தவே செயல்பட்டார்.

இந்திய விரோத நிலைப்பாட்டை கொண்ட ஜேவிபி யுடன் இணைந்து இந்தியாவுக்கு எதிராக செயல்படுவது பரவாயில்லை என்னும் கருத்தே புளொட் இயக்கத்துள் நிலவியது. ஜேவிபி இனவாத அடிப்படையில் செயலபட்டாலும பலம வாயநத எதிரிக்கு எதிராக அதனுடன் இணைவது உபாய ரீதியில் தவறற்றது என்றே உமா மகேஷ்வரன் தர்க்கித்தார்.

கண்ணிவெடி நுட்பத்தை புளொட் மூலமாகவே ஜேவிபி பெற்றுக் கொண்டது என சிலர் கூறினர். அது உண்மையாக இருக்கலாம். ஆனாலும் அதுபற்றி திட்டவட்டமாக கூறுவது இப்போதைக்கு கடினமானது. எவ்வாறாயினும் புளொட் இயக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி சில காலத்துள் ஜேவிபி கண்ணி வெடிகளைப் பாவிக்கத் தொடங்கியது என்பதை குறிப்பிட வேண்டும். 1989 ஏப்பிரல் தொடக்கம் தெற்கில் அங்கும் இங்குமாக குண்டுகள் வெடிக்கத் தொடங்கின. வீரவில, ஊறுபொக்கை, அங்குணகொல பெலெஸ்ஸ ஆகிய பிரதேசங்களிலும் கண்ணிவெடிகள் வெடித்தன. சிங்கள தமிழ் புதுவருடம் அண்மிக்கும் போது வீரவில, ஹம்பிங்கம ஆகிய இரு இடங்களிலும் வெடித்த இரு கண்ணி வெடிகளால ஆறு பொலீசார் கொலலப்பட்டதோடு பதினேழு பொலீசார் காயமடைந்தனர். ஜனாதிபதி பிரேமதாச ஜேவிபிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேச்சு வார்த்தைக ளுக்காக அழைப்பு விடுத்தார்.

ஜேவிபி யினரும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்து போராடுவது அவர்கள் சமூக, பொருளாதார அரசியல் அநீதிகளுக்கு உட்பட்டிரு ப்பதாலேயே என 1989 ஏப்பிரல் 1ம் திகதி கிராந்துரு கோட்டே என்னும் இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி பிரேமதாச அரசாங்கத்துன் பேச்சுவார்த்தை நடாத்த வாருங்கள் என ஜேவிபிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுத்தார். ஜேவிபியினர். ஆயுதங்களை கீழே போடுவார்களாயின் அவர்களுக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்குவதற்காக தமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் விலகுவதற்கும் தயார் எனவும் மேலும் பிரேமதாச கூறினார். ஆனால் ஜேவிபி இக் கோரிக்கையை நிராகரித்தது.

"மக்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்வதற்காககிராந்துருகோட்டேயில் சட்டவிரோத ஜனாதிபதி ஆற்றிய உரை" என்னும் தலைப்பில் கமனாயகவின் ஒப்பத்துடன் ஜேவிபி வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் நாம் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்காத ஜனாதிபதி நாம் பதிலை எதிர்பாரககிறோம என அவா எண்ணிய கேள்விகள் சிலவற்றுக்கு பதில் கூறியுள்ளார்.' எனவும் 'ஜேவிபியுடன் தொடர்பானவர்கள் எனச் சந்தேகிக்கப்படுகின்ற 1500 பேரை கொல்வதற்கு ஜனாதிபதியின் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கட்டளை இட்டுள்ளார் எனவும் கூறியதோடு இவ் அரசாங்கம் முந்திய அரசாங்கத்தைவிட எவ்விதத்திலும் வேறுபட்டது அல்ல, நாட்டினதும் மக்களதும் சுதந்திரத்தையும் உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டவும் இன்றைய ஆட்சியாளரை துரத்துவதற்காக போராட்டத்தை தொடர்ந்தும் நடாத்துவதாகவும்மேலும் அவ் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அவன்..

சில நேரங்களிலை முட்டு மாதிரியும் இருந்தது. அதை நான் பெரிசு படுத்தேலை இஞ்சை வந்தவுடனே இமிகிறேசனுக்கு 'எக்ஸ்றே' எடுத்த நேரத்திலை டொக்டர் நெஞ்செரிவு இருக்குதோ மயக்கம் வாறதோ எண்டெல்லாம் கேட்டவர். அப்ப என்னோடை வந்த சதா அண்ணை சொன்னார் இதை இவங்கள் எல்லாரிட்டையும் கேக்கிறவங்களெண்டு......"

எங்களுக்கு முன் இருந்த ஒரு பெண் "எக்ஸ்சியூஸ் மீ" என்று சொல்லிக் கொண்டு எங்கள் கால்களை உரஞ்சிக்கொண்டு எங்கள் ஆசனத்தைக் கடந்து சென்று தரிப்பில் இறங்கினாள். நானோ பேயறைந்தது போல் இருந்தேன்.

"பிறகு?" இது நான்

"பிறகு எனக்கு நெஞ்சுக்குத்து வந்து மயங்கி விழுந்திட்டேன். என்னோடை இருந்த பொடியங்கள் அவங்கள் இப்ப திக்குத் திக்கா போயிட்டாங்கள் அவங்கள் எமேஜன்சிக்கு கொண்டு போனப் பிறகு அங்கை எடுத்த ரெஸ்டுகளிலை இருந்து தான் இந்த வருத்தம் தெரிய வந்தது."

"இந்த நாட்டிலை இல்லாத வசதியா? இதுக்கேன் சாகப்போறன் அது இதெண்டு பயப்படுறீர்?" ஆக நான் சொல்லக் கூடிய வசனத்தைச் சொன்னேன்.

"அப்படித்தான் நானும் முதல் நினைச்சனென்.. இப்ப ஒரு வருசமாச்சு எத்தனை ஸ்பெசலிஸ்ற் எல்லாம் பாத்திட்டினம் எல்லாரும் மணடையைப போட்டு உடைக்கினம மருந்தெல்லாம் தாருங்கள் அது இந்த வருத்தத்தை மாத்திறத்துக்கில்லை"

"அப்ப?" நான்

"ஹாட் வீங்கிக் கொண்டு வந்தால் நுரையீரல் அதுகள் இதுகளையெல்லாம் நெருக்குமாம். இதனாலை எனக்கு நெஞ்சு எரியும் மரணவேதனை. இதைக் குறைக்கிறதுக்கும் நித்திரை வாறத்துக்கும் தான் மருந்து."

என்குத் தலையில் பாரம் ஏறினதுபோல் இருந்தது நெற்றியைத் கசக்கிக் கொண்டேன்.

நாங்கள் இறங்கி அடுத்த குகை ரெயிலுக்கு மாற வேண்டிய தரிப்பு வந்தது. இறங்கிக் கொண்டோம் உடனே அடுத்த இரயிலும் வர அதில் பயணித்தோம்- இதுவரையும் இருவரிடையும் மௌனம்தான் காவல் நிக்க சிந்தனைகள் மட்டும் சவாரி செய்து கொண்டது அவரவர்க்குத்தான் புரியக் கூடியது.

மௌனக் காவலை மீற நான் தான் முதலில் வந்தேன். "இந்த விசயங்களை யெல்லாம் நீர் ஏன் ஷிராணியிட்டை சொல்லேல்லை? அதை நீர் சொல்லியெல்லோ இருக்கோணும்."

"இதையெல்லாம் நான் யோசிக்கேல்லையெண்டு நினைக்கிறீரே?" முக்கியமா அவவுக்குத் தெரியக் கூடாதெண்டதுதான் என்ரை அபிப்பிராயம்"

"உமக்கென்ன விசரே! அவ உம்முடைய வருங்கால மனிசியல்லே"

"வருங்காலம் மட்டுமில்லை நாங்கள் 'லவ்' பண்ணி ஆறு வருசம் ஆனா அவின்ரை சந்தோசத்தைக் குழப்ப நான் விரும்பேல்லை"

"என்ன கதை கதைக்கிறீர்? கலியாணத்துக்கு ஆறு நாளிருக்கு, உமக்கு ஏதும் நடந்திடுமெண்டும் சொல்லுறீர். அந்தப் பிள்ளையின்ரை நிலமையை யோசிச்சீரா?"

வசி புன்னகை மட்டும் உதிர்த்தான் நான் நிதானிப்புடன் தொடர்ந்தேன்.

"இல்லை எனக்கு விளங்காமலில்லை உமது கேர்ல் பிரண்டிலை உமக்கு அக்கரை இருக்குத்தான் அதைவிட எங்களுக்குக் கரிசனையா எண்டு நீர் சிரிக்கிறது விளங்காமல் இல்லை. ஆனாலும் குழந்தை குட்டியெண்டு வந்தப் பிறகு அவ தனிச்சுப் போனா?"

"அருண் நீரும் மற்றாக்கள் கதைக்கப் போற பாணியிலதான் கதைக்கிறீர். நீங்கள் சாவை எண்ணிக் கொண்டிருக்கிற ஆக்கள் இல்லை. கதைப்பிங்கள். நான் ஒவ்வொரு நாளும் படுக்கப் போக முதல் இண்டைக்கு சாகாமல் தப்பிட்டன் எண்டு நினைச்சுக் கொள்ளுறவன். உங்களுக்கும் எனக்கும் வித்தியாசமிருக்கு" நான் மௌனித்துக் கொண்டேன்

நாங்கள் இறங்க இன்னும் இரண்டு ஸ்ரேசன் இருக்கு.

வசிகரன் தொடர்ந்தான்.

"அருண் மற்றாக்கள் என்ன கதைச்சாலும் எனக்குக் கவலையில்லை சில விசயங்களை நான் தீர்மானிச்சது தான். என்னைப் பொறுத்த வரை நான் கெதியில சாகப்போறவன்தான்.....".

(எனக்கு மீண்டும் பகீர் என்றது)

"நான் ஷிராணிக்கு இதைச் சொன்னால் கூட அவ என்னைவிட்டு வேறாளை கட்டப்போற ஆளில்லை. ஆனா அவவுக்கு கவலை வரும் என்னோடை வாழேலாதுமெண்டுதான் நிப்பா. ஆனா நான் சொன்னதிலை இருந்து செத்தப்பிறகு கவலை இருக்கும்"

நான் குறுக்கிட்டேன். "பிளீஸ் சாகிற சாகிற எண்டு சொல்லாதையும்" எனக்கு கண்கள் கலங்கிப் போனது. வசியும் கண் கலங்கினான். பெருமூச்சுடன் தொடர்ந்தான். "ஆனா சொல்லாம மறைச்சா கலியாணத்தாலை அவவுக்கு எவ்வளவு சந்தோசம் இருக்கும். அந்த சந்தோசத்தை பாக்கிறதே எனக்குப் போதும் பிறகு என்ன நடந்தாலும் எனக்கு தெரியப்போறதில்லை. கலியாணத்தை நாங்க

## காசும் கடிதமும்..

போடச்சொன்னவா என்று சேனாதி அடிக்கடி கடிதம் போட்டான். போடும்போதும் முத்திரைக் காசை முப்பத்தியாறால் பெருக்கி மனம் நொந்தான். வந்த புதிதல்லவா?

கடிதம் வந்தது. சின்னாச்சிப் பிள்ளை சொல்ல, பக்கத்து வீட்டுப் பெண் எழுதியிருந்தாள். 'அடே, குறுக்காலை போவானே.. உன்ரை கடிதத்தை வைச்சு நான் என்ன செய்யிறது? வட்டிக்காசும் பங்க வந்திட்டுது. உடன காசு அனுப்பு' சேனாதிக்கு வெறி முறிந்தது. இதென்னடா? கடிதம் போடச் சொல்லிச்சு மனிசி, காசு வேண்டாம் எண்டு. இப்ப இப்பிடி கதைக்குது.

சேனாதி றூம் மேட்டுகளிடம் சீட்டுப் பிடிச்சு முதல் சீட்டை எடுத்து 'லொட்'டாய் அனுப்பினான். காசு சேர்ந்ததும் சின்னாச்சிப் பிள்ளையின் கடிதம் வந்தது. என்ரை ராசா.. காசு எங்களுக்கு என்னத்துக்கு.. நீ ஒழுங்காய் கடிதம் போடப்பு..

கொஞ்ச நாள் கடிதம்... பதிலாக 'நாசமறுவானே.. வட்டிக் காசுக்கு நான் எங்க போறது' சேனாதிக்கு கனடா பிடிபட்டு விட்டது. இப்போது அவன் காசும் அனுப்புவதில்லை, கடிதமும் போடுவதில்லை.

சின்னாச்சிப் பிள்ளை இப்போது கடிதம் போடுவதை விட்டு மண் அள்ளித் திட்டிக் கொண்டிருக்கிறா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடத்திறதாலேயும் ரெண்டு பேருக்கும் எதுவும் பிரயோசனமில்லே சுயநலம் எண்டு நினைக்காதையும். ஷிராணி எனக்கெண்டே இருப்பவ. நான் இருக்கிற வரை அவ எனக்கெண்டே இருக்கோணும் இதுக்கு மேலே நான் கதைக்க விரும்பேல்லே நீர் என்ன நினைச்சாலும் நினையும்"

வசி ஆசனத்தில் சாய்ந்து கொண்டான் எனக்கு எதுவும் கதைக்கத் தோன்றவில்லே.

"எனக்கு தலே சுத்துற மாதிரி இருக்குது. கனக்கப் பதட்டப்பட்டால் இப்படி வரும், தயவு செய்து என்னட்டை எதுவும் கேக்காதையும்" நான் பயந்து போனேன். என்னடா இது!

என்னுலே எதுவும் நடந்தால் ... எனக்குப் பயம்வந்தது. நான் பேசாமல் இருந்தேன். நாம் இறங்க வேண்டிய இடம்வந்தது. வசி என்னைப் பிடித்துக் கொண்டு இறங்கினுன். அங்கே ஒரு ஆசனத்தில் அமர்ந்தோம். சிறிது நேரத்தின் பின் வசி தெம்பாகிவிட்டான். எனக்கு போன உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது.

குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு அரை மணித்தியாலம் முன்பே வந்துவிட்டோம் வைத்தியசாலேக்கு இன்னும் இரண்டு நிமிட நடை இருந்தது. நடந்தோம். குளிர் எனக்கு அவ்வளவாக உறைக்கவில்லே. வைத்தியசாலேக்கு சென்று நிரப்ப வேண்டியவற்றை நிரப்பிவிட்டு காத்திருந்தோம். இருவரும் ஏதும் பேசிக் கொள்ளவில்லே. வசி பழைய நிலமைக்கு மாறியிருந்தான். திருப்தியாய் இருந்தது. ஐந்து நிமிடங்களில் மூன்று வைத்தியர்கள் வந்து இவனே அழைத்துக் கொண்டு போனுர்கள் ஒரு நிமிடத்தில் ஒரு வைத்தியர் கொஞ்சம் வயதானவர் திரும்பவும் வந்தார். எனக்குக் கை கொடுத்துக் குலுக்கி தன் பெயர் சொன்னுர். பெயர் நினைவில் இல்லே "பயப்பட ஒன்றும் இல்லேர வசிகரன் பற்றி ஒருவித ஆராட்சிதான் இது இதில் சில மாணவ வைத்தியர்களும் கலந்து கொள்கின்றனர்." என்ருர்.

"எவ்வளவு நேரமாகும்? என்றேன்

"மூன்று மணித்தியாலங்கள். போய்விட்டு மூன்று மணித்தியாலங்களின் பின்பும் வந்தாலும் சரியே" என்றுவிட்டு நகர்ந்து விட்டார்.

நான் எங்கு செல்லவும் அலுவல்கள் இல்லே. வசி சொன்ன வசனங்களே மீட்டெடுத்து அலசிக் கொண்டிருந்தேன். அவன் சாகப் போறன் என்று சொன்னது என் இதய இடுக்கில் ஏதோ செய்தது. வசிக்கும் ஏதும் நடந்தால் ஷிராணிக்கு ஏற்படப் போகும் நிலமையை எண்ணிப் பார்த்தேன். வசியின் ஒரு பக்கசிந்தனே எரிச்சலூட்டு வதாயிருந்தாலும் நான் இதே நிலேயில் வசி மாதிரி இருந்தால் இப்படித்தான் பேசுவேனு? என்னுல் விடை போட முடியவில்லே. பலதையும் பலவாறு சிந்தித்துப் பார்த்தேன். மூன்று மணிகள் கரைந்து விட்டிருந்தன.

அதே வைத்தியர் மீண்டும் என்னிடம் வந்தார். இன்னும் அரை மணியில் வசியைக் கூட்டிச் செல்லலாம் என்ருர் வசியின் நிலமையைக் கேட்டேன். அவனது இதயம் குருதியை செலுத்தும் அமுத்தம் குறைந்து வருவதாகச் சொன்னுர். அது படிப்படியாக அபாயத்தின் ஆயத்தம் என்ருர். அங்கங்களும் ஏன் மூளேயும் கூட படிப்படியாக செயல் இழக்கும் என்ருர். எனக்கு உண்மையிலேயே அழுகை வந்துவிட்டது. கண்ணீர் திவலேயின் ஊடே அங்கே உலவுவோர் மங்கலாய்த் தெரிந்தனர். தட்டிக் கொடுத்துவிட்டு வைத்தியர் கழன்ருர். மீண்டும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். இப்படி நல்ல பெடியனுக்காக இந்த நிலமை? யாரோ வந்து ஏதோ கேட்டனர். எனக்கு பதில் சொல்ல வார்த்தைகள் வரவில்லே. ஏனே எல்லாம் பாரமாய்ப்போன உணர்வு வார்த்தைகள் பாரமானதாலோ என்னவோ வாய்வழியே உருண்டு வரமுடியாமல் போனது. கண்ணீர் பாரமானதாலோ என்னவோ கண்களில் தங்கிவிடாமல் அது விழுந்து கொண்டன.

வசி வந்துதட்டினுன். நான் கண்களேத் துடைத்துக்கொண்டு எழுந்தேன். கூடவந்த தாதிகள் புன்னகைத்து விட்டுச் சென்றனர். நாங்கள் வீடுநோக்கி ரக்சியில் பயணித்தோம். வசியின் வீடுவரை சென்று வருவதே என் எண்ணம். வசி சொன்னுன்.

"அருண் எனக்கு இப்ப எல்லாம் ஒக்கே. நான் ஷிரானி வீட்டை ஒருக்கால் போகவேணும் உம்மை இறக்கிவிட்டுப் போறன் சரியே"

"இல்லே நான் உம்மை வீட்டிலே இறக்கி விட்டிட்டுப் போறன்."

"சீச்சீ எனக்கு ஒண்டும் பயப்பிடுற மாதிரி இல்லே நீர் யோசிக்காமல் வீட்டிலே இறங்கும் நான் ஷிராணி வீட்டுக்குத்தான் போறன்" இதன் பிறகு நான் ஒன்றும் கதைக்கவில்லே ரக்சி ஓட்டுடனர் பொருளாதார நெருக்கடி பற்றியும் காலநிலே பற்றியும் ஏதோ சொல்லிக் கொண்டான் எங்களுக்கு.

"சரி வசி என்னே அந்தத் தமிழ்க் கடையிலே இறக்கி விடும்.

இறக்கி விட்டனர். இறங்கி கடைக்குள் புகுந்து கொஞ்சம் பலசரக்கு வாங்கிக் கொண்டு குளிருக்குள் இறங்கினேன். வீடு நோக்கி சுவாசப்பைகளுக்குள் குளிர் புகுந்து தாண்டவமாடியது விரல்களெல்லாம் "சுள் சுள்" என்றிருந்தது. அந்த விரல்களினுல் கதவுப் பூட்டைக் கூடத் திறக்க முடியாது போனது. மணி அடிக்ககுணு அண்ணர் தான் வந்து திறந்தார்.

"எங்கை அருண் வசியைக் கூட்டிக் கொண்டு போனனீர்?" பதட்டமாய் கேட்டார்.

நான் கொண்டு வந்த பையையும் எறிந்து விட்டு ஓட்டமாய் ஓடிப்போய் சுடுதண்ணீரில் கையை நனைத்தேன். ஆரோ சொல்லியிருந்தார்கள். இப்படிச் சுடுதண்ணீரில் நனைக்கக் கூடாதெண்டு ஆனுல் எனக்கு சுடுதண்ணீரில் பிடித்தால்தான் திருப்தி- குணு அண்ணரின் பதட்டத்தைக் கூடப்புரிந்து கொள்ள முடியவில்லே.

"என்ன அருண் நான் எவ்வளவு அந்தரமாய் கேட்கிறன்?" குணு அண்ணர் கிட்டவே வந்துவிட்டார். நான் கையை கழுவி காதுகளேயும் நீவியபடி திரும்பினேன்.

"ஏனெண்ணே என்ன நடந்தது?" எனக்கும் பதட்டம் "வசிக்கு இப்படி நடக்குமெண்டு நான் நினைக்கவே இல்லே."

"வசிக்கு என்னண்ணே நடந்தது?

"நான் அறிய அந்தரப்பட்டேன்.

"வசிக்கு ஒண்டும் நடக்கேல்லே. அவன்ரை ஷிராணியல்லோ செத்துப்போச்சாம்...."

"ஷிராணியோ?.. என்ன... என்ன நடந்தது?

எனக்கு நாக்கு இடறுப்பட்டது. நெஞ்சு திக்கிக்என்று அடித்தது.

"நேற்றுப் படுத்த பிள்ளே விடிய எழும்பவே இல்லேயாம். வசியைத் தேடி அதுகள் எங்கையெல்லாம் ரெலிபோன் அடிச்சுத் திரியுதுகள்"

வசி ஷிராணி வீட்டுக்குத்தான் போருன். என்று சொல்ல நான் எவ்வளவோ முயல்கிறேன். எனக்கு குரல் கிடைக்குதில்லே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஞானமும் கல்வியும் பட்டமும் பாராட்டும்

## சி.சிவசேகரம்

அறிவு என்பதைப் பள்ளிப் படிப்புடனும் பட்டங்களுடனும் குழப்பும் மனப்பான்மை நம்மிடையே மிகுதியாக வுள்ளது. ஏட்டுப் படிப்பில்லாதவர்களை அறிவற்றவர்களாகவே பலர் கருதுவார்கள். பல்கலைக்கழகப் பட்டங்கள் ஒருவரை அறிஞராகவோ பேரறிஞராகவோ மேதையாகவோ கருதுமாறு பிறரைத் தூண்டுவன. யாழ்ப்பாணச் சமுதாயம் தன் அரசியற் தலைமைக்குப் படித்தவர்களையும் கெட்டிக்காரர்களையுமே நெடுங்காலமாக நம்பியிருந்தன. படிப்பு என்பது உயர் கல்வியாகவும் கெட்டித்தனமென்பது சட்டம், மருத்துவம் போன்ற துறைகளில் வெற்றியாகவும் காணப்பட்டன. இலங்கையிற் பிற பகுதிகளிற் பல்கலைக்கழகத்திற்கோ சட்டக்கல்லூரிக்கே போகாதவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக முடிந்தளவுக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டிற் சாத்தியமானதில்லை. ஏட்டுப்படிப்புக்கும் ஆசிரியத் தொழிலுக்கும் நாடு முழுவதும் மதிப்பும் மரியாதையும் இருந்தபோதும் யாழ்ப்பாணத்தில் படிப்பும் பதவியும் ஒரு படி அதிக மதிப்பைப் பெற்றே இருந்தன. இது புத்திஜீவிப் பிழைப்பை யாழ்ப்பாணப் பொருளாதாரம் வெகு தூரம் நம்பியிருந்ததால் ஏற்பட்ட ஒரு நிலைமை எனலாம்.

தமிழ்நாடு பெற்ற முதலமைச்சர்களுள் நேர்மையாகவும் புத்தி சாதுரியத்திலும் செயற் திறமையிலும் எவருடனும் ஒப்பிடத்தக்கவராயும் இருந்த காமராஜ் தனது பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே நிறுத்தியவர். இலங்கையின் தங்க மூளை என வர்ணிக்கப்பட்ட என்.எம். பெரேராவும் கொல்வின் ஆர்.டி. ஸில்வா, பீற்றர் கெனமன் போன்ற திறமைசாலிகட்கும் ஈடுகொடுத்து அரசியற் சதுரங்கத்திற் காய் நகர்த்திய ஸிரிமா பண்டாரநாயக்கவும் பள்ளிப் படிப்பை முழுமைப்படுத்தாதவர் தான். படிக்காமலேயே பல வகைகளிற் தமது திறமையை வெளிப்படுத்தியோர் இருக்கிறார்கள். அந்தப் பட்டியல் மிக நீளமானது. எனினும் அது பள்ளிப்படிப்பையோ உயர் கல்வியையோ தேவையற்றது என நிராகரிப்பதற்கு ஒரு நியாயமல்ல. படிப்பும் அறிவும் அத்தாட்சிப் பத்திரங்களால் மட்டுமே நிர்ணயமாகிறவை அல்ல என்பதை மட்டுமே இங்கு வலியுறுத்த வேண்டும். ஒருவரது அறிவு பாடத்திட்டங்கட்கு வெளியே வாசிப்பதன் மூலமும் அவதானத்தின் மூலமும் பயிற்சி மூலமும் நடைமுறை மூலமும் வளர்கிறது பட்டங்கள் ஒரு குறிப்பிட்ட துறையில் குறிப்பிட்ட ஆற்றங்களை மட்டுமே குறிப்பன. சில வேளை இந்த ஆற்றல் பாடமாக்கி ஒப்பிக்கும் ஒரு கிளிப்பிள்ளையின் ஆற்றலைப் போன்றோ செய்ததைத் திரும்பச் செய்து காட்டும் ஒரு பயிற்றப்பட்ட விலங்கின் ஆற்றலைப் போன்றோ கூட இருக்கலாம் எனினும் இன்றைய சமுதாய அமைப்பில் இத்தகைய ஆற்றல்கட்கான தேவை நிறைய உள்ளது. இந்த ஆற்றல்கள் ஒரு தொழிலுக்குரிய தகுதியாகின்றன. இவை பிழைப்புக்கான வழியைத் தருகின்றன. அவ் வகையில் அவற்றை அவசியமற்றவை என்று பூரணமாக ஒதுக்கி விட முடியாது. ஆயினும் அவை மனிதரின் தகைமையின் அளவுகோல்களாகிட மாட்டா.

எந்தவொரு துறையிலும் திறமையாகச் செயற்பட அடிப்படையான சில ஆற்றல்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அவ் ஆற்றல்களை வளர்க்கக் கல்வியும் பயிற்சியும் அவசியம். ஆயினும் கல்வியினதும் பயிற்சியினதும் முடிவிற் கிடைக்கும் காகிதச் சுருள் ஒருவரது தகுதிக்கும் பூரண உத்தரவாதமல்ல. எந்தவொரு படிப்பும் பயிற்சியும் ஒரு துறையிற் செயற்படுவதற்கான அத்திவாரச் கற்களேயன்றிக் கட்டிடங்கள் அல்ல. சம்பிரதாயமான கல்விமுறையும் பயிற்சியும் மறுக்கப்பட்டோர் வேறு வழிகளிற் கடும் உழைப்பாலும் விடாமுயற்சியாலும் முன்னேறிப் பட்டம் பதவிகள் பற்றி உள்ள மோகமும் ஆற்றாமையும் தாழ்வு மனப்பான்மையும் விளைவிக்கும் அங்கீகாரத்திற்கான தேவை நம்முட் பலரையும் பட்டங்களையும் விருதுகளையும் பாராட்டு விழாக்களையும் நோக்கி உந்துகின்றன.

ஒருவகையில் இலங்கை சமுதாயத்தில் இந்த நோய் தமிழகத்தில் உள்ளளவுக்கு இல்லை. டாக்டர் பட்டத்தின் மீது அரசியல்வாதிகட்குள்ள மோகத்தைத் தமிழகத்தின் பல்கலைக்கழகங்களின் புத்திஜீவிகள் நன்ருக அறிவார்கள். சீரழிந்த ஒரு சமுதாயத்தின் புத்திஜீவிகளும் அந்தச் சீரழிவைப் பிரதிபலிப்பார்கள் என்பதால், பல்கலைக்கழகங்களின் உள் அரசியலின் தேவைகள் பட்டத்திற்கு ஒருவரது தகுதி பற்றிய விதிகளை விட முக்கியமாகி விடுகின்றன. எனவேதான் டாக்டர் கலைஞர் கருணாநிதியும் டாக்டர் ஜெயலலிதாவும் பிறரும் தமிழருக்குக் கிடைக்கிருர்கள். இலங்கையிலும் சில அரசியல்வாதிகட்கு கௌரவ டாக்டர் பட்டங்கள் அரசியல் நோக்கங்களுடன் வழங்கப்பட்டன. இவ்வாறு முதலில் பட்டம் பெற்றவர் டபிள்யூ. தஹநாயக்க. பதியுதின் மஹ்மூதுக்கும் டாக்டர் பட்டம் கிடைத்தது. இருவரும் கூசாமலே தம்மை டாக்டர் தஹநாயக்க, டாக்டர் அல்ஹாஜ் பதியுதின் மஹ்மூத் என அழைத்துக் கொண்டார்கள். பொதுவாக, கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டோர் தம்மை டாக்டர் என அழைப்பதில்லை. எனினும் தஹநாயக்க அதனைப் பாவித்தது பற்றி அவரிடம் நேரடியாக இது பற்றி யாரோ குறிப்பிட்டபோது

***கல்வியென்பது அறிவிற்கான மார்க்கங்களில் ஒன்றேயொழிய அறிவல்ல. அறிவென்பது விஷயங்கள் பற்றிய தகவல்களை மட்டுமே உள்ளடக்கும் வரை குறைபாடனதும் விளக்கமற்றதுமாகும். விஷயங்களைத் தொடர்புபடுத்தும் ஆற்றலும் அறிவை மேலும் விருத்தி செய்யும் திறமையும் ஞானம் தொடர்பானவை நாம் இவற்றுள் எதையுமே ஒருவருக்கு வழங்கப்படும் பட்டம் பதவிகளை மட்டுமே வைத்து மதிப்பிட முடியாது. நம் முன் வைக்கப்படும் விஷயங்களை அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடலை நாம் ஊக்குவிக்க வேண்டும்.***

www.tamilarangam.net

**பட்டங்களையும் பதவிகளையும் பார்த்தும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களாலும் வழங்கப்படும் புகழுரைகள் எந்த ஒரு கலைஞனுக்கும் படைப்பாளிக்கும் நல்லவையல்ல. பொய்ப்புகழ்ச்சி கடுமையான கண்டனத்திலும் தீயது. எந்தவொரு பங்களிப்பும் படைப்பும் ஆக்கபூர்வமான விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுவது அவற்றை அளித்தோரது தரத்தின் உயர்வுக்கு உதவும். பட்டமளிப்புக்களும் முகத்துதியான பாராட்டுரைகளும் சுய திருப்தியை விட வேறெதையும் ஏற்படுத்த மாட்டா.**

நான் பாவிக்க முடியாத பட்டமென்றால் ஏன் அதை எவரும் எனக்குத் தரவேண்டும், அதை நான் ஏன் வாங்க வேண்டும் என்று பதிலடி கொடுத்தாராம். இவ்வாறு ஒருவருக்கு அரசியல் மற்றும் பிற நெருக்கடிகள் காரணமாக ஒரு பல்கலைக்கழகம் வழங்கும் பட்டம் அந்த நபரைக் கௌரவிக்கிறதோ இல்லையோ நிச்சயமாக அது அந்தப் பல்கலைக்கழகக் கல்வி நிர்வாகத்தின் நேர்மையை மிகவும் கேள்விக்கிடமாக்கி விடுகிறது.

தமிழ் நாட்டின் கலை, களியாட்டத் துறைகளில் டாக்டர் பட்டத்திற்கான மோகம் அதிகம். கலைஞர்கள் ஆசைப்படுகிறார்களோ இல்லையோ அவர்கள் மீது டாக்டர் பட்டம் எப்படியாவது சுமத்தப்பட்டு விடும். இசை, நாட்டியத் துறைகளிற் பிரபலமானவர்கள் பலருக்கு டாக்டர் பட்டம் சுமத்தாத பட்சத்தில் ஒவ்வொரு உலகச் சுற்றுப்பயணத்தின் போதும் விசேஷ நிகழ்ச்சிகளின் போதும் ஏதாவது ஒரு மாமணி அல்லது வாணி அல்லது சாகரம் என்று ஒன்று வழங்கப்படும் இன்று வழங்கப்படும் பட்டங்களின் தொகையைக் கருத்திற் கொண்டால், இப்பட்டங்களின் பேர்கட்கு ஒரு அர்த்தமும் இல்லை என்றே சொல்லத் தோன்றும். தேசிய விருதுகளிலும் அரசியல் புகுந்து விளையாடுகிறது. இத்தகைய பட்டங்கள் மூலம் தகுதியற்ற ஒருவர் கௌரவிக்கப்படும் போது அவற்றின் தரம் கௌரவிக்கப்பட்டவரது தரத்துக்கு இறங்கிவிடுகிறது.

பல்கலைக்கழகத்தில் எம்.பி.பி. எஸ் அல்லது அதற்குச் சமமான பட்டம் பெற்ற எந்த வைத்தியரும் 'டாக்டர்' என அழைக்கப்பட்டாலும் 'டாக்டர் (கலாநிதி) பட்டம் பெற்றவர்கட்கே உண்டு. எல்லா வைத்தியர்களும் தங்களை டாக்டர் என்று அழைக்கையில் பிரிட்டிஷ் சத்திரசிகிச்சை வல்லுனர்கள் தங்களை 'மிஸ்டர்' என்று அழைப்பதையே விரும்புகின்றனர். (இது தன்னடக்கத்தின் விளைவானதல்ல. 'நாம் இந்த மருத்துவர்களினின்று வித்தியாசமானவர்கள்' என்று சொல்லும் நோக்கத்தாலேயே இவ்வாறு செய்யப்படுகிறது) நம் நாட்டிலோ எம்.பி.எஸ். பட்டம் பெற்றவர் எல்லாரையும் தாராளமாக வைத்திய கலாநிதி என்று அழைப்போம். பல்கலைக்கழகப் போதனாசிரியர் தன்னை விரிவுரையாளர் என்று சொல்லச் கூசமாட்டார். எல்லா விரிவுரையாளர்களையும் சிரமமின்றிப் பேராசிரியர்களாக்கி விடுகிறோம். தமிழ் நாட்டில் இது மிகவும் சகஜம். இது போலவே மேதை, சங்கீத கலாநிதி போன்ற பட்டங்கள் எளிதாகவே சூட்டப்படுகின்றன.

பத்மா சுப்ரமணியம் நாட்டிய ஆராய்ச்சிக்காக கலாநிதி (டாக்டர்) பட்டம் பெற்றவர். எல்.சுப்பரமணியம் மருத்துவப் பட்டதாரி என்று நினைக்கிறேன். எம்.எல்.வஸந்தகுமாரி கௌரவ டாக்டர். ஜெயலலிதா எல்லா டாக்டர்களையும் பேராசிரியர்களையும் ஆட்டிவைக்க வல்லவர் என்பதால் டாக்டர் பட்டம் பெற்றவர். இந்த இடத்தில், மார்கிரெற் தச்சருக்கு (அவர் நீண்ட காலம் பிரதமராக இருந்த காலத்திலேயே) ஒக்ஸ்ஃபர்ட் பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்க மறுத்ததைக் குறிப்பிடாமல் விட முடியாது. வழங்க வேண்டும் என்று நினைத்தவர்கள் இருந்ததையும் நாம் மறந்து விடக் கூடாது.

பத்மா சுப்பிரமணியத்தின் நடனத் திறமை அவரது ஆராய்ச்சித் திறமையுடன் நேரடியான ஒரு உறவுமற்றது. எல்.சுப்பிரமணியம் டாக்டரோ இல்லையோ உலகில் அவர் போல வயலினைக் கையாளக் கூடியவர்கள் மிகமிக அருமையாகவே இருந்துள்ளனர். வஸந்தகுமாரியின் இசை ஞானத்தை எந்த டாக்டர் பட்டமும் அளவிட முடியுமா? இவர்களெல்லாம் தனித்துவம் வாய்ந்த உன்னதமான கலைஞர்கள். விருதுகளும் பாராட்டுக்களும் விளம்பரங்களும் எட்டாத உச்சங்களை எட்டிய கலைஞர்கள். ஆனாலும் இவர்களை அளவிட முனைகிறவர்களது அளவுகோல்கள் நம்மை மலைக்க வைக்கும் அண்மையில் மஹாராஜபுரம் சந்தானம் இறந்த போது அவருக்கு அஞ்சலி தெரிவித்த கட்டுரை ஒன்று அவர் அமெரிக்காவிலும் , பிரிட்டனிலும் பிற உலக நாடுகளிலும் நிகழ்த்திய கச்சேரிகளையும் பெற்ற பாராட்டுக்களையும் முதன்மைப்படுத்தி இருந்தது. கர்நாடக இசையின் தொட்டிலான தென்னிந்தியாவில் அவர் செய்தவற்றை விட அயல் நாடுகளில் வாழும் அரைவேக்காடுகள் அளித்த பாராட்டுதல்கள் முக்கியமாவதன் காரணம் தமிழர்களது கொலனித்துவ முதுசமான தாழ்வு மனப்பான்மையல்லாமல் வேறென்னவாக இருக்கலாம்?

படிப்பின் மூலம் பெறப்பட்ட தகுதிகள் உண்மையில் வெளியே எது வித பெறுமதியுமற்றவை. குறிப்பிட்ட ஒரு துறைக்குள் ஒருவரது பட்டம் பதவிகள் அவரை வேலைக்கமர்த்தவோ அத்துறை தொடர்பாக அவரது கருத்தை வேறெவராவது நாடவோ உதவுகின்றன. ஒருவரது பட்டங்கள் எவ்வளவு உயரினவாயினும் அவை அவரது கருத்துக்களை உண்மையாக்கி விடப் போதாதவை. ஒரு குறிப்பிட்ட துறையில் ஒருவரது பங்களிப்பு அவருக்கு அத் துறையிலுள்ள ஆற்றலை வெளிப்படுத்துமளவுக்கு முக்கியமானது. ஆயினும் ஒவ்வொரு பங்களிப்பும் தன்னளவிலேயே மதிக்கப்படவேண்டும்.

ஒருவர் இலக்கியத்துறையிற் கலாநிதிப்பட்டமும் பேராசிரியர் பதவியும் பெற்றதால் அவர் இலக்கியவாதியாகி விடமாட்டார். அவருக்கு இலக்கியத்தின் பல்வேறு அம்சங்களுடனுள்ள பரிச்சயம் அவரது இலக்கிய ஆய்வுகட்குத் துணையாக நிற்கின்றன. தனது ஆற்றலை எவ்வாறு விருத்தி செய்து பயன்படுத்துகிறார் என்பது முக்கியமேயொழிய அவரது பட்டமும் பதவியுமல்ல. கலாநிதிப் பட்டம் பிரிட்டனில் இந்த நூற்றாண்டிலேயே அறிமுகமானது. நமக்கு இந்நூற்றாண்டின் இடைப் பகுதியிலேயே அது பரிச்சயமானது. இன்று நம் மத்தியிலே நிறையக் கலாநிதிகள் உள்ளனர். நிறையப் பேர் கலாநிதிகளாகப் பட்டம் பெறப் போகிறார்கள். இவர்களது பட்டங்கள் தனியே எவ்வகையிலும் இவர்களது பங்களிப்புக்கள் பட்டங்கள்

**ம.ப.பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருத்தலியல் விசாரணைகள்

# இது ஓர் மிரட்டல் உலகம்!

## மிஷெல் பூக்கோவிற்கு ஓர் அஞ்சலி

### எஸ்.கௌந்தி

(பூக்கோவிற்கான அஞ்சலியின் இலக்கு இவர் மீதான ஓர் விரிவான படத்தை உங்களுக்கு வழங்குவதல்ல. மாறாக, இவர் பற்றிய சில குறிப்புகளுடன், இவரது கருத்து மூலங்களுக்கு உடன்பாடாக உலகம் மீதான ஓர் பார்வையை வைப்பதேயாகும். மிஷெல் பூக்கோவினது (MICHEL FOUCAULT POITIERS 1926 –PARIS 1984)அறிவியக்கம் தூய்மை யானது, சத்தியமானது. எழுத்தின் சமூகப் பெறுமானத் திற்குச் சாட்சியம் சொல்வது. உபரி உற்பத்திகளையே (SURPRODUCTION) அறிவுக்கருவூலம் எனும் முலாம்பூசி நுகர்வுக்கு விடும் முதலாளித்துவ கலாசார புத்திஜீவிதப் பரம்பரைக்குள் பூக்கோவினது அறிவியக்கம் சமூகத்துடனை ஓர் அக்கறையான பிணைப்பை இனங்காட்டியது. தத்துவஞானியாகவும், சமூகவியல்வாதியாகவும், வரலாற்றாய்வாளராகவும் அறியபபட்ட இவரது எழுத்துகள் எதுவுமே தமிழில் இதுவரை மொழிபெயர்க்கப்படவில்ல என நான் கருதுகின்றேன்.

பிரான்ஸின் மிகப் பெரும் அறிவியக்க நிறுவனமான COLLEGE DE FRANCE இல் பேராசிரியர் நியமனம் பெற்ற பூக்கோ ஹோமோ செக்ஸுவல் ஆத வாழ்ந்ததை ஒருபோதுமே ஒழிக்கவில்லை. ஆனால் தனக்கு AIDS நோய் பீடித்ததை ஒழித்தேயிருந்தார். இவரது மரணத்தின் பின்னரேயே, இவருக்கு AIDS நோய் பீடித்த விஷயம் தெரியவந்தது. தமிழிலே பூக்கோவின் எழுத்துக்களை மொழி பெயர்க்கும் பணியில் புகலிடத்திலுள்ள ஒரு சிலர் தீவிரமாக இறங்குதல் பயனுள்ளது என்ற கருத்தை புகலிட வாசிப்பு சமூகத்தின் முன் வைக்கின்றேன்.

***

இது ஓர் மிரட்டல் உலகமென்பது எனது கண்டுபிடிப்பல்ல, ஆழமான அவதானிப்பின் அவசியத்தை வலியுறுத்திய உற்பத்திகள், ஓர் மிரட்டல் சமூகமே எமது வருங்கால சந்ததிக்குக் கையளிக்கப் பட்டுள்ளது என்பதைப் பிரகடனம் செய்யத் தயங்கவில்லை. பூக்கோ தனது "கண்காணித்தலும் தண்டித்தலும்: சிறைச்சாலையின் தோற்றம் "(SURVEILLER ET PUNIR: NAISSANCE DE LA PRISON) என்ற படைப்பில் எமது சமூகத்தை "ஓர் கண்காணிப்பு சமூகமாகப் பார்க்கின்றார். இவரது மரணத்தின் பின்னர் வெளியிடப்பட்ட "பாலியத்துவத்தின் வரலாறு" (HISTOIRE DE LA SEXUALITE, மூன்று பாகம், வெளியிடப்படுவதாக அறிவிக்கப்பட்ட நான்காவது பாகம் இன்னமும் வெளிவரவில்லை) இல், அகே சமூகத்தை "வக்கிர சமூகமாக "கவும் பார்க்கின்றார். அரசியல் கட்டுப்பாடுகள் தனிமனித சுதந்திரத்துக்கும், இதனது இருத்தலுக்கும் எவ்வளவு ஊறு விளைவிக்கின்றது என்பதை பூக்கோவின் அனைத்து எழுத்துகளிலும் காணலாம். சிறைச் சாலைகளும், மருத்துவமனைகளும் எவ்வளவு கொடுமையானவை என்பதை இவர் ஆழமான தரவுகளுடன் வலியுறுத்துகின்றார். "நோயாளிகள் வெளியேதான் உள்ளனர். மருத்துவமனைகளும் எவ்வளவு கொடுமையானவை என்பதை இவர் ஆழமான தரவுகளுடன் வலியுறுத்துகின்றார். "நோயாளிகள் வெளியேதான் உள்ளனர். மருத்துவ மனைகளுக்குள் இல்லை" என இவர் தனது "கிளினிக்குகளின் தோற்றம்" (NAISSANCE DE

30ம் பக்கம் பார்க்க..

**கல்வி...**

இல்லாதவர்களது பங்களிப்புக்களை விட முக்கியமானவையாக ஆக்கி விட மாட்டா. ஒருவரது ஆராய்வுக்கான பயிற்சிக்கும் மேற்படிப்பு தரும் அறிவுக்கும் ஒரு உள்ளார்ந்த பெறுமதி உள்ளது. அவர்கள் தமது ஆற்றல்களை எவ்வாறு விருத்தி செய்து நடைமுறைப் படுத்துகிறார்கள் என்பதே அப் பெறுமதியை ஸ்தூலமான பெறுமதியாக்குகிறது. கல்வியென்பது அறிவிற்கான மார்க்கங்களில் ஒன்றேயொழிய அறிவல்ல. அறிவென்பது விஷயங்கள் பற்றிய தகவல்களை மட்டுமே உள்ளடக்கும் வரை குறைபாடனதும் விளக்கமற்றதுமாகும். விஷயங்களைத் தொடர்புபடுத்தும் ஆற்றலும் அறிவை மேலும் விருத்தி செய்யும் திறமையும் ஞானம் தொடர்பானவை நாம் இவற்றுள் எதையுமே ஒருவருக்கு வழங்கப்படும் பட்டம் பதவிகளை மட்டுமே வைத்து மதிப்பிட முடியாது. நம் முன் வைக்கப்படும் விஷயங்களை அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடலே நாம் ஊக்குவிக்க வேண்டும். பட்டங்களையும் பதவிகளையும் பார்த்தும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களாலும் வழங்கப்படும் புகழுரைகள் எந்த ஒரு கலைஞனுக்கும் படைப்பாளிக்கும் நல்லவையல்ல. பொய்ப்புகழ்ச்சி கடுமையான கண்டனத்திலுந் தீயது. எந்தவொரு பங்களிப்பும் படைப்பும் ஆக்கபூர்வமான விமர்சனத்துக்கு உட்படுத்தப்படுவது அவற்றை அளித்தோரது தரத்தின் உயர்வுக்கு உதவும். பட்டமளிப்புக்களும் முகத்துதியான பாராட்டுரைகளும் சுய திருப்தியை விட வேறெதையும் ஏற்படுத்த மாட்டா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஏ.ஆர்.கே மார்க்கட்

## 31-35 ST.DENNIS DR
**(DON MILLS/EGLINTON)**
## (416) 421 3429

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
மரக்கறி வகைகள்,
கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள்
வாடகைக்குப் பெற...

**★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள், இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப் பொருட்கள்**

★ Frozen seafood

CD, Audio **மலிவு விற்பனையில்**

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

# A.R.K MARKET




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

LA CLINIQUE) இல் குறிப்பிடுகின்றூர். இதேவேளையில் "பைத்தியத்துவத்தின் வரலாறு காவியுலகில் (HISTOIRE DE LA FOLIE A L'AGE CLASSIQUE) இல், மன நோயாளிகளின் மீதான தீர்வு முறைகளின் கொடூரங்களை அம்பலப்படுத்தியுள்ளார்.

★ ★ ★

பூக்கோவினது எழுத்துகளில் அநேகமானவை எளிதாக வாசிக்கக் கூடியன. இவரது சில படைப்புகள் எளிதானவையல்ல, உதாரணத்துக்கு L'ARCHEO LOGIE DE SAVOIR" இனைக் குறிப்பிட லாம். பிரச்சனைகளின் மூலத்தின் மீதான பூக்கோவின் ஆழமான அவதானிப்பு முறையே, இவரை ஏனைய பேராசிரியர்களிலிருந்து வித்தியாசமடைவராகக் காட்டுகின்றது. COLLEGE DE FRANCE இல் பூக்கோ நியமனம் பெற்ற வேளையில் ஓர் சம்பிரதாய உரை செய்யுமாறு கேட்கப்பட்டார். இவர் அங்கு உரைமீது ஓர் உரை நிகழ்த்தினுர். "உரையின் ஒழுங்கு" ஊ L'ORDRE DU DISCOURS) என்ற தலைப்பில் இது நூல்வடிவம் பெற்றுள்ளது. தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்ட பேராசிரியர் பூக்கோ, சில ஆண்டுகளின் முன்னர் பிரெஞ்சு அரசு பல ஆபிரிக்க குடும்பங்களை அவர்களது விதிவிடங்களில் இருந்து வீதிக்கு அனுப்பிய வேளையில், அவர்கள் மீளவும் தமது வதிவிடங்களுக்கு செல்லும்வரை, தனது COLLEGE DE FRANCE காரியாலயத்தில் வாழவைத்தவர். பிரெஞ்சு அறிவியக்கத்துள் எழுத்தும் நடைமுறையும் ஒரே நேரத்தில் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதை நிருபித்த ஒரு சிலருள் மிஷெல் பூக்கோ ஜோன் சார்த்திர், ஆல்பேர் காமுயு போன்றோர் அடங்குவர்.

★ ★ ★

சிறைச்சாலைகளையும், உடல் ரீதியான தண்டனை முறைகளையும் அழித்து விட்டோம் எனப் பிரகடனம் செய்யும் எமது நூற்றுண்டு இவைகளை வேறு முறைகளில் நடைமுறைப்படுத்துகின்றது என பூக்கோ நம்புகின்றூர். சவுக்குகளும், சங்கிலிகளும், தூக்குமேடைகளும் தாம் தண்டனையின் வடிவங்கள் அல்ல. கண்காணிப்பு என்பது ஓர் நிரந்தர தண்டனையே, உலகின் மிகப்பெரும் ஜனநாயகம் தன்னிடம் உள்ளது எனக் கொக்கரிக்கும் அமெரிக்க மாநிலங்கள் பலவற்றிலே இன்னமும் "மரணம்" தண்டனையாக நடைமுறைப் படுத்தப்படுகின்றது. சில ஆண்டுகளின் முன்னர் சர்வதேச மன்னிப்பு சபை "மரண தண்டனை" மீது வெளியிட்ட ஓர் விஷேட வெளியீட்டை வாசித்தபோது நடுங்கினேன். அமெரிக்க மாநிலமொன்றில், மின்சாரக் கதிரையில் ஓர் கைதி இருத்தப்படுகின்றுன். மின்சாரம் பாய்ச்சப்படுகின்றது. அவன் துடிக்கின்றுன். இறக்கவில்லை. மீண்டும் பல தடவை "முயற்சி" செய்து அவன் கொல்லப்படுகின்றுன்.

★ ★ ★

வரலாற்று ரீதியாகப் பார்க்கையில், இருபதாம் நூற்றுண்டின் முன்னர் கைதிகள் மீது ஓர் தெரிவு இருந்தது. ஆனுல், இருபதாம் நூற்றுண்டிலோ, தெரிவிற்கோ இடமில்லாது, நாம் அனைவருமே கைதிகளாகவுள்ளோம். ஆயுதம் எங்களை அடக்குகின்றது. தொழில் நுட்ப சாதனங்கள் பல்வேறு கோணங்களில் எங்களது தனிப்பட்ட வாழ்வையும், சமூக வாழ்வையும் கண்காணிக்கின்ற மிகவும் சிறுபான்மையான நவபூர்ஜுவாக்களினது பாதுகாப்பிற்காக, மொத்த சமூகத்திற்கு அரசுகள் பதட்டைத்திணிக்கும் உலகை, மிரட்டல் உலகம் என்றே நான் கருதுகின்றேன்.

கண்காணிப்பினதும், மிரட்டலினதும் கொடுமையை புகலிடத்தில்தான் நான் முதல் தடவையாக உணர்ந்தேன். விசா இல்லாமல் ஓர் அந்நியனைப் பிடித்துவிட்டால் பொலிசாருக்குக் கொண்டாட்டம், அவனை ஓர் உண்மையான அகதியாக இருந்து. அவனது தேசத்துக்குத் துரத்தப்பட்டால், அவனது இருத்தல் கேள்விக்குறியாகிவிடும். அண்மையிலே, எனது பிரெஞ்சுச் சிநேகிதி என்னை எனது இல்லம் வரை காரில் அழைத்து வந்தபோது இல்லத்துக்கு அருகில் பொலீஸாரால் மறிக்கப்பட்டேன். அவள் பிரெஞ்சுக்காரியா என்ற சந்தேகம் பொலீஸாருக்கு வந்ததன் காரணம், நான் அவளோடு பிடிபட்டதுதான். எனது விசாவைப் பரிசோதித்த வேளையில் எல்லாமே சரியாக இருந்ததால் அவர்களுடைய முகம் வாடிவிட்டது. பொலீஸ் கண்காணிப்புகளினதும், பரிசோதனைகளதும் இலக்கு, பிடிபடும் மனிதன் சட்டரீதியாக ஒரு நிலத்தில் வாழுவதற்கான ஆவணங்களை கொண்டுள்ளானு என்பதுடன் சம்பந்தப்பட்டதல்ல, மாருக, இவனிடம் அவைகள் இருக்கக்கூடாது என்ற குரூர கனவுடன் சம்பந்தப்பட்டதாலே சிநேகிதியுடன் எனக்கேற்பட்ட அனுபவத்தை இங்கு வரைந்தேன்.

★ ★ ★

மிரட்டல், இருத்தலுக்கு எதிரானது. எல்லைகள் கண்காணிப்பினதும், மிரட்டல்களினதும் அடையாளங்களே. தேசியவாதங்களும், தேசம் பற்றிய அரசின் அக்கறைகளும் போலியானவை. ஓர் தெரிவு செய்யப்பட்ட சிறு சமூகத்தின் வாழ்விற்காகவும், வளத்திற்காகவும் மொத்த சமூகத்தைப் பலியாக்குவதற்கான ஏஜெண்டுகளாகவே அரசுகள் கடமையாற்றுகின்றன. இனிவரும் அத்தியாயங்களில் இவைபற்றி விரிவாகப் பார்ப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரபும் கவிதையும்

## விருத்தங்கள் பற்றி சில விளக்கங்கள்

வ.ந.கிரிதரன்

ஏற்கனவே தாயகத்தில் தொடராக வெளிவந்த கட்டுரைத் தொடரான 'மரபும் கவிதையில்' பா வகைகள் பற்றியெல்லாம் பற்றிய அடிப்படைத்தகவல்களைத் தந்திருக்கின்றேன். இம்முறை வாசகர் களின் நன்மை கருதி 'விருத்தங்கள்' பற்றி மேலும் சில தகவல்களைத் தரலாமென நினைக்கின்றேன் சங்ககாலத்தில் பாவைகள் நான்காயிருந்தன. வெண்பா, ஆசிரியப்பா, விருத்தப்பா, கலிப்பா என்பவையே அவை. இவை பின்னர் மேலும் பல பிரிவுகள் பெற்று வளர்ந்தன. அவை தாழிசை துறை, விருத்தம் என்பனவே, இவை இனங்கள் எனப்பட்டன. உதாரணமாக வெண்பாவை எடுத்துக் கொண்டால வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என மூன்று பிரிவுகள், ஆசிரியப் பாவிற்கு ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் என மூன்று பிரிவுகள். இது போலவே கலிப்பா, வஞ்சிப்பாவிற்கு மூன்று மூன்று பிரிவுகள்

'வெண்பா விருத்தம் துறையொரு தாழிசை<br>
என்றிம் முறையின் எண்ணிய மும்மையும்<br>
தத்தம் பெயரால் தழுவும் பெயரே'<br>
என்கின்றது 'காக்கை பாடினயம்'

'தாழிசை துறையே விருத்தம் என்றிவை<br>
பாவினம் பாவொரு பாற்பட்டியலும் என்கின்றது யாப்பருங்கலம். இவற்றில் விருத்தங்களைப் பற்றி இம்முறை சிறிது பார்ப்போம். விருத்தங்களில்வெளி விருத்தம் வஞ்சி விருத்தம், கலி விருத்தம், ஆசிரிய விருத்தம் என பல பிரிவுகள் இவற்றில் வெண்பாவிற்குரிய இனமான 'வெளிவிருத்தம்' பற்றி யாப்பருங்கலம் பின்வருமாறு கூறுகின்றது.

'நான்கு அடியானும்<br>
நடைபெற்று அடிதொறும்<br>
தான் தனிச்சொல் கொளின்<br>
வெளிவிருத்தம்மே'

நான்கு சீர்களைக் கொண்ட கான்கடிப் பாடலில் ஒவ்வொரு அடியிலும் மேலதிகமாக ஒரு 'தனிக்சொல்' இருந்தால் அத்தகைய பாடல் வெளிவிருத்தம்

நான்கு சீர்களைக் கொண்ட நான்குஅடிகளிருப்பின் அத்தகைய பாவினம் 'கலி விருத்தம்' மூன்று சீர்களைக் கொண்ட நான்கடி களையுடையது வஞ்சிவிருத்தம் ஆறு சீர்களை அல்லது அதற்கு மேற்படி சீர்களைக் கொண்ட 'கழி நெடிலடிகள் நான்கினைக் கொண்டது ஆசிரியவிருத்தம் ஆசிரிய விருத்தங்கள் ஆறுசீர் விருத்தம் எழுசீர், விருத்தம், என மேலும் பிரிவுகளைக் கொண்டது. ஐந்து சீர்களைக் கொண்ட நெடிலடிகள் நான்கினைக் கொண்ட பாவினம் கலித்துறை. கலித்துறையும் சில சமயங்களில் விருத்தமாகக் கூறப்படும் அப்பர் பாடிய கலித்துறைகள் 'திருவிருத்தம் என்ற பெயரிலும் வழங்கப்படுகிறது இதற்குச் சான்று.

விருத்தங்களைப் பொதுவாக மேலுமிரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். சந்தமுள்ள விருத்தங்கள் சந்தமற்ற விருத்தங்கள் இவ் விருத்தங்களைப் பற்றி பழைய இலக்கியங்களை ஆய்ந்து பெற்ற முடிவுகளிலிருந்து 'விருத்தப்பாவியல்' என்னுமொரு யாப்பியல் நூலையே படைத்திருக்கின்றூர் வீரபத்திர முதலியாரென்னும் ஒரு புலவர் (இந்நூல் 1885 ல் இந்நூல் வெளிவந்தது)

விருத்தங்களைப் பற்றிப் பார்ப்பதற்கு முன்னல் ஓசையைப் பற்றிச் சிறிது பார்ப்போம். பாக்களிற்கு ஓசை மிகமிக முக்கியம். விருத்தங்கள் கேட்பதற்கு இனிமையாகவிருப்பதற்கு முக்கிய காரணங்களிலொன்று அவற்றின் ஓசை நயம். ஒரே வகையான சீர்களைக் கொண்டு பல்வேறுவகையான ஓசைகளை வெளிப்படுத்தலாம். உதாரணமாக தேமா என்ற வகையான சீரை எடுத்துக் கொள்வோம். தேமா என்பது நேர் நேர் என்னும் அசைகளிரண்டு இணைந்து உருவானதொரு சீர் 'ஆமா' எண்பது தேமா வகையான சீர்தான், 'ஆமாம்' என்பதும் தேமா வகையான சீர்தான். 'வாழ்ந்தோம்' என்பதும் தேமா வகைச் சீர்தான் இவையெல்லாம் ஒரேவகையான சீர்களாயிருந்த போதும்ஓசையைப் பொறுத்தவரையில் வேறுவேறு னவை. விருத்தங்களை எழுதும் போது இதனை முக்கியமாகக் கருதவேண்டும.

ஆறு சீர் விருத்தமொன்றில் ஒரு அரையடியில்விளம், மா, தேமா என்ற அமைப்புடைய சீர்கள் வந்தால், ஏனைய அரையடிகளிலும் அவ்விதமான விளம், மா, தேமா என்ற வகையான சீர்களே வரவேண்டும். மாறி வந்தால அதன் ஓசை நயம் சிதைந்து விடும் அதேசமயம் விருத்தமொன்றின் முதற்சீர் 'ஆமா' என்ற 'தேமா'ச் சீராகயிருப்பின், அடுத்த அடியின் முதற் சீரும் அவ்விதமாகத் தானிருக்கவேண்டும் தேமாச்சீர் தானே 'யென்று' 'வாழ்ந்தோம்' என்ற வகையில் சீர் இருக்கக்கூடாது. அப்படியிருப்பின் விருத்த யாப்பு சிதைந்து விடும். ஏற்கனவே விருத்தங்கள் சந்தமற்றவை சந்தமுள்ளவை என பிரிவுபடும் எனக் கூறியிருந்தோம் முதலில் சந்தமற்றவை பற்றிப் பார்ப்போம்.

### சந்தமற்றவிருத்தங்கள்

1. ஒவ்வொரு அரையடியிலும் விளம், மா, தேமா என்ற வகையில் எடுத்துக் கொண்டால்)
2. ஓர் அடியில், முதல் நான்கு சீர்கள் காயாகவும், அடுத்தது மாச்சீராகவும் (தேமா அல்லது புளிமா) அடுத்த சீர் தேமா வாகவும் வரும் அறு சீர் விருத்தங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. ஒவ்வொரு அரையடியும் இரு மாச்சீர்களும் தொடர்ந்து ஒரு காய்ச் சீரும் வரும் வகையிலான அறுசீர் ஆசிரிய விருத்தங்கள்.

4. ஒவ்வொருடியிலும் ஆறு மாச்சீர்கள் வரும் அறுசீர் விருத்தங்கள்

5. ஓரடியில் இறுதி அசை குறிலாகக் கொண்ட மாச்சீர் ஒன்று தொடர்ந்து கூவிளச்சீர் ஒன்று, விளச்சீர் (கூவிளம் அல்லது கருவிளம்) மூன்று மாங்காய்ச்சீர் ஒன்று ஆக வரும் அறு சீர் விருத்தங்கள்.

6. ஓரடியில் முதல் ஐந்து சீர்களும் மாச்சீர்களாகவும் இறுதிச் சீர் மாங்காய்ச் சீராகவும் வரும் அறுசீர் விருத்தங்கள்.

இப்படியெல்லாம் பிரித்துக் கொள்ளலாம் இது போல் ஏனைய விருத்த வகைகளிலும் இது போன்ற ஒழுங்குதனைக் கண்டு கொள்ளலாம். உதாரணத்திற்கு பாரதியின் விருத்தமொன்றைப் பார்ப்போம் இது ஓர் அறுசீர் விருத்தம்.

சுடரே போற்றி கணத்தேவர்
துரையே போற்றி எனக் கென்றும்
இடரே யின்றிக் காத்திடுவாய்
எண்ணுயிரங்கால் முறையிட்டேன்
படர்வான் வெளியிற் பலகோடி
கோடி கோடிப் பலகோடி
இடரா தோடு மண்டலங்கள்
இசைத்தாய் வாழி இறையவனே.

இதன் சீரமைதி வருமாறு.

புளிமா தேமா புளிமாங்காய்
புளிமா தேமா புளிமாங்காய்
புளிமா தேமா கூவிளங்காய்
தேமா புளிமா புளிமாங்காய்
புளிமா புளிமா புளி மாங்காய்
தேமா தேமா தே மாங்காய்
புளிமா தேமா கூ விளங்காய்
புளிமா தேமா கரு விளங்காய்

இதன் ஒவ்வொரு அரையடியினை எடுத்துப் பார்த்தாலும் மாச்சீர்கள் இரண்டும் காய்ச்சீர் ஒன்றும் இருப்பதைக் காணலாம். (மேலுள்ள பாடல் ஆறு சீர்களைக் கொண்ட நான்கு அடிகளையுடைய அறுசீர் ஆசிரியவிருத்தம் இடவசதிக்காக ஒவ்வொரு அடியும் மூன்று மூன்று சீர்களாக, எட்டு வரிகளில் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு வரியும் அரையடியே) படர்வான் என்பது புளிமாச்சீராகயிருப்பினும் சுடரே இடரே போன்ற புளிமாச் சீரிலிருந்து சிறிது வேறுபட்டுள்ளது. இதனால் விருத்தயாப்பின் ஒன்சருயம் சிறிது குறைந்துள்ளது கவனத்திற்குரியது.

மீதி அடுத்த வாரம்..

---

**உண்மையை...**

விடயங்கள் வெளிவந்தது தான் காரணம் என்கின்றனர் சிலர். லூான் இண்டர்நாஷனல் மோதல் எதிரொலி என்கின்றது இன்னொரு வட்டாரம்.

ஆனால் திலகர் ஈழநாடு என்றதும் வரிந்து கட்டிக் கொண்டு அறிக்கை விடுவதன் காரணம் என்ன? அதிலும் புலிகளுக்கு எதிரானவர்கள் தான் இத்தாக்குதலைச் செய்தார்கள் என்ற தோரணையில் அறிக்கை போகிறது.. அத்துடன் லூான் இணடாநாஷனல தாககுதலும் இவ்வாறானது தான் என்கிறார். அந்த லூான் புலிகளின் பினாமி நிறுவனம் என்றால்.. ஈழநாடும் அப்படியானதோ? இதுவரையும் புலிகளால்தான் பத்திரிகைகளுக்கு தொல்லை வந்தது. இப்போது... நிலைமை மாறி விட்டது.

ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது. புலிகளின் அராஜகத்திற்கு எங்கேயும் இனிமேல் எல்லோரும் தலை வணங்கிக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பது தான். இதனால் தான் புலிகளின் பொறுப்பாளர் மீது தாக்குதல் நடந்திருக்கிறது. ஆனால் ஈழநாடு ஒன்றும் மாத்தயா பற்றி பாரதூரமாக எழுதவில்லையே..

தலையாடா விட்டாலும் ஆடுகின்ற வால் போல 'சென்ற கிழமை பேப்பரை இந்தக் கிழமை வெட்டி ஒட்டுவதன் மூலம், எந்தச் செய்தியையும் முந்தித் தருகின்ற' பத்திரிகை மாத்தயா அணி என்ற பெயரில் இந்திய, இலங்கை அரசின் கைக்கூலிகள் வெளிநாடுகளில் தமிழீழ மக்களின் புரட்சிகரத் தலைவரான பிரபாகரனுக்கு எதிராக தீவிர பிரசாரம் செய்வதாகவும் இக்கைக்கூலிகளால் தான் ஈழநாடு தலைமையகம் குண்டுவீச்சுக்கு இலக்காகியதாகவும் பிரதம ஆசிரியர் கொலை மிரட்டலுக்குள்ளானார் என்றும் கூறியுள்ளது. முன்பக்கத்தில் தீக்கிரை என்றிருக்கிறது. பின்பக்கத்தில் குண்டுவீச்சு என்கிறது. 'எந்தச் செய்தியையும் முந்தித் தருவது இப்படித்தான்'.

நடுநிலைப் பத்திரிகை மீது தாக்குதல் நடத்தினால் அது புலிகளுக்கு எதிரான கைக்கூலிகளின் நடவடிக்கையாக எப்படி இருக்க முடியும்? ஒன்றில் பத்திரிகை புலிகளுக்கு ஆதரவானதாக இருக்க வேண்டும். அல்லாவிட்டால் தாக்கியவர்கள் புலிகளின் பாரிஸ் அலுவலகத்தை தாக்கியிருப்பார்களே!

தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வரும் போது தானே தெரிகிறது. இத்தனை மிரட்டல்கள் மற்ற பத்திரிகைகளுக்கு வரும்போது இந்த ஜனநாயக வேட்கை எங்கே போயிற்றோ?

எல்லாமே இப்படித்தான்.. 'செய்திகளை முந்தித் தருவதற்காக' சிந்தியாமல் எழுதுவது.. மாத்தயா விடயத்திலும் இதுதான். ஈழநாட்டு விடயத்திலும் இதுதான்.

ஏசுவார்கள், எரிப்பார்கள்! (இருந்தாலும்) உண்மையை எழுதுங்கள்! உண்மையாய் எழுதுங்கள்! என்று தான் யோகர் சுவாமிகள் சொன்னார்கள். அன்றைய ஈழநாட்டிற்கு இது பொருந்தும். எரித்த பின்பும் ஈழநாடு துணிந்து எழுதியது. சுவாமிகள் இன்றிருந்தால் இப்படிச் சொல்லியிருப்பாரோ என்னவோ? உண்மையை எழுதுங்கள்! உண்மையாய் எழுதுங்கள்! (இல்லாவிட்டால்) ஏசுவார்கள்! எரிப்பார்கள்! என்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தமிழிசைக் கலாமன்றம்..**

மாணவியர், தமது திறமையை அன்று அந்த அரங்கத்தில் காட்டினர் அவற்றில் புல்லாங்குழல், வீணை, வயலின் சேர்ந்த வாத்தியவிருந்து அருமையானது. பெற்ருேர் சார்பில் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.. எங்கட பிள்ளையள எங்கட பிள்ளையளா வளர்க்கவென்று இங்குள்ள பெற்ருேர் படும் பாடு தெரிந்ததே அதற்கு ஒரு வாய்ப்பு பிள்ளைகளை ஏதாவது ஒரு இசைத்துறையில் பயிற்றுவிப்பதே. உண்மைதான் மேற்கத்திய இசையில், ஆங்கிலப்பாட்டில் உள்ள hot feelings இந்த சாஸ்திரிய இசையைக் கேட்கையில் வருதில்லை. அமைதியான சாந்தமான ஒரு உணர்வே மனதில் நிறைந்திருப்பதை நம்மால் உணரமுடியும்.

சித்திபெற்ற ஒரு மாணவி பேசும்போது தனது இங்கிலாந்து அவுஸ்திரேலிய உறவினருடன் அண்மையில் பேசும்போது இந்த இசைப்பரீட்சைபற்றிக் குறிப்பிட அவர்கள் ஆச்சரியப்பட்டதாகச் சொன்ஞர். உண்மைதான் இலங்கையில் எம்மால் அணுக முடியாத அல்லது கிடைக்காமலிருநத இந்த இசைத்துறைகள் இங்கு கனடாவில் கிடைத்துள்ளமை இங்குள்ள வருங்காலத்தினரிற்கு ஒரு அரிய சந்தர்ப்பம். ஆனல் சில பிரச்சனைகளுமுண்டு ஒரு ஆசிரியை கூறியதுபோல, இங்குள்ள மாணவர்களுக்குத் தமிழில் வாசிப்பது சிரமாயுள்ளதால் பாடப்புத்தகங்களை ஆங்கிலத்தில் அச்சிட வேண்டுமன்பதே. இதுபற்றித் தமிழிசைக் கலாமன்றத்துடன் பேசியபோது அவர்கள் அதற்குரிய ஒழுங்குகள் செய்துள்ளாயும், விரைவில் புத்தகங்கள் இந்தியாவிலிருந்து வரவுள்ளதாயும் குறிப்பிட்டனர்.

இம்முறை 1ம், 2ம் தரங்களுக்கான இசைப் பரீட்சையே நடந்ததாயும் அடுத்தமுறை 3ம் தரத்திற்கும் பரீட்சை நடக்குமென்றும் தமிழிசைக் கலாமன்றத்தினர் தெரிவித்தனர். அதோடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ம் திகதி நடைபெறவுள்ள இசை நிகழ்ச்சியில் பங்கு கொள்ளவிரும்பும் சிருர்கள் தமது ஆசிரியர் மூலமாகத் தமிழிசைக் கலாமன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர்.

இசையால் வசமாகத் இதயங்களில்லை என்பதுடன் இசையை அனுபவிக்க மொழி தேவையில்லையென்பதும் உண்மையான வார்த்தைகள் இதயமில்லாத தாவரங்களும் இசையால் வளர்கின்றன என்பது விஞ்ஞானபூர்வமான உண்மை. தறிகெட்டு, புதிய கலாச்சாரத்தில் அடிபட்டுக்கொண்டிருக்கும் இன்றைய சிருர்களுக்கு மனதை நல்வழிப்படுத்தும், தெய்வீக உணர்வைத்தூண்டும் இந்த சாஸ்திரிய இசையில் ஆர்வமூட்டச் செய்வது ஒவ்வொரு பெற்ருேரின் கடமை.

இதன்மூலம் உங்கள் பிள்ளைகள் ஒரு இசையைப் பயில்வதுடன் எதிர்காலத்தில் ஒரு "கிறடிட்" பெறவும் வாய்ப்புண்டு. அதோடு கட்டுப்பாடு, கீழ்ப்படிவு சகமாணவர்களுடனுன நல்லுறவு போன்றவற்றையும் அவர்கள் தாமாகவே பெறுகிருர்கள். இந்தத் தமிழிசைக்கலாமன்றம் வளர உங்கள் ஆதரவ ,தேவை. இந்த மன்றத்தில் அங்கத்தவராதலின் மூலம் உங்கள் குழந்தைகளுக்கான ஒரு நல்ல முயற்சியில கால்வைக்கும் சந்தர்ப்பமுண்டு. அன்றைய நிகழ்ச்சியில் எந்தவொரு கூச்சலோ, குழப்பமோ இல்லாமல் மிக மிக அமைதியாக நடைபெற்றமையே இதற்குச்சான்று.

இன்னெரு செய்தி, தமிழிசைக் கலாமன்றத்தின் 3வது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிறு 23ம்திகதி பிற்பகல் அஜின்கோட் கல்லூரியின் அறை இலக்கம் 124ல் நடைபெறவுள்ளது. இதில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்படவுள்ளது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உங்கள் ஆலோசனைகளைத் தெரிவிக்க இது ஒருவாய்ப்பாகும். இந்தவாய்ப்பை பயன்படுத்துவது எமது ஒவ்வொருவரின் கடமையுமாகும். எதிர்காலத்தில் கனடாவிலும் ஒரு இசைக்கல்லூரி உருவாக இந்தத் தமிழிசைக்கலாமன்றம் இப்போதே அத்திவாரமிட்டு வருவதை உணரமுடிந்தது.

**நிலா குகதாசன்**


# வெளிவந்து விட்டது

## வ.ந.கிரிதரனின்

# எழுக அதிமானுடா!

## கவிதைத் தொகுதி

## தமிழ் வியாபார நிலையங்களில் கிடைக்கும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உண்மையை எழுதுங்கள்!
# உண்மையாய் எழுதுங்கள்!
# இல்லாவிட்டால்
# ஏசுவார்கள்! எரிப்பார்கள்!

**அறுஞர் பேராசிரியர் கலாநிதி கியூறியஸ் ஜி**

கடுமையான புலி எதிர்ப்பாளர் ஒருவர் யாழ்ப்பாணம் போயிருக்கிறார், அவர் அங்கு போய் நிலைமையைப் பார்த்த போது வெளிநாடுகளில் சொல்வது போல அங்கு நிலைமை இல்லை என்றும் கனடாவில் மட்டும் தான் புலிகளுக்கு எதிரான பிரசாரம் நடக்கிறது என்றும் இங்குள்ளவர்கள் அங்கு போய் வந்தால் என்ன என்றும் ஒரு பத்திரிகையில் எழுதியிருந்தது. யானை பார்த்த குருடர்கள் கதை மாதிரித் தான்... குருடர்கள் யானையைத் தடவிப் பார்த்துவிட்டு ஒருவன் யானை மரம் மாதிரி என்றான்.. காலைப் பிடித்ததால்! இன்னொருவன் யானை கயிறு மாதிரி என்றான், வாலைப் பிடித்ததால்! இன்னொருவன் யானை குடம் மாதிரி என்றானும், எதைப் பிடித்திருப்பானோ?

★ ★ ★

அங்கிருந்து வந்து கொழும்புக்கு வந்து செல்லும் பலர் சொல்வதை ஆதாரம் காட்ட என்றால் முடியும்.. . எப்ப இந்த சனியன்கள் துலையிருங்களோ என்று அங்கலாய்த்துக் கொள்பவர்களைத் தெரியும். உறவினர்களைப் புலிகள் கொன்றதன் பின்னால் மௌனமாய் அழுபவர்களைத் தெரியும். உறவினர்களை அங்கே புலிகள் விட மறுப்பதால் இங்கே அழுபவர்களையும் தெரியும். போனவருக்குப் பிரச்சனை இல்லை. ஏன் கியூறியஸ்க்கு கூட அங்கே இருக்கும் புலிகளால் தொல்லை வந்ததில்லை. அதற்காக முழுத்தமிழர்களுக்குமே தொல்லை இல்லையா?

புலிகளிற்கு எதிரான பிரசாரம் என்று குமுறுகிறார்கள். சரியப்பா! முன்பு மாத்தயா பிரபாகரன் மோதல் என்றுதாயகம் செய்தி வெளியிட்ட போது பொய் என்றது நீங்கள் தானே. இப்போது மட்டும் தலையங்கத்தில் மாத்தயாவின் மரண தண்டனை பற்றி போடும் போது புத்தி எங்கே போயிற்று? முன்பு மறைத்ததை இப்போது வெளியிடுகிறார்கள். கிட்டுவுக்கு கால் போய் ஆறேழு வருடங்களின் பின் தானே இப்போது மாத்தயாவின் தொடர்பு பற்றி செய்தி வருகிறது. முன்பு அதைச் சொன்ன போது பிரசாரம் என்றால், இப்போது?

அப்பனே, உலகம் உன்னளவில் சிறியது அல்ல.

★ ★ ★

சமீபத்தில் தாயகம் சென்று திரும்பிய ஒருவர் தான் தாண்டிக்குளத்தில் வைத்து புலிகளின் அலுவலகத்தில் நமது ‘தாயகத்தை கண்டதாக கூறியிருந்தார். இதன் பின்னர் இங்கே தாயகம் வாசித்தறியாத ஒருவர் ஈழம் சென்றார். தாண்டிக்குளத்தில் வைத்து எல்லைக்காவலர்கள் கேட்டார்களாம்.. நீ தாயகம் வாசிக்கறனியா? என்று. இவர் வாசித்ததேயில்லை. ‘ஏன் அவங்கள் எங்களுக்கு எதிராக இப்படி எழுதுறாங்கள்? அவங்களுக்கு நாங்கள் என்ன செய்தனாங்கள்?’ என்றார்களாம். நல்ல கேள்வி. நல்ல விசயம்.. நீங்கள் தாயகம் வாசிக்கிறீர்கள். கொஞ்சக் காலத்தில் உங்கள் சிந்தனைப் போக்கு மாறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன. தொடர்ந்தும் வாசியுங்கள்.

தாயகத்திற்கு பிரேமதாச காசு கொடுக்கிறார் என்றார்கள். இதனால் தான் பிரேமதாசவுக்கு புலிகள் குண்டு வைத்தார்களோ என்னவோ? தாயகம் தமிழ் மக்களுக்கு எதிரானது என்றார்கள். தாயகத்தை முளையில் கிள்ள எத்தனை முயற்சிகள்.. தாயகம் புலிகளுக்கோ, தமிழர்களுக்கோ எதிரானதல்ல. புலித்தனத்துக்கு எதிரானது. அடாவடித்தனம், அராஜகம் யாரிடமிருந்து வந்தாலும் அது கண்டனத்திற்குரியது. அங்கேயிருக்கும் புலிகளை விட இங்கேயிருக்கும் புள்ளிகள் தான் தாயகத்தை கடுமையாக எதிர்க்கிறார்கள். காரணம், தங்கள் அடாவடித்தனங்கள் வெளிவருவதால்.. எனவே தாண்டிக்குள வாசகர்களே, மாத்தயா, கிட்டு போன்றோரின் அபிமானத்தைப் பெற்ற தாயகத்தை வாசித்து ‘உண்மையைத் தேடுங்கள்’. கண்டடைவீர்கள்.

★ ★ ★

தாயகத்தை வாசிக்க மாட்டோம் என்று இங்குள்ள புலி ஆதரவாளர்களில் பலர் விரதம் பிடித்திருப்பது தெரியும். ஆனால் பத்திரிகை வந்ததும் உடனடியாக வாங்கி தாங்களும் வாசித்து, அனுப்பவேண்டிய இடங்களுக்கும் அனுப்புவதை நித்திய கடமையாகக் கொண்டிருக்கின்றனர் இங்கே சிலர். சில புலி ஆதரவாளர்கள் இரகசியமாகவே வாசிப்பதும் உண்டு. புலிகளின் ஆதரவாளர்கள் பலர் உவங்கள் பொய் எழுதுறாங்கள் என்று கூறிக் கொள்வதுண்டு. ஆனால் தாயகம் என்ன சொல்கிறது என்று அறிவதில் அவர்களுக்கு




**அறு(சு)வை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறையவே அக்கறை உண்டு. ஆனல் பயம் இருக்கிறது, உவங்கள் எங்கட மனதையும் மாத்திப் போடுவாங்களோ என்று. இதனல் தான் பலர் வாசிப்பதில்லே, வாசிப்பதாக வெளியில் காட்டுவதில்லே.

இதைவிட சத்தம் போடுபவர்கள் இன்னெரு கூட்டம். இவர்கள் கேள்விச் செவியர்கள். இவர்கள் தாயகம் மட்டுமல்ல, உலகத்தமிழரும் வாசிப்பதில்லே. யாராவது தாயகம் இப்படி எழுதிப் போட்டுது என்ருல், அண்ணே, அட்ரசைச் சொல்லுங்கோ என்கின்ற ரகம். இப்படியான கேள்விச் செவியர்கள் பற்றி ஒரு உண்மைக் கதையே உண்டு..

ஒரு எழுத்தாளர் எழுதியது பற்றி புலி ஆதரவாளர்களுக்கு சந்தேகம். ஒருவர் இன்னெரு வரிடம் கேட்டாராம்... என்ன உவன், எங்களைப் பற்றி எழுதுருன், உவருக்கு ரெண்டு போட்டால் தான் சரி என்று. மற்றவர் சொன்னராம், டேய் மடையா, அவன் எங்கட ஆள், எங்களுக்கு ஆதரவாத் தானே எழுதுருன் என்று. மற்றவர் சொன்னராம், ஆ(ங்), அப்படி யெண்டால் சரி... என்று.

இதுதான் இந்த ரகம். யாராவது சொல்வதைக் கேட்டு துள்ளிக் குதிக்கும் கூட்டம்.

★ ★ ★

தாயகத்தின் வாசகர்களில் கிட்டு தொடக்கம் புலிகளின் தலைமையில் பலர் உள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தில் கூட தாயகம் சர்ச்சைக்குரிய ஒன்ருக பலராலும் வாசிக்கப்படுவது. எனக்கு ஒரு சந்தேகம்... கிட்டுவின் கருத்துக் களில் ஏற்பட்ட மாற்றமும் மாத்தயாவின் போக்கில் ஏற்பட்ட மாற்றமும் தாயகத்தை வாசித்ததன் பாதிப்பால் ஏற்பட்டதாக இருக்குமோ என்னவோ?

கிட்டு தாயகத்தின் பரம வாசகர். தாயகத்தை தடை செய்து கலகத்தமிழர்கள் கோளாறு பண்ண முற்பட்ட போது அவர்களை அடக்கியது கிட்டு. தாயகத்தின் குறும்புத்தனமான பக்கங்கள் முதல் சீரியஸான அரசியல் கட்டுரைகள் வரை ஆழமாக வாசித்தவர் கிட்டு. 'தமிழ் கூறு நல்லுலகில்' அதிகாரத்திலிருப்பவனுக்கும் ஆயுதம்வைத்திருப்பவனுக்கும் அடி பணியாமலும் பந்தம் பிடிக்காமலும் இருக்கின்ற ஒரே பத்திரிகை தாயகம் என்பதால் இது ஒரு வித்தியாசமான பத்திரிகை என்பது கிட்டுவுக்கு தெரிந்திருக்கும். கிட்டு கூட ஈழமுரசு பத்திரிகையை தனது பொறுப்பில் வைத்து அட்டகாசம் செய்தவர் தான். முன்பக்கத்தில் கிட்டுவின் படத்தையும் பின்புறத்தில் ஒரு மூலேயில் பிரபாகரன் பற்றியும் செய்தி போட்டவர். இப்படியானவர் ஒருவருக்கு புலிகளின் மிரட்டல்களுக்கும் பணியாமல் பத்திரிகை ஒன்று துணிச்சலாக வெளிவருகின்றது என்பது ஜனநாயகத்தின் பண்புகளில் அடிப்படையானது என்றே தெரிந்திருக்கும். இதனல் தான் கிட்டு இறுதிக் காலத்தில் அரசியல் தீர்வு ஒன்று தான் தமிழர் பிரச்சனேக்கான தீர்வு என்று கூறி, அதை தலைமை யார் சொன்னலும் ஏற்காது, அதைச் சொல்லக் கூடிய 'கனிவும் துணிவும்' தன்னிடம் இருக்கிறது என்று சென்ருர். இறுதியில் மறைந்து போனர்.

மாத்தயா கூட தாயகத்தின் வாசகர் தான். இங்கிருந்து சென்ற புலி ஆதரவாளர் ஒருவர் மாத்தயாவிடம் 'உவையைக் கவனிக்க அனுமதி' வேண்டி நின்ற போது, பேசாமல் 'உங்கட அலுவலைக் கவனியுங்கோ' என்று வாங்கிக் கட்டிக் கொண்டதாகவும் தகவல். மாத்தயா கூட இறுதிக் கட்டங்களில் போருக்கு தயக்கம் காட்டி, பேச்சுவார்த்தை, அரசியல் என்று முனைந்து நின்றது தெரிந்ததே. பாவம் மாத்தயா, 'கனிவும் துணிவும்' இல்லாததால் இன்றைய நிலேயில் இப்படியாக... மாத்தயாவின் குற்றப் பத்திரிகையில் 'தாயகத்தை தடை செய்வதற்கு தடையாக நின்ருர், தாயகத்தோடு சேர்ந்து சதி செய்தார்' என்று வராதவரைக்கும் நல்லது. மாத்தயாவின் மனமாற்றத்துக்கும் தாயகத்தை வாசித்தது தான் காரணமாயி ருக்குமோ என்னவோ?

யாழ். பல்கலைக்கழகத்திலும் தாயகம் ஒரு விவாதத்திற்குரிய விடயமாக வைக்கப்பட்டு கடுமையாக வாசிக்கப்படுவதாக அங்கு இன்றும் கற்பிக்கும் ஒருவர் தெரிவித்திருந்தார். அதை விட ஒரு தடவை தங்களுக்கு தாயகம் அனுப்பி வைக்கும்படி கோரி ஒரு வாசகர் வட்டம் கூட தாயகத்திற்கு இரு தடவைகள் கடிதம் போட்டிருந்தது. மொத்தத்தில் தாயகம் அங்கே கருத்துக்கெடுக்கப படுகிறது.

மற்ற முத்த முத்தமிழ் ஏடுகள், அனுபவம் வாய்ந்த பத்திரிகை யாளர்களால் நடத்தப்படுகின்ற பத்திரிகைகளுக்கு ஏன் முக்கியத்துவம் கிடைப்பதில்லே? மற்றவையை கனடாவிலிருந்து எடுப்பதிலும் பார்க்க, வீரகேசரி அவர்களுக்கு விரைவாக கிடைக்குமே! மற்றது, கருத்துக்கள் என்று சொல்வது தாயகம் மட்டும் தான். மற்றவர்கள்? வால் பிடித்தல்!

★ ★ ★

தந்திரமாக யாரால் பலன் கிடைக்குமோ, அவர்களின் வாலேப் பிடித்தல். தற்போது புலிகளின் 'உள்ரகசியங்களை'(?) தெரிந்த 'பத்திரிகையாளர்' ஒருவர் பல விடயங்களை வெளியில் கொண்டு வருகிருர். பதினைந்து வருடங்களுக்கு முன்பே தலைவர் சோசலிசக் கருத்துக்கள் தமிழ் ஈழ மக்களின் சமூக, கலாசாரத்துக்கு ஏற்ற முறையில் அறிமுகப படுத்தப்பட வேண்டும், மண்ணுடன் ஒட்டாத அந்நியக் கருத்துக்களாக, வரட்டு வேதாந்தங்களாக கடைப்பிடிக்கப்படக் கூடாது என்று கூறினர் என்று செய்தி வருகிறது. (ஈழம் ஒரு தொடர்கதையாளர் கவனிக்க!)

புலிகளின் உள்விடயம் பற்றி இவ்வளவு விபரம் தெரிந்தவர்கள் கூறும் போது நம்பத்தானே வேண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்கிறீர்களா? ஒரு விடயம்... அந்தப் பத்திரிகையில் உளவுத்துறை புகழ் பொட்டம்மான் கிட்டு பற்றி எழுதிய கட்டுரையில் 'கிட்டண்ணை சர்வதேச தொடர்பாளராக நாட்டை விட்டு புறப்படுவது என்பது முடிவு செய்யப்பட்டு விட்டது... 'எங்கட சனத்தையும் இந்த மண்ணையும் விட்டுட்டுப்போறன் மச்சான், இனி எந்தக் காலமோ?' சொல்லி முடிக்காமல் குமுறிக் குமுறி அழத் தொடங்கினார்' என்று கூறியிருக்கிறார். இது புலிகள் சொன்னது.

ஆனால் இந்த பத்திரிகையாளர் அதே பத்திரிகையில் சொல்கிறார் 'குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட காலுக்கு செயற்கைக்கால் பொருத்தவே விசா எடுத்து வந்த கிட்டு பின்னர் அரசியல் அடைக்கலம் கோரினார்' என்று. இப்போது புரிகிறதா? புலிகள் சொல்கிறார்கள் சர்வதேச தொடர்பாளராகத் தான் கிட்டு வந்தார் என்று. இவர் சொல்கிறார், இல்லை, மருத்துவ சிகிச்சைக்காகத் தான் என்று. சொல்கின்ற விடயங்கள் எல்லாம் இப்படியானவை தானே?

★ ★ ★

பொட்டம்மானின் கட்டுரையில் அடையாளம் தெரியாத எதிரியால் கிட்டுவுக்கு கிரனெட்டு எறிந்தாராம்.. ஆகா.. எதிரியை அடையாளம் தெரியாமல் தானா 'கந்தன் கருணையில்' அருணா படுகொலை செய்தார். இப்போது மாத்தயாவை குற்றம் சாட்டுவதும் அந்த ரகம் தானா?

★ ★ ★

கிட்டு இன்னமும் உயிரோடு இருக்கிறார் என்ற கதைகளும் உள்ளன. புலி ஆதரவாளர்கள் சிலர் கூட இதை நம்புகிறார்கள். இந்தியா கிட்டுவை மறைத்து வைத்துக்கொண்டு, மாத்தயாவைக் கைக்குள் போட்டு பிரபாகரனை முடித்த பின்னர் கிட்டுவை வெளியில் கொண்டு வர முயற்சிக்கிறது என்று நம்புபவர்களும் இருக்கிறார்கள். கிட்டுவின் மரணம் மர்மமானது தான். சுபாஸ் சந்திரபோஸ் கூட விமான விபத்தில் மரணமாகவில்லை, வருவார் என்று நீண்ட காலம் நம்பினர். எல்விஸ் போல கிட்டு பற்றியும் வதந்திகள். கிட்டு உயிரோடிருப்பாரானால் அது மகிழ்ச்சிக்குரியதே. கிட்டம்மாவின் அழுகை இப்போதும் கண்முன் நிற்கிறது.

★ ★ ★

தற்செயலாக கிட்டு வெளியே வந்தாலும் இன்றைய புலி ஆதரவாளர்கள் என்ன செய்வார்கள்? இந்தியாவுடன் சேர்ந்து சதி செய்த கிட்டுவுக்கு மரண தண்டனை என்பார்களா? கிட்டு கொண்டு சென்ற சமாதானத் திட்ட விடயங்கள் எல்லாம் புலிகளுக்கும் தெரியும். இருந்தாலும் கிட்டு இறந்த பின்னர் இந்த சமாதானத்திட்டமும் இறந்து விட்டது. ஏன் புலிகள் அதற்கான முயற்சிகளில் திலகரைக் கொண்டு இறங்கவில்லை?

★ ★ ★

திலகர் என்றதும் ஞாபகம் வருகிறது ஈழநாடு எரிப்பு சம்பவம். ஈழநாட்டை எரித்தது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். ஆனால் எரிப்பு பற்றிய விசாரணைகள் தொடங்க முன்பே தீர்ப்பளித்துவிட்ட திலகரை என்ன என்பது? மாத்தயா பற்றி விசாரிக்க முன்பே எல்லாப் பத்திரிகைகளும் அவருக்கு மரண தண்டனை கொடுத்த மாதிரி... பாருங்கள்.. இப்போது மாத்தயாவுக்கு மரண தண்டனை என்றதும் ஆமா.. ஆமா என்கிற கூட்டம் நாளை புலிகள் மன்னிப்பளித்தாலும் ஆமா.. ஆமா என்று சொல்லி தலைவரின் புத்திசாதுரியத்தை மெச்சாமலா விடப் போகின்றன..

ஈழநாடு எரிக்கப்பட்டதற்கு ஏதோ ஜனநாயகம் அழிந்துவிட்ட மாதிரி திலகர் குரல் கொடுக்க காரணம் என்ன? எரித்தவர்கள் யார் என்பது சரியாகத் தெரியாது. இதற்குள் பல ஊகங்கள்.. பங்காளிச் சண்டை காரணம் என்கின்றன சில பாரிஸ் வட்டாரங்கள் மாத்தயா பற்றிய

33ம் பக்கம் பார்க்க..

*This newspaper is published by*
***Georgicka communications.***
*A member of Ethnic Press Council Of Canada.*

*Editor: George R.Ckrhushchev*

*P.O.Box 1031, Station "F", Toronto, Ont, M4Y 2T7.*

*Tel: (416) 920 9081*
*Fax: 963 5738*
**E mail:71650.3216 @Compuserve.com**

**இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.**
**ஆசிரியர்;**
**ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்**

*உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.*

*ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*

## *தாயகம் சந்தா விபரம்*

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets

★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

## ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

www.tamilarangam.net


# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

# மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

# SIVA'S TRADING CO LTD

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

# P.S.S.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

Video Transfer (Any system) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்